# ஆரியச் சுரண்டல்

**சிற்பி இராசன்**

வெளியீடு:
**கருந்திணை**
1/810 முத்தமிழ் நகர்
அடியனூத்து - அஞ்சல்
திண்டுக்கல் - 624 003

**நூல் கிடைக்குமிடம்**

**நன்கொடை : 50.00**

விமர்சனங்களை அனுப்ப - karunthinai@gmail.com

www.karunthinai.org

பதிப்பு ஆண்டு : 2010 டிசம்பர் 24



# என்னுரை

எனது முதல் நூலான நாம் அறிந்தவை தான் - ஆனால் நாம் சிந்திக்காதவை என்ற நூலுக்கு - அதனைப் படித்த அறிஞர் பெரு மக்களும், எழுத்தாளர்களும் எழுதிய கடிதங்களும் பாராட்டுகளும் எனக்கு உற்சாகமளித்து இரண்டாவது நூலான புராணங்களா? புளுகு மூட்டைகளா? என்கிற இந்நூலை எழுத ஊக்க மளித்துள்ளது.

முதல் நூலைப் படித்த பலர் மூடப் பழக்க வழக்கங் களிலிருந்து விடுபட்டு, என்னிடம் நேரில்வந்து, கடவுளின் பெய ரால், பக்தியின் பெயரால் - வீண் கற்பனையினால் தாங்கள் ஏமாந்து போனதையும், கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் தாங்கள் அறியாம லேயே மூட நம்பிக்கைகளினால் செலவாகிப் போனதையும், அவற்றால் இதுவரை எந்த ஒரு பலனும் இல்லை என்பதை உணர்ந்து இனிமேல் மனிதனாக வாழ்வோம் என்று சொன்ன போது என் முதல் நூலின் நோக்கம் நிறைவேறியதாகவே எண்ணி மகிழ்ந்தேன்.

இந்த நூலில் புராணங்களின் பெயரால் நாம் எப்படி யெல்லாம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். இப்பொழுதும் ஏமாந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கூற முற்பட்டுள்ளேன்.

நமக்குத் தெரிந்த உண்மைகளை, நல்ல கருத்துக்களை எல்லா மக்களுக்கும் எடுத்துச் சொல்வதை ஒரு கடமையாகக் கொண்டு எல்லோரும் பணி செய்தால், வீழ்ந்த உழைப்பாளிகளின் வாழ்வு மேலோங்கும் என்பதில் ஐயமில்லை!

இதைத் தான் கவிஞர் கல்யாணசுந்தரம் அவர்கள்

ஏற்றத்தாழ்வும் ஏமாற்றும்
இவ்வுலகில் இருப்பது தான்
இத்தனைக்கும் காரணமாம் கண்ணம்மா இதை
எல்லோர்க்கும் நீ எடுத்துச் சொல்லம்மா

என்று எழுதியிருக்கிறார்கள்..

எல்லா புராணங்களையும் ஆராய்ந்து எழுதுவதென்றால் ஆயுட்காலம் முழுவதும் செலவிட்டால் கூட போதாது.

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல, இந்நூலில் சிவபெருமானின் பெருமையைச் சொல்லும் அருணாசல புராணமும், விஷ்ணு கருடனிடம் சொன்னதாக சித்தரிக்கப் பட்டுள்ள கருட புராணமும் மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.

தந்தை பெரியார்தான் சொன்னார்...

வைத்தியன் சாகும் வரை விட மாட்டான். பார்ப்பானோ செத்தாலும் விடமாட்டான் - கருமாதி, திவசம் என்று எதையாவது சொல்லி செத்தவன் பெயரைச் சொல்லி பணம், உணவுப் பொருட்கள், துணி மணிகளைப் பிடுங்குவான் என்று.

இந்த கருடபுராணம் முழுவதும் இறந்தவனுக்கு கருமாதி திவசம் கொடுக்கும் முறைகளைப் பற்றியே விளக்குகிறது.

பாமர மக்களை பயமுறுத்தி அவர்களிடம் இருக்கும் செல்வங்களை கொள்ளை அடிப்பதற்காக எழுதப்பட்ட இந்த புத்தகத்தில் சொன்னதையே பல இடங்களில் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டிருக்கிறது!

காரணம், ஏதாவது ஒரு பக்கமாவது கண்ணில் பட்டால் போதும் - என்பதற்காகவே இந்தப் புத்தகத்தை எழுதியவர் - துர்காதாஸ் எஸ்.கே.சாமி (ஸ்வாமி) 1968 முதல் தொடங்கி 1997 வரை பல பதிப்புகளை பிரேமா பிரசுரம் என்ற நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர்.

**என்னை சட்டப்படி இந்து என்று சொல்லுவதனாலும், இந்து மத தர்மப்படி நான் ஒரு சூத்திரன் (வைப்பாட்டி மகன்) என்பதனாலும் மலத்தை மிதித்தால் கூட அந்த இடத்தை மட்டும் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு இந்துவாகிய எங்களைத் தொட்டால் உடல் முழுவதும் குளித்து கழுவிச் சுத்தம் செய்யும் இந்து மதத் தலைவனாம் சங்கராச்சாரி போன்றவர்களுக்காகவும் இந்த நூலை எழுதுகிறேன் .**

என்னை எந்த ஒரு இஸ்லாமியரோ, கிருத்துவரோ சூத்திரன் என்று சொல்லுவதில்லை என்னைத் தொடுகிறார்கள் - தொட்டதற் காகக்குளிப்பதில்லை என்னுடன் உணவருந்துகிறார்கள் தீட்டாவ தில்லை.



எனவே, என்னுடன் நண்பர்களாவும் என்னை மனிதனாக வும் மதிக்கும் மற்ற மதத்துக்காரர்களின் புராணங்களைப் பற்றி நான் எழுதத் தேவையில்லை.

என் வீட்டில் உள்ள குப்பைகளை எடுத்து எறிகிறேன். அவர்கள் தேவைப்பட்டால் செய்து கொள்வார்கள்.

# கருட புராணம்

**அருந்தவர்**

முனிவர்கள் அனைவரும் சூத புராணிகளுக்கு அஞ்சலி செய்து, சூதமா முனிவரே, தங்களிடமிருந்து சைவ, வைணவப் புராணங்களைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம்.

பிரம்மனைக் குறித்த புராணங்களை சூத்திரகுண புராணங்கள் என்றும், சிவனைக் குறித்த புராணங்களை தாமஸகுண புராணங்கள் என்றும், ஸ்ரீ விஷ்ணு புராணம் ஒன்றையே உயர்ந்த குணம் படைத்த புராணமாகவும் கருதியிருக்கிறோம்.

ஆகவே விஷ்ணு பற்றிய உயர்ந்த ஒரு புராணத்தை தாங்கள் சொன்னால் கேட்க ஆவலாய் இருக்கிறோம் என்று கூறினார்கள்.



அதற்கு சூதமா முனிவர் இந்த சின்ன முனிவர்களைப் பார்த்து முனிவர்களே, தேவதேவனும், சர்வாந்தர்யாமியும், படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முப்பெரும் தொழில்களை விளையாட்டாகவே செய்பவனும் புருஷோத்தமனுமாகிய ஸ்ரீமத் நாராயணனை அவனது வாகனமான கருட பகவான் உலக நன்மை



வேண்டி ஒரு கேள்வியைக் கேட்டான் - அதை அப்படியே கூறுகி றேன் என்று சூதக முனிவர் சொல்லத் தொடங்குவதாக இந்நூலை ஆராய்ந்த துர்காதாஸ் தொடங்குகிறார்.

**நமது சிந்தனை**

முன்னுக்குப் பின் முரணானதே புராணங்கள்! இதற்கு எடுத்துக் காட்டாக

ஒரு ஆண் உடலிலிருந்து உண்டாகிய ஒரு சக்தி, மூன்று பகுதிகளாகப் பிரிந்து அதில் லெட்சுமி, சரஸ்வதி, காளி என்கிற பெண்கள் உண்டானார்கள் என்று மலம் தின்னும் பன்றி புராணத்தில் (வராக புராணம்) சொல்லப்பட்டிருக்கிறது!

அதற்கு நேர்மாறாக, பிரம்மா, விஷ்ணு, சிவன் உண்டானார்கள் என்று மார்க்கண்ட புராணத்தில் உள்ளது!

சிவனுடைய இடது பக்கத்தில் விஷ்ணுவும் லட்சுமியும், வலது பக்கத்தில் பிரம்மாவும் சரஸ்வதியும் உண்டானார்கள் என்று ஆண்குறி புராணத்தில் (லிங்க புராணம்) சொல்லப்படுகிறது!

நாராயணனுடைய வலது பாகத்தில் பிரம்மாவும், இடது பாகத்தில் விஷ்ணுவும் நடு பாகத்தில் சிவனும் உண்டானார்கள் என நாரத புராணத்தில் உள்ளது!

இதில் எது உண்மை?

எது தெரியுமா உண்மை? எதுவுமே உண்மையில்லை என்பது தான் உண்மை!

இதை நீங்கள் உணர வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கம்.

உண்மைக்கு ஒரே வழிதான் இருக்கும் பொய்க்கு பல வழி கள்! ஒரு கருத்திற்கு பல கதைகளைச் சொன்னால் அது பொய்தான் என்பது எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இனி செத்துப் போன எலி, மீன், கோழிக் குஞ்சு போன்றவை களைத் தின்னும் கருடன் எனப்படும் கழுகின் சந்தேகத்தை சர்வ வல்லமை படைத்த விஷ்ணு எப்படித் தீர்த்து வைக்கிறான் பாருங்கள்!

இந்த கருட புராணம் என்னும் நூல் ஒருவர் இறந்த பிறகு கருமாதி, திவசம், ஏன் செய்ய வேண்டும்? செய்தால் என்ன நன்மை? செய்யாமல் போனால் என்னென்ன கேடுகள் வரும் என்பதையே வலியுறுத்துகிறது.

திவசம் கருமாதி செய்து வயிற்றுப் பிழைப்பை நடத்தும் பார்ப்பனர்கள் இந்தப் புத்தகத்தை வாங்கி பைண்டிங் செய்து வைத்திருப்பார்கள்.

கொழுத்த பணக்காரர்கள் வீட்டிலோ ஏழை மக்களை சுரண்டிப் பிழைக்கும் வியாபாரிகள் வீட்டிலோ யாராவது இறந்து விட்டால், சாவுக்கு வராத பார்ப்பான், இறந்த 10 நாட்களுக்குள் அவர்களின் வீட்டிற்கு வந்து, துக்கம் விசாரித்து விட்டு, நைஸாக கவலைப் படாதே, உன் தகப்பனார் பூலோகத்தில் இருந்தபோது நல்ல காரியங்கள் பல செய்திருக்கிறார். கோவில் கும்பாபிஷேகம், பிராமணர்களுக்கு போஜனம், பசுமாடு, பூமி துணிமணிகள் (வஸ்திர தானம்) ஹோமங்கள் என பல காரியங்களைச் செய்திருக்கிறார்.

ஆகவே கண்டிப்பாக அவருக்கு சொர்க்க லோகம்தான் கிடைக்கும் என்று சூதகமாகச் சொல்லி, நீ ஓய்வாக இருக்கும் போது இந்த நூலைப்படி என்று கருட புராணத்தைக் கொடுத்துவிட்டுப் போவான்.

காரணம் என்னவென்றால், நீயும் உயிரோடு இருக்கும் போதே - இந்நூலில் உள்ளது போல பார்ப்பானுக்கு தானங்களைக் கொடுத்து விடு! இல்லையேல் உனக்கு நரகம் தான் என்று சொல்லி ஜாடையாக பயமுறுத்தி வைக்கத்தான்.

கருமாதிக்கோ, திவசத்திற்கோ போனால் அரிசி, காய்கறி, பருப்பு மற்றும் மளிகை சாமான்கள், பசுமாடு கன்றுடன், துணிமணிகள் பணம் என்று சுமார் ரூ.2000/- முதல் ரூ.10,000/- வரை சுருட்டி வந்து விடுவான்... ஆண்டுதோறும்.

நன்றாக யோசித்துப் பாருங்கள் - ஒரு வீடு கட்டும் தொழிலாளி காலை 9.00 மணிக்கு வேலைக்கு வருகிறார் - மாலை 7.00 மணி வரையிலும் கடுமையாக உழைத்து, நாம் வசிப்பதற்கு அழகான வீடு கட்டித் தருகிறார்.

நாம் அவருக்கு அதிக பட்சம் ரூ.300/- கொடுக்கிறோம்.



அதாவது - 10 மணி நேரத்திற்கு ரூ.300/- ஒரு மணி நேர கூலி ரூ.30/- மட்டுமே.

ஆனால் அந்த வீடு கட்டி முடித்தவுடன் கிரகப் பிரவேசம் என்ற பெயரில் பார்ப்பான் வருகிறான்.

வீடுகட்டப் பயன்படுத்திய சவுக்கு மூங்கில் போன்ற பயனுள்ள மரங்களை வீட்டிற்கு பின்புறம் போட்டு, எதற்கும் உதவாத இரண்டு நாட்களில் அழுகிப் போகும் தன்மையுடைய வாழை மரத்தை கொண்டு வந்து வீட்டின் முன் கட்டி வைத்து தொழுவத்தில் கட்டவேண்டிய ஐந்தறிவுள்ள மாட்டை வீட்டிற்குள் இழுத்து வந்து - மாடு அந்த இடத்தை அசுத்தப்படுத்தி - பார்ப்பான் நமக்குப் புரியாத மொழியில் எதை எதையோ உளறி முன் சொன்னது போல தேங்காய் முதல் பணம் வரை ரூ.3,000/- கொள்ளையடிக் கிறான்.

இவ்வளவு வேலையும் சுமார் ஒரு மணி நேரத்தில் முடித்து விடுவான்.

கொத்தனாருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.30/- இவனுக்கு ரூ.3,000/-

இவன்களுக்கு ஒரே ஒரு செங்கல்லை எடுத்து வைத்து மட்டம் பார்க்கத் தெரியுமா?

எலக்ட்ரீசியன் வேலை ஏதாவது தெரியுமா? மர வேலை, வண்ணம் பூசுதல் என அந்த வீடு சம்பந்தப்பட்ட வேலை ஏதாவது தெரியுமா?

மந்திரத்தால் அறையைச் சற்று அகலப்படுத்த முடியுமா?

முகூர்த்தநேரம் என்று $1^{1}/_{2}$ மணி நேரம் எழுதிக் கொடுப்பான். 15 நிமிடங்களில் 4 தர்ப்பை புல்லைக் கொண்டு வேலையை முடித்துக் கொள்வான் எனவேதான் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்று சொல்லி வைத்தார்கள்

சாதியின் பெயரால் மீசையை முறுக்கும் வீரர்கள் தர்ப்பப் புல்லைக் கண்டதும் வளைந்து வணங்குவதைக் காண்கிறோம்.

நம் மக்களுக்கு 10ரூபாய் கூலி அதிகமாகக் கொடுத்து விட்டால் - மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.

ஆனால் பார்ப்பனர்களோ பொருளாதாரத்திலும் கெட்டிக்காரர்கள்.

தட்சணை என்ற பெயரில் ஏதோ ஒரு தொகையை வாங்கிக் கொள்வதோடு வாழத் தேவையான உணவுப் பொருட்கள், துணி மணிகள் என்று கறந்து விடுவார்கள்.

இதனால் அவர்களுக்கு விலைவாசி உயர்வதால் எந்தக் கவலையும் கிடையாது. காரணம் பொருளாகவே கிடைத்து விடுவதால் விலையைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை!

ஒரு பார்ப்பான் ஒரு மாதத்தில் சுமார் 30 கரும காரியங்கள் - சுப காரியங்கள் செய்தால் 30 வேட்டிகள் அதற்குண்டான மற்ற பொருட்கள் கிடைத்து விடுகிறது. தேவைக்கு அதிகமாகக் கிடைப்பதால், அந்தத் துணிகளை அப்படியே மடிப்பு கலையாமல், நமது அரசியல்வாதிகள் தங்களுக்கு வரும் பொன்னாடைகளை திரும்ப விற்று விடுவது போல பார்ப்பானும் தனக்கு கிடைக்கும் வேட்டி, அங்கவஸ்திரம், பித்தளை சொம்பு, பாத்திரம் முதலியவை களை விற்று காசாக்கி விடுவான்.

கிரகப் பிரவேசத்திற்கு வந்து மந்திரம் சொல்லும் பார்ப்பான் நாம் வீடு கட்ட கடன் வேண்டி அலையும் பொழுதோ - அல்லது செங்கல், மணல், சிமெண்ட் என்று அலையும் பொழுதோ- இவன் மந்திரத்தால் அவைகளை வரவழைத்துக் கொடுத்தால் நாமும் மந்திரம் உண்மையென்று ஏற்றுக் கொள்ளலாம்.

எங்கள் ஊரில் ஒரு மந்திரவாதி இருந்தான். அவன் மாலையில் 5 மணிக்கெல்லாம் விபூதி பட்டை சகிதம் உத்திராட்சம் அணிந்து பக்தனைப் போல வேடமணிந்து குறி சொல்ல வந்து அமர்ந்து விடுவார்

பார்ப்பனார்கள் எப்படி தர்ப்பைப் புல்லைக் கொண்டு ஏமாற்றுகிறார்களோ அதே போல இந்த சூத்திர மந்திரவாதி வேப்பிலையை கையில் வைத்துக் கொண்டு ஏமாற்றுவாள்.

தன்னிடம் வரும் ஏமாளி பக்தர்களின் மேல் வேப்பிலை யால் அடித்து, இனி உனக்கு காத்து, கருப்பு அண்டாது - எல்லா கஷ்டங்களும் தொலைந்து போகும் என்றெல்லாம் பொய் சொல்லி ஐந்தோ, பத்தோ கறந்து விடுவார்.



இவனுடைய அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்று எண்ணிய நானும் எனது நண்பர்களும், நல்ல கூட்டமாக இருக்கும் வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு அவரிடம் போனோம்.

கேட்ட வரம் தருவதாகச் சொன்ன பூசாரியிடம் நான் பக்தனைப் போலச் சென்று வீடு கட்ட சொசைட்டியில் ரூ.50,000/- கடன் வாங்கியிருந்தேன். கடனைத் திருப்பி அடைக்க முடிய வில்லை. உங்கள் மந்திரத்தால் இதற்கு ஏதாவது ஒரு வழி செய்யுங்கள் என்று வேண்டினேன்.

என் நண்பர்களும் இதே போல ஆளுக்கொரு காரணத்தைச் சொன்னார்கள்.

அதில் ஒரு நண்பர் ஒசாமா எங்கிருக்கிறார் என்று சொல்லுங்கள். ஜார்ஜ் புஷ்ஷிடம் 50 கோடி கிடைக்கும் எனக் கூறினார்.

உடனே அந்த மந்திரவாதிக்கு கடுங்கோபம் வந்தது. ஆத்தாவிடம் வந்து விளையாடாதீர்கள். நான் இப்போது ஆத்தாவாக இருக்கிறேன் என்று கர்ஜித்தார்.

உடனே நான், நீங்கள் ஆத்தாவாக இருப்பது உண்மையானால் ஏன் உங்கள் இயற்கையான ஆண் குரலில் பேசுகிறீர்கள்? உங்கள் ஆத்தாவின் குரலிலேயே பேச வேண்டியது தானே என்றேன்.

திணறிப் போன பூசாரி அன்றைய பூசையை அத்துடன் முடித்துக் கொண்டார்.

அங்கு நின்றிருந்தவர்களில் படித்தவர்கள் மந்திரவாதியின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு எங்களைப் பாராட்டிச் சென்றனர்.

படிக்காத கிராமத்து மக்களோ பூசாரி எங்களுக்கு சூனியம் வைத்து விடுவார் என்று பயந்தனர். இந்தப் பயம்தான் பார்ப் பானுக்கும், பூசாரிக்கும் உழைக்காமல் பிழைக்க வழி வகை செய்கிறது! ஏமாறுகிறவர்கள் உள்ளவரை ஏமாற்றுவோரும் இருப்பார்கள் தானே! சரி நாம் கருட புராணத்திற்கு வருவோம்.

## கருட புராணம் – பக்கம் – 8

*பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடன் விஷ்ணுவை நோக்கி,*

- *உலகத்தில் ஜீவர்கள் ஏன் பிறக்கிறார்கள்? அவர்கள் இறந்த பிறகு என்ன காரணத்தால் சொர்க்க, நரகங்களை அடைகிறார்கள்?*
- *எந்தப் பாபத்தால் அவர்கள் இறந்த பிறகு பிரேத ஜென்மத்தை அடைகிறார்கள்?*
- *எந்தப் புண்ணியத்தைச் செய்தால் பிரேத ஜென்மம் நீங்கும்?*
- *எந்த கர்மத்தால் ஸ்ரீ வைகுண்டத்தை அடையலாம்?*
- *முன்பு செய்த பாபங்களை மரண காலத்தில் நீக்கி, நல்ல வைகுண்டத்தை அடைய என்ன வழி?*
- *இறக்கும்போது யாரை நினைத்தால் நற்கதி கிட்டும்?*

*இவற்றையெல்லாம் அடியேனுக்கு கூறுங்கள் என்றதாம்!*

*ஸ்ரீமத் நாராயணமூர்த்தியானவரும், எல்லார் மனதிலும் புகுந்து, அனைத்தையும் பார்க்க வல்லவரும் - எல்லா செயல் களுக்கும் காரணமானவருமான ஸ்ரீஹரி பகவான் புன்னகையுடன் கருடனைப் பார்த்து கூறலானார்!*

### நமது சிந்தனை

*எல்லார் மனதிலும் புகுந்து அனைத்தையும் பார்க்க வல்ல இந்த ஹரி ஏன் சங்கராச்சாரி மனதில் புகுந்து சங்கரராமனை கொலை செய்யாமல் காப்பாற்றவில்லை?*

*எல்லா செயல்களுக்கும் ஹரிதான் காரணமாம் - சங்கர ராமன் கொலைக்கும் ஹரிதான் காரணமா?*

*மேலும் நாட்டில் நடக்கும் அத்தனை அயோக்கியத் தனங்களுக்கும் விஷ்ணுதான் காரணமா?*

*30,000 கோடி ரூபாய்க்கு போலிப் பத்திரம் அச்சடித்தது, கற்பழிப்பு, கொலை, கொள்ளை, சுனாமி, பன்றிக்காய்ச்சல், இன்ன பிற இழிச் செயல்களுக்கும் இந்த ஹரிதான் காரணமா?*

*அவ்வாறு அவன்தான் காரணமென்பது உண்மையானால் அவனை எப்படி கருணைக் கடல் என்றும், அன்பின் வடிவம் என்றும் நம்மையெல்லாம் காப்பாற்றுவார் என்பதையும் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?*

*போய் தொலையட்டும்! கருடனிடம் என்னென்ன புளுகுறான் என்று பார்ப்போம்.*

*விஷ்ணு, எலியைத் தின்னும் கருடனைப் பார்த்து சொல்லு கிறானாம் கேளுங்கள்...*

## கருட புராணம்– பக்கம்–10

*பறவைகளுக்கு அரசே உலகில் 84 லட்சம் யோனி பேதங்கள் (பெண்குறி பேதங்கள்) உள்ளன.*

- *அவை அண்டசம், உற்பிசம், சராயுசம், சுவேதசம் என நான்கு வகையாக இருக்கிறது.*
- *அந்த 4 வகையில் அண்டசம் என்ற வகையிலிருந்து முட்டையிலிருந்து பிறக்கும் 21 லட்சம் பறவை இனங்கள் தோன்றின.*
- *சராயுசம் எனப்படும் கருப்பையிலிருந்து பிறக்கும் மனிதர்களை ஒத்த ஜீவராசிகள் 21 லட்சம் உண்டாயின!*
- *உற்பிசம் எனப்படும் மண்ணிலிருந்து தோன்றக் கூடிய மரம் செடி, புல், பூண்டு வகைகள் தோன்றின. அவைகளும் 21 லட்சம்.*
- *சுவேதசம் எனப்படும் வேர்வையிலிருந்து தோன்றக் கூடிய கொசு முதலான ஜீவராசிகள் 21 லட்சம் தோன்றின!*

*இந்த நான்கு வகையான பிறப்புகளில் மனிதப் பிறவியே சிறப்புடையது.*

*அந்த மானிடப் பிறவியில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரன் என்னும் நான்கு வகை உள்ளது.*

**ஆடைகளை வெளுக்கும் வண்ணான், தோல் தைப்பவன், நாட்டியம் ஆடுபவர், ஓடம் செலுத்துவோர், கம்மாளர், நுளைஞரும் வேடரும் ஆகிய இவர்கள் சூத்திர ஜாதியை விட கீழானவர்கள்.**

(பக்கம் 10 - கருட புராணம்)

*மேலும் விஷ்ணு கருடனிடம் சொல்கிறான்; சில தேசங்களில் மனிதர்கள் ஒரே காலுடன் இருக்கிறார்கள், சில தேசங்களில் இரண்டு கால்களுடன் இருக்கிறார்கள், சில தேசங்களில் அநேக கால்களுடன் இருக்கிறார்கள்!*

*கருப்பு மான்கள் வசிக்கும் பூமியே புண்ணிய பூமி ஆகும்! அங்கு இறந்தவர்களை பூஜிப்பவர்களுக்கு நன்மைகள் உண்டாகும்! முப்பத்து முக்கோடி தேவர்களும் அங்கு தயாராக இருப்பார்கள்.*

*கருடனே! பூத, பிரேத, பைசாச சாதியில் ஆவி உருவம் மட்டுமே உண்டு!*

*அவற்றில் தேகம் பெற்ற ஜீவிகள் சிறப்புடையவர்கள்.*

*அந்தப் பிறவிகளில் பசு, பறவைகளாக சிறிது அறிவோடு ஜீவிக்கும் அறிவைக் கொண்டிருப்பது சிறப்புடையதாகிறது.*

*அவற்றை விட மனிதர்கள் சிறப்புடையவர்கள்.*

**கருட புராணம்– பக்கம் –11**

*அந்த மனிதர்களில் பிராமணர்கள் மிகவும் சிறப்புடையவர்கள்! அந்த பிராமணர்களில் வேதம் படித்தவர்கள் மிகமிக சிறப்புடையவர்கள்!*

*கருடா! சொர்க்க, நரகங்களை அடைய மானிடப் பிறவியே காரணமாக இருக்கிறது.*

*அந்த மானிடப் பிறவியில் நல்லவைகளைச் செய்து மோட்சத்திற்குப் போவோரை விட கெட்ட காரியங்களைச் செய்து நரகத்திற்குப் போவோரே அதிகமாக உள்ளனர். இவ்வாறு தீமைகளைச் செய்வதற்கு ஆசையே காரணம்! பேராசையின் காரணமாக சுயநல வாதியாகிறான்.*



**நமது சிந்தனை**

*ஆசையே துன்பத்திற்குக் காரணம் - உருவ வழிபாட்டினால் எந்த ஒரு பலனும் இல்லை - பொய் சொல்லி பாமர மக்களை ஏமாற்றக் கூடாது - நமக்கு அப்பாற்பட்ட சக்தி என்று ஒன்று கிடையாது என்று சொன்ன பவுத்தர்களைக் கொன்றதே ஆதி சங்கராச்சாரிதான்.*

*பக்கம் 8 இல் என்ன சொல்கிறான். அனைத்துச் செயல்களுக்கும் ஹரிதான் காரணமென்கிறான்.*

*உலகத்தில் 84 லட்சம் உயிரினங்களை 4 வகையாகப் பிரித்து விட்டான்.*

*வகை ஒன்றுக்கு 21 லட்சம் வீதம்! எந்த வாகனத்தில் உலகம் முழுவதும் சுற்றி வந்தானாம்? பெட்ரோலா? அல்லது டீசலா?*

*மேலும் சொல்லுவதைப் பாருங்கள் . ஆடைகளை வெளுப்பவர்கள், மரம், இரும்பு, தங்கம் முதலியவைகளைக் கொண்டு மக்களுக்கு பயன்தரும் சாதனங்களைச் செய்யும் கம்மாளரும், நாட்டியம் ஆடுபவரும் (பத்மா சுப்ரமணியம் போல) ஆகிய இவர்கள் சூத்திரர்களை விடக் கீழ்சாதிக்காரர்களாம்.*

*நாட்டில் வாழும் மக்களுக்குத் தேவைப்படும் தொழில்களைச் செய்பவர்கள் கீழ் சாதிக்காரர்களாம். அந்த கீழ் சாதிக்காரர்களுக்கு எந்த ஒரு பயனுள்ள செயலையும் செய்யாமல் ஏமாற்றி பிழைப்பு நடத்தும் வேதம் படித்த பார்ப்பனர்கள் மிகவும் சிறப்புடைய சாதியினராம். இதுவே அர்த்தமுள்ள இந்து மதம்!*

*மீண்டும் கருட புராணம்:-*

**கருட புராணம் – பக்கம்–15**

*இவ்வாறு பேராசையின் காரணமாக சம்பாதித்த சொத்துக்கள் அவன் இறக்கும் போது எதையும் கொண்டு போவதில்லை!*

*அவன் செய்த பாப, புண்ணியங்களே அவனுடன் செல்லும்!*

*எனக்கு பக்தனாகி தொண்டு புரியும் பிராமணனுக்கு எந்தப் பொருள் கொடுக்கப்படவில்லையோ - அந்த பொருள் அதை உடையவனுக்கு சொந்தமானதல்ல!*

(எப்படியெல்லாம் பயமுறுத்துகிறான் பாருங்கள்)

உலோபியிடம் இருக்கும் செல்வம் ஐயகோ! நாம் நல்ல அந்தணர்களிடம் தானமாகக் கொடுக்கப்படவில்லையே!

தீர்த்த யாத்திரைகளுக்கும், ஸ்தல யாத்திரைகளுக்கும் பயன்படவில்லையே. இதையெல்லாம் அறியாமல் இந்த உலோபி நம்மை வைத்திருக்கிறானே! இவன் இறந்த பிறகு நாம் எவன் கையில் அகப்படுவோமோ? எவன் நம்மை விலைமாதர்களிடம் கொடுத்து விடுவானோ? என்றெல்லாம் செல்வங்கள் கதறுமாம்.

**நமது சிந்தனை**

அயோக்கியத்தனத்திற்கு அளவே இல்லை! எப்படியெல் லாம் நம்மை பயமுறுத்தி நம் முன்னோர்கள் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்துள்ள செல்வங்களை எல்லாம் மந்திரத்தின் பெயரால் உழைக்காமல் சுருட்டிக் கொள்ள வழி வகுத்துள்ளான் பாருங்கள்!

பாமர மக்களை ஏமாற்றி அநியாயமாக பொருள் ஈட்டும் வியாபாரிகள் இது போன்ற நூல்களைப் படித்துவிட்டுத்தான் இன்று வரை திவசம், கருமாதி செய்யும் பார்ப்பனர்களிடம் அள்ளிக் கொடுத்து விட்டு, அவன்களை கவலையில்லாமல் வாழ வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் விஷ்ணு சொல்லுகிறான்;

தான் வாழும் காலத்தில், பிராமணர்களுக்கு தான தர்மங்கள் செய்தவனே அடுத்த பிறவியில் பாக்யவானாகிறான் .

அப்படியே அடுத்த பிறவியிலும் தான தர்மங்கள் செய்தால் அதற்கு அடுத்த பிறவியில் பெரிய செல்வந்தனாக ஆகிறான்.

எவன் ஒருவன் பக்தி இல்லாமல் தான தர்மங்கள் செய்தாலும் அதைச் செய்த பலன் அவனுக்கு கிடைக்காது!

**நமது சிந்தனை**

தந்தை பெரியார்தான் சொன்னார்கள்,

பக்தி வந்தால் புத்தி போகும் புத்தி வந்தால் பக்தி போகும்.. என்று. அன்பு என்பது வேறு. பக்தி என்பது நம் மூளையில் போடப்



பட்ட விலங்கு பக்தியினால் புத்தி எப்படிப் போகிறது என்பதை கவனியுங்கள்.

நாம் புதிதாக வீடு கட்டும்போது கொத்தனார் ஒரு செங்கல்லை எடுத்து இரண்டாக உடைக்கிறார். காரணம் அந்த இடத்தில் முழுக்கல்லை வைக்க முடியாது. பாதி கல்லைத்தான் வைக்க முடியும்.

வீடு கட்டும் உரிமையாளர் ரூ.3/- பெறுமானமுள்ள செங்கல்லை உடைத்த உடன் தனது செல்வம் எல்லாம் அழிந்து விட்டது போல கூச்சலிடுகிறார். அதே போல கொஞ்சம் சிமெண்ட் கலவை கீழே சிந்தினாலும் கோபப்படுகிறார்.

அதே ஆசாமி வீடு கட்டி முடித்தவுடன் கிரகப் பிரவேசம் என்ற பெயரில் ஒரு பார்ப்பானை அழைத்து வருகிறான். வந்த பார்ப்பான் ரூ.500/- மதிப்புள்ள நெய்யை நெருப்பில் ஊற்றி வீணடிக்கிறான்.

செங்கல்லை உடைத்தபோது கூச்சலிட்ட மடையன் - ரூ.500/- நெய்யை வீணடிக்கும் போது பக்தியுடன் கைகூப்பி வணங்கி நிற்கிறான் - புத்தி இழந்து.

மேலும் பார்ப்பான் - சத்துள்ள பூசணிக்காயை இரண்டாக உடைத்து தெருவில் வீசி எறியச் சொல்லுவான்.

வீட்டின் உரிமையாளன் தலைவணங்கி பார்ப்பான் சொன்ன படியெல்லாம் செய்வான்.

கொத்தனார் உடைத்த செங்கல் இரண்டு பாகமும் வீணாகப் போவதில்லை அடுத்து வரிசை வரும் போது மறு பாதி உபயோகப் படுத்தப்படும்.

ஆனால் நெருப்பில் ஊற்றிய நெய்யோ, உடைத்த பூசணிக் காயோ எவருக்கும் எந்த வகையிலும் பயன்தராது.

இதே போலத்தான் பக்தியின் பெயரால் புத்தி இழந்து நாம் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.



எவனொருவன் பக்தியுடன் தான தர்மங்களைச் செய்கிறானோ அவனே எண்ணியவற்றை எல்லாம் எண்ணியவாறே கிடைக்கப் பெறுவான்.

பெரும் பேறான மோட்சமும் அவனுக்கு கிடைக்கும்.

அவன் செய்யும் தானம் தினை அளவு இருந்தாலும் மலை அளவிற்கு பயன்கிட்டும்.

இவ்வாறு ஸ்ரீ நாராயணர் உணர்த்தினார் என்று கருட புராணம் கூறுகிறது!

**இதன் பொருள்**

அன்றாடம் சாப்பாட்டிற்கு வழி இல்லாவிட்டால் கூட பார்ப்பானுக்கு கடுகை விட சிறியதான தினை அளவு தானம் கொடுத்தால் மலையளவு பயன் கிட்டும் - அடுத்த பிறவியில் என்று சொல்லி ஏமாற்றி, தானம் பெறுபவன் இந்த ஜென்மத்தில் சுகபோகமாக வாழ்கிறான்.

மேலும் பக்தியுடன் செய்ய வேண்டுமாம்! காரணம் பக்தி யுடன் செய்யும் போது அறிவு கெட்டுப் போவதால் தினையளவு செய்தோமா? யானை அளவு செய்தோமா? என்று எவனுக்குத் தெரியப் போகிறது?

வீட்டில் சிறு காரியங்கள் வந்தால் கூட தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் செலவு செய்து விடும் பாமர மக்கள் இது போன்ற போலிகளுக்கு கடன் வாங்கிக் கூட காரியம் செய்வதை நாம் பார்க்கிறோம்.



**கருட புராணம் - பக்கம் - 16**

மேலும் கருடன் நாராயணனைப் பார்த்து மனிதர்களுக்கு மிகவும் கொடியதான பிரேதஜன்மம் வராமல் ஒழியும் வழி எது என்பதை தேவரீர் அருள வேண்டும் என்றது.

இதற்கு அவன் (விஷ்ணு) பதில் சொல்கிறானாம் கேளுங்கள்;

ஒருவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அவர்களுக்கு கருமாதி, திவசம் செய்ய வேண்டியது அவசியம். அப்படிச் செய்யாவிட்டால் அவர்களுக்கு பிரேதஜன்மம் வந்து விடும்.

பிரேதஜன்மம் வராமல் தடுக்க வேறு வழி ஒன்றும் கிடையாது .

கருமாதி, திவசம் செய்யாமல் வேறு எந்த விதமான தான தர்மங்கள் செய்தாலும் பிரேதஜன்மம் பிடிக்காமல் விடாது. என்றானாம் ஸ்ரீ விஷ்ணு.

அதற்கு கருடன் கேட்கிறதாம்.......

**கருடன் புராணம் - பக்கம் - 17**

ஒரு மனிதன் இறப்பதற்கு முன் தான தர்மங்கள் கொடுப்ப தாயின் எந்தக் காலத்தில் கொடுக்க வேண்டும்?

அதற்கு விஷ்ணு ...

எவனொருவன் இறந்து பதினோறாம் நாள் கருமாதி மூலம் தான தர்மங்கள் பார்ப்பானுக்கு செய்யவில்லையோ அவனுக்கு (அதாவது அதைச் செய்யாதவனுக்கு) பதிரேத ஜன்மம் நிச்சயமாக வந்தே தீரும்.

மேலும் விஷ்ணு சொல்கிறான்.

மகனாவது, மனைவியாவது, பெண் வயிற்றுப் பிள்ளை யாவது கருமாதி செய்ய வேண்டும் .

**கருடன்..**

பிள்ளைகளே இல்லாதவர் இறந்தால் யார் செய்வது என்று கேட்டதாம்.

அதற்கு அவன் (விஷ்ணு)

**பிள்ளை இல்லாமல் இறந்தவன் ஒரு போதும் சொர்க்கத்தை அடைய முடியாது! ஆகவே எத்தகைய கருமத்தைச் செய்தாவது ஆண் மகனைப் பெற வேண்டும்.**

**நமது சிந்தனை**

எதைச் சொல்லியாவது நம்மிடம் உள்ள செல்வங்களைக் கொள்ளையடிக்க வேண்டும். எதைச் செய்தாவது ஆண் மகனைப் பெற வேண்டுமாம் - குழந்தை இல்லாதவன் இறந்தால் நிச்சயம் மோட்சம் கிடையாதாம்.

அப்படியானால் முருகன், ஐயப்பன் போன்ற குழந்தை பெறாத கடவுள்கள் இறந்தாலும் நரகம்தான் கிடைக்குமோ?

ஜோஸியம், ஜாதகம், நல்ல நேரம், கெட்ட நேரம், பல்லி சாத்திரம், கைரேகையைக் கொண்டு வாழ்வியலைச் சொல்வது, இராகு காலம், குளிகை காலம், எமகண்டம் இது போன்ற பல மோசடிகளைக் கையில் வைத்துக் கொண்டு - மக்களுக்கு பயன் தரும் எந்த ஒரு செயலையும் செய்யாமல் உண்டு கொழுத்துத் திரியும் புரோகிதர்கள்தான் நாட்டின் முதல் அயோக்கியர்கள். ஆம் தந்தை பெரியார்தான் சொன்னார்கள்-

ஆத்மா, மோட்சம், நரகம், மறுபிறவி, பிதிர்லோகம் ஆகியவற்றை உண்டாக்கியவன் அயேக்கியன்! நம்புகிறவன் மடையன்; இதனால் பலன் அனுபவிக்கிறவன் மகா மகா அயோக்கியன் என்று...

**கருட புராணம் - பக்கம் -18**

அப்படிப்புத்திரர்களால் கருமாதி செய்யாமல் இறந்தவன், பசியோடும், தாகத்தோடும், இரவு பகலாக ஐயோ, ஐயோ என்று கூச்சலிட்ட வண்ணம் உலகமெங்கும் நெடுங்காலம் வரை அலைந்து திரிந்து பிறகு புழுக்கள், கிருமிகள் பிறவி எடுத்து மீண்டும் மனிதனாக கீழ் சாதியில் கடையோனாகப் பிறந்து மரிப்பான்.



ஆகவே ஒருவன் உயிரோடு இருக்கும் போதே நல்ல தான தர்மங்களைச் செய்ய வேண்டும் இல்லையேல் -

வீடு தீப்பிடித்து எரியும் போது அந்தத் தீயை அணைப்பதற்கு கிணறு வெட்டப் புறப்பட்டவன் கதை போல் ஆகி விடும் - என்று ஸ்ரீமந் நாராயணன் சொன்னானாம்.......

எப்படியெல்லாம் ஏமாற்ற முடியுமோ அப்படியெல்லாம் எதையாவது சொல்லி படிக்கத் தெரியாத நம் மக்களை ஒரு அச்சடித்த காகிதத்தைக் காண்பித்து, இதைப் பார்ப்பான் தான் சொன்னான் என்று சொன்னால் நம்ப மாட்டார்கள் என்று புரிந்து கொண்டு, கருடன் கேட்டான், விஷ்ணு சொன்னான் அவன் அப்பன் கேட்டான் என்று ஏமாற்றுகிறான் பாருங்கள்!

மனித இனத்திற்கு ஒரு நியதி என்றால் அது உலக மக்கள் அனைவருக்கும் ஒன்று தானே. அதுவும் இவன் சொல்லுவது எல்லாமே இறந்த பின்பு செய்ய வேண்டிய வேலைகள் - இறந்த பின்பு எல்லோரும் ஆவியாகத் தானே சுற்ற வேண்டும்? இவன் சொல்வது உண்மையானால்

உலக மக்கள் யாவரும் சுவாசிக்கும் காற்று ஒன்று தானே? நீர் மற்றும் சூரியன், சந்திரன், மழை இவற்றில் எந்த பேதமும் கிடையாதே - வயிற்று வலிக்கு ஒரு மாத்திரை உண்டு என்றால் எந்த சாதிக்காரனுக்கும், எந்த நாட்டில் இருப்பவனுக்கும் அதே மாத்திரை தானே!

இந்துவுக்கு ஒரு மாத்திரை!

கிறித்துவனுக்கு ஒரு மாத்திரை!

இஸ்லாமியருக்கு ஒரு மாத்திரை!

கீழ் சாதிக்காரனுக்கு வேறு மாத்திரை?

மேல் சாதிக்காரனுக்கு தேவலோகத்திலிருந்து வந்த மாத்திரை என்று பேதம் உண்டா?

ஏதோ நல்ல காலம் - வெள்ளைக்காரன் வந்தான் - மனுதர்மம் ஒழிந்தது மனித தர்மம் கிடைத்தது - நாமெல்லாம் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

இன்று நமக்கெல்லாம் படிக்கத் தெரியாவிட்டால் நம் கதி அதோகதிதான்.

குடுமி, கிராப்பாக மாறி இருக்காது- பார்ப்பனர்கள் வெளிநாடுகளுக்கு ஓடி இருக்கமாட்டார்கள்- என்பது தானே உண்மை?

திரும்பவும் செத்துப் போன எலி, மீன், தவளை போன்றவை களுக்காக அலைந்து கொண்டிருக்கும் கருடன் கேட்டதாம்.

**கருடன் புராணம் – பக்கம் – 18**

ஏ! பரந்தாமா! ஒருவன் தான தர்மங்களை மனத் தூய்மையோடு தன் கைகளினாலே செய்தால் அதனால் உண்டாகும் பலன் என்ன?

தான தர்மங்களைச் செய்யும் போது தவறுதலாகச் செய்தால் அதனால் உண்டாகும் பலன் என்ன? என்று கேட்டதாம்....

அதற்கு உலகளந்த பெருமாள் கதையளக்கிறான்.. பாருங்கள்....

ஒருவன் மனத்தூய்மை இல்லாமலும், மன உறுதி இல்லா மலும் 100 பசு மாடுகளை தானம் செய்வதால் கிடைக்கும் பலன் மனத் தூய்மையோடு ஒரே ஒரு பசு மாட்டை தானம் செய்தாலே கிடைத்து விடும்!

இது எதற்காக மனத்தூய்மையோடு என்று சொல்கிறான் தெரியுமா?

தானம் கொடுக்கும் போது நாம் எதையும் சிந்திக்காமல் - அதாவது, பகுத்தறிவிற்கு சிறிதும் இடம் கொடுக்காமல் செய்ய வேண்டும் என்பதே ஆகும்.

தானம் கொடுப்பவன் கொஞ்சம் சிந்தித்தால் தானமெதுவும் கொடுக்கமாட்டான். காரணம், கொடுக்கப்படும் தானத்திற்கு இரசீது எதுவும் கொடுப்பதில்லை!

நமக்குப் பலன் கிடைத்து விடும் என்பதற்கும் உத்தரவாதம் எதுவும் கிடையாது. நாம் கொடுத்த பொருளை திரும்பக் கேட்கவும் முடியாது! இது போன்ற கேள்விகள் வரும் என்பதனால்தான் மனத்



தூய்மையோடு என்ற விஷக்கருவியைப் பயன்படுத்துகிறான்.

இவன்களுக்கோ, இவனால் கற்பிக்கப்பட்ட கடவுள் களுக்கோ, மனத்தூய்மையோ நேர்மையான மன உறுதியோ இருக்கும்படியான புராணங்கள் எதுவும் கிடையாது!

இவன்கள் புராணங்கள் எல்லாம் கூறுவது என்னவென்றால்

இவன் பெண்டாட்டியை அவன் இழுத்துக் கொண்டு போனான்,

அவன் பெண்டாட்டியை இவன் இழுத்துக் கொண்டு போனான்,

இராமன் அப்பன் தசரதனுக்கு 60,000 பெண்டாட்டிகள்- பாஞ்சாலிக்கு - 5 கணவன்மார்கள், திருமணமாகாத குந்திக்கு ஆறு ஆண் குழந்தைகள் - ஆறு பேருக்கும் ஆறு அப்பன்கள்.

அன்பே வடிவான கடவுளின் கையில் கொடூரமான ஆயுதங்கள் - வாலியை - கடல்நீருக்கு அடியில் பாலம் கட்டிய இராமன் மறைந்திருந்து கொன்றான்.

நாரதனும், கிருஷ்ணனும் புணர்ந்து 60 குழந்தைகள் பிறந்தன.

அகலிகை விஷயத்தில் இந்திரனுக்கு உடம்பெல்லாம் பெண்குறியானது போன்ற அயோக்கியத்தனமான கதைகளைச் சொல்லி மக்களை சிறிதும் சிந்திக்கவிடாமல் செய்யும் பார்ப்பனர்கள் தான தர்மம் கொடுக்கும்போது, மனத்தூய்மை யோடு கொடுக்க வேண்டுமாம்! என்ன மோசடி பாருங்கள் - சிந்தியுங்கள்.

**கருட புராணம்:– பக்கம் – 19**

மேலும் விஷ்ணு சொல்கிறான்:

ஒருவன் இறந்தபின் கொடுக்கும் லட்சம் பசுமாடு தானங் களை விட அவன் உயிரோடு இருக்கும் போது கொடுக்கப்படும் ஆயிரக்கணக்கான பசு மாட்டு தானங்களிலேயே பயன் கிடைத்து விடும்!

ஆகவே ஒருவன் உயிரோடு இருக்கும் போதே பசு தானம், மற்றும் சிறந்த தானங்களை செய்து விடுவது நல்லது எனத் தெரிந்துகொள்.

தானமும் நல்லதாக இருக்க வேண்டும்!

தானம் கொடுப்பவன் மனதும் நல்லதாக இருக்க வேண்டும்!

**தானம் கொடுக்கப்படும் இடமும் நல்ல கோவிலாக இருக்க வேண்டும்! தானம் பெறுபவனும் யோக்கியமான பிராமணனாக இருக்க வேண்டும். இவை யாவும் சேர்ந்து விட்டால் ஒரு கோடி பலன் கிடைக்கும்!**

திரும்ப பாயிண்ட்டுக்கு வரான் பாருங்க!

நல்ல பயனை அடைய விரும்புவோர் கோதானம் முதலிய தானங்களைச் செய்யும் போது சாத்திரங்களை அறிந்த பிராமணனுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும்!

அவ்வாறு இல்லாதவர்களுக்கு தானம் கொடுத்தால் - தானம் கொடுத்தவன் நரகத்திற்கு போவான்! ஒருவன் ஒரு பசுவை பல பிராமணனுக்கு தானமாகக் கொடுக்கக் கூடாது!

அவ்வாறு கொடுத்தால் கொடுத்தவன் தன் ஏழு தலை முறைகளோடு நீண்ட காலம் நரகத்தில் வாசம் செய்ய நேரிடும்!

எப்படியெல்லாம் பொய் சொல்லி பயமுறுத்தி கறக்க முடியுமோ அப்படியெல்லாம் கறக்கிறான் பாருங்கள்!

நல்ல உலகமாம்-பின்பு, அதை விட நல்ல உலகமாம் - காரணம் பிள்ளை இல்லாதவன் இறந்து விட்டால் கருமாதி என்ற பெயரிலோ திவசம் என்ற பெயரில் ஆண்டுதோறும் பிடுங்கித் தின்ன முடியாது!

அதனால் தான் இறந்த பின் கொடுப்பதைவிட உயிரோடு இருக்கும் போது கொடுப்பது பல மடங்கு பலன் தரும் என்கிறான்!

**கருட புராணம் – பக்கம் – 19**

விஷ்ணு தொடர்கிறான் கருடனிடம்:



ஏ கருடனே! வெளி ஊருக்குப் போகிறவன் கையில் உணவு கொண்டு போனால் வழியில் பசி பயம் இல்லாமல் போகலாம்.

அதுபோலவே தான் உயிரோடு இருக்கும் போதே தான தர்மங்களைக் கொடுத்து விட்டால், எந்தக் கவலையும் இல்லாமல் சொர்க்கத்திற்கு போகலாம்.

**கருட புராணம் – பக்கம் – 21**

**புண்ணிய க்ஷேத்திரமில்லாத (அதாவது கோவிலல் லாத) எந்த ஒரு இடத்திலும். புண்ணிய காலமில்லாத எந்த ஒரு காலத்திலேனும் தான தர்மம் கொடுத்து வாங்குபவன் நல்லொழுக்கமில்லாத பார்ப்பானாக இருந்தாலும் கூட அந்த புண்ணிய கர்மத்தின் மகிமையால், உத்தம க்ஷேத்திரத்தில் உத்தம காலத்தில், ஒழுக்கமான பார்ப்பானுக்கு தானம் கொடுத்தால் என்ன பயன் கிடைக்குமோ அந்தப் பலன் நிச்சயமாக கிடைக்கும். ஆகவே ஒருவன் நற்கதியடைய திவசம், கருமாதி கொடுப்பதே சிறந்தவழி!**

19 ஆம் பக்கத்தில் என்ன சொன்னான்- நல்ல கோவிலில், நல்ல நேரத்தில் வேதம் கற்ற ஒழுக்கமான பார்ப்பானுக்கு கொடுக்க வேண்டும்- அவ்வாறு செய்யாவிட்டால் நரகமே கிடைக்கும் என்றவன் -

21ஆம் பக்கத்தில் அப்படியே முரண்பாடாகச் சொல்கிறான். இதனால் தான் புராணங்களை புளுகு மூட்டைகள் என்கிறோம்.

மேலும் மிரட்டுகிறான் பாருங்கள்-

கருடனே! இன்று இருப்பவர் நாளை இருப்பார் என்று நிச்சயம் கிடையாது! ஆகையால் நல்ல காரியங்களையும், நல்ல செயல்களையும், நாளைக்கு செய்து கொள்ளலாம் என்று ஒத்திப் போடாமல் நினைத்த அன்றே செய்வது நல்லது!

குழந்தைகளை உடையவன் தன் கையால் எந்த தர்மத்தையும் செய்யாமல் இறந்து போவானேயானால், அவன் நற்கதி அடையமாட்டான்.

குழந்தையே இல்லாத ஒருவன் நல்ல தர்மங்களைச் செய்து இறந்து போனால் நற்கதியை அடைவான்.

பசுதானம், யாகம் செய்வதை விட கருமாதி, திவசம் செய்வதே மேல். எந்த ஒரு நல்ல நாளிலாவது, நல்ல ஒரு கோவிலில் நல்ல வேத சாஸ்திரங்களை கற்றுணர்ந்த ஒழுக்கமுடைய அந்தணர்களை வரவழைத்து சுபம், ஹோமம் முதலியவற்றைச் செய்வித்து, தன்னை (நம்மை) தூய்மையானவனாக ஆக்கிக் கொண்டு, தெய்வங்களை பூஜித்து பூர்ணாகுதி கொடுத்து, காளை மாடு மற்றும் நான்கு காளைக் கன்றுகளை தானமாகக் கொடுத்தால் செய்த பாபங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும்.

**நமது சிந்தனை**

அவன்கள் (பார்ப்பான்கள்) என்னவோ தூய்மையானவன் போலவும், நாம் தூய்மை இல்லாதவன் போலவும் சித்தரிக்கிறான் பாருங்கள். சுபம்,ஓமம் செய்து நம்மை நாமே சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டுமாம்!

ஹோமம், தானம் செய்ததனால் ஒருவன் செய்த குற்றமெல்லாம் நிவர்த்தியாகும் என்பது உண்மையானால், நீதி மன்றங்களோ, நீதிபதிகளோ, வழக்கறிஞர்களோ நாட்டில் தேவை இல்லை.

சங்கரராமனைக் கொன்றாலும் சரி, அந்த சங்கரனையே கொன்றாலும் சரி, யாகம் வளர்த்து, தான தர்மங்கள் கொடுத்து பிரச்சனையைத் தீர்த்து விடலாமே!

மேலும் வன்முறையாளர்களையும், இன்னபிற கொடுஞ் செயல்கள் செய்வோரையும் இதே வழியில் நல்லவர்களாக மாற்றி விடலாமே! சிறைக்குச் சென்று இந்த வேலையைச் செய்ய எந்தப் பார்ப்பானாவது வரத்தயாரா?

மோசடிக்கு அளவே இல்லை பாருங்கள். பார்ப்பானுக்கு மட்டுமே தானம் செய்ய வேண்டுமாம்!

இறக்காமல் இருக்கும் ஒருவன் தான் உயிருடன் இருக்கும் போதே தனக்கு கருமாதி செய்து கொள்வானேயானால்(?) தனக்கு பிடித்தமான பொருட்களை பார்ப்பானுக்கு தானாகக் கொடுக்கவேண்டும் .



**நமது சிந்தனைக்கு**

நான் உயிருடன் இருக்கும் போதே எனக்கு கருமாதி செய்து கொள்ள நான் தயார். எனக்குப் பிடித்த மான பீடி, சுருட்டு, சாரா யம், கறி, மீன், கருவாடு முதலானவற்றைக் கொடுக்கவும் தயார். வாங் கிக் கொள்ள பார்ப்பான் தயாரா?



மேலும் கொள்ளை அடிப்பதைப் பாருங்கள்..

ஒருவன் இறந்த 13 ஆம் நாளில் பல தானங்களும் கொடுக்கப் பட வேண்டும்! பருத்தி ஆடையின் மீது செம்பினால் ஆன தட்டு செய்து வைத்து, ஆடை முதலியவைகளால் அலங்கரித்து பார்ப்பானுக்கு அதைத் தானமாகக் கொடுக்க வேண்டும்.

சொர்க்கத்திற்கு போகும் வழியில் உள்ள நெருப்பினாலான ஆற்றிற்கு வைதரிணி என்று பெயர். இந்தத் தீயினால் ஆன ஆற்றைத் துன்பமில்லாமல் கடக்க வேண்டுமானால் -

கரும்பினால் ஆன ஓடம் செய்து - அதை வெள்ளைப் பட்டுத் துணியால் சுற்றி- நெய் ஊற்றிய வெண்கலப் பாத்திரத்தை அதனுள் வைத்து - பார்ப்பானுக்கு அதை தானமாகக் கொடுக்க வேண்டும்.

எள், இரும்பு, பொன், பருத்தி, உப்பு மற்றும் ஒன்பது வகையான தானங் களை பார்ப்பானுக்கு கண்டிப்பாக தானமாகக் கொடுக்க வேண்டும்.

தானம் கொடுப்பவன் ஏழையாக இருந்தால் ஏதாவது ஒன்றைக் கொடுத்தாலும் போதும்! (முடிந்த வரை கறந்து விடுவது)

சக்திக்கேற்றவாறு பொருள்களைக் கொடுத்து தட்சணையை அதிகமாகக் கொடுத்து பார்ப்பானை மகிழ்ச்சியுடன் ஏற்கச் செய்ய வேண்டும்!

தானம் கொடுக்கும் போது பார்ப்பானை உட்பார வைத்து தானம் கொடுக்க வேண்டும். (கௌரவப் பிச்சைக்காரன்)

தன் வசதிக்கேற்றவாறு தினமும் தானம் கொடுப்பவன் எவனோ, அவன் இறுதியில் நற்கதி அடைவான்.

மேலும் விஷ்ணு சொல்கிறானாம் -

கருடா, திவசம், கருமாதி கொடுக்கும் போது எவனொரு வன் நிறைய பணம் கொடுக்கிறானோ, அவன், தான் நினைத்தவை களை எல்லாம் அடைவான்.

**நன்றாக கவனியுங்கள் - ஆதி காலத்தில் பண்டமாற்று முறையே இருந்தது. பணம் என்பது பிறகுதான் வந்தது.**

**ஆகவே விஷ்ணு சொன்னதாகச் சொல்லப்படும் கருட புராணத்தில் பணம் எப்படி வந்தது? டாலரா? ரூபாயா? தினாரா? எந்தப் பணம்?**

மேலும் நிறைய பணம் கொடுத்தால் நினைத்ததெல்லாம் நடக்குமாம்.

நான் ஒரு பார்ப்பானுக்கு நிறைய பணம் கொடுத்து நான் ஜனாதிபதி ஆக வேண்டும் என்று நினைத்தால் முடியுமா?

அல்லது படிக்காத ஒருவன் விஞ்ஞானி ஆக வேண்டுமென்று நினைத்தால் ஆக முடியுமா?



**கருட புராணம் - பக்கம் - 23**

**எமலோகத்திற்கு போகும் வழி**



(மிரட்டலும் உருட்டலும்)

கருடன் விஷ்ணுவிடம் கேட்கிறான்!

சர்வலோக நாயகா!(?) எமலோகம் என்பது இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது? (எங்கிருந்து?) அதன் தன்மை யாது? என்று கேட்டானாம்.

விஷ்ணு சொல்கிறான்.......

கருடனே! பூமிக்கு எமலோகத்திற்கும் 80 ஆயிரம் காத தூரம் உள்ளது! (ஒரு காதம் என்பது 16 கிலோ மீட்டர் - 10 மைல்) அதாவது 12,80,000 கிலோ மீட்டர் - இங்கு தான் எமதர்மராஜன் வசித்து வருகிறான்.

பூலோகத்தில் வாழும் ஜீவன்களின் ஆயுட்காலம் முடிந்தவுடன், எமன் தன் தூதர்களிடம் அவர்களைப் பிடித்து வரும்படி கூறுவான்.

அந்தத் தூதர்கள் பயப்படத்தக்க உருவத்தையும் கனலும், காயும் சினமுடையவர்களாகவும், கையில் பாசம், சூலம் முதலிய

ஆயுதங்களுடனும், கருப்பு நிற ஆடைகளை அணிந்து கொண்டும் இருப்பார்கள்.

வாழ்நாள் முடிந்தவர்களை அவர்கள் பாசக் கயிற்றால் கட்டி எமனுலகத்திற்குக் கொண்டு போய் எமன் முன் நிறுத்துவார்கள்!

உடனே எமன் தூதர்களிடம் இவனை திரும்பவும் அவன் வீட்டிலேயே கொண்டு போய் விட்டுவிட்டு 12 ஆம் நாள் திரும்பவும் கொண்டு வருக என்பானாம்!

எமன் சொன்ன உடனே தூதர்கள் அந்த ஜீவனை கட்டிப் பிடித்து ஒரு நொடியில் 12,80,000 கிலோ மீட்டர் தூரம் கடந்து, அவனது வீட்டிலேயே விட்டுவிடுவானாம்!

**நமது சிந்தனை**

விஷ்ணு சர்வலோக நாயகனாம்: கருடன் சொல்கிறான்- சர்வலோகம் என்றால் மேல் உலகம், பாதாள உலகம், பூமி ஆகிய ஏழு உலகத்திற்கும் இவன்தான் நாயகன் என்றால் ஒசாமா பின்லேடன் ஒத்துக் கொள்வானா? ஜார்ஜ் புஷ், ஒபாமா ஏற்றுக் கொள்வார்களா? குப்பைத் தொட்டியில் தன் இரையைத் தேடும் கருடன் சொல்வதாக பார்ப்பான் அளக்கிறான்.

இங்கிருந்து எமலோகம் 12,80,000 கி.மீ. தூரம் என்பதை எந்த சர்வேயர் அளந்தார்? எதைக் கொண்டு அளந்து சொன்னார்? எதில் பயணம் செய்து தூரத்தை மிகத் துல்லியமாகக் கண்டறிந்தார்?

தூதர்கள் பயப்படத் தக்க உருவம் கொண்டவர்களாம்! காஞ்சியில் செத்துப் போன கிழவன் சங்கராச்சாரியையும் அவர்கள் தான் கட்டி இழுத்துப் போனார்களா? திரும்பக்கொண்டு வந்து எந்த வீட்டில் விட்டார்கள் தூதுவர்கள்? எந்த மகன் சங்கராச்சாரிக்கு திவசம் கொடுப்பான்?

ஒரு இஸ்லாமியரோ, கிருத்துவர்களோ இதை ஏற்றுக் கொள்வார்களா?

மேலும் விஷ்ணு தொடர்கிறான்.....





இவ்வாறு இறந்தவன் எமலோகம் சென்று திரும்ப வருகிறபடியால், அவனது உடலை சிறிது நேரம் கழித்துத்தான் எரிக்கவோ, புதைக்கவோ வேண்டும்.

அவ்வாறு திரும்பவும் பூலோகம் கொண்டு வரப்பட்ட உயிர், சுடுகாட்டிலேயே தன் உடலிலிருந்து 10 முழ உயரத்தில் நின்று கொண்டு, திரும்பவும் உடலுக்குள் புக முடியாதவாறு தீப்பற்றி எரியும் தன் உடலைப் பார்த்து அய்யோ, அந்தகோ! என்று கதறி அழும்!

அதே ஜீவன் பார்ப்பானுக்கு தான தர்மங்கள் செய்து புண்ணியங்களைச் செய்த ஜீவனால் மகிழ்ச்சியாக இருக்கும்.

இறந்தவனின் மகன் முதல் நாள் பார்ப்பானைக் கொண்டு செய்யும் கருமாதியால் வெந்து போன உடலின் தலையும் -

இரண்டாவது நாள் கழுத்தும், தோள்களும் -

முன்றாவது நாள் மார்பும் -

நான்காம் நாள் வயிறும் -

ஐந்தாம் நாள் உந்தியும் -

ஆறாம் நாள் பிருஷ்டமும் -

ஏழாம் நாள் குய்யமும் -

எட்டாம் நாள் தொடைகளும் -

ஒன்பதாம் நாள் கால்களும் -

பத்தாம் நாள் செய்யும் கருமாதியால் உடல் முழுவதும் திரும்பவும் உண்டாகும். பார்ப்பான் என்ன சொல்ல வருகிறான் பாருங்கள்...

ஒருவன் இறந்து போவதைப் பயன்படுத்தி உழைக்காமல் தான் வளமாக வாழ வேண்டி 10 நாட்களுக்கும் தனது வரும் படியைத் தேடிக் கொள்கிறான். காலையில் வந்து 10 நிமிடம் புரியாத மொழியில் தவளை கத்துவதைப் போல் எதையாவது சொல்லித் தொலைத்து விட்டு கன்றுடன் பசுமாடு, பொன், அரிசி, துணிமணி கள், காய்கறிகள், பணம் என்று பகல் கொள்ளை அடித்துச் செல் கிறான்.

உண்மையாக 8 மணி நேரம் உழைக்கும் ஒரு தொழிலாளி இவைகளை வாங்க எத்தனை நாட்கள் உழைக்க வேண்டியிருக்கும்? தன் பல நாள் உழைப்பை ஒரே நாளில் மூட நம்பிக்கையின் பெய ரால் இழக்கிறான் பாருங்கள்!

மேலும் விஷ்ணு சொல்கிறான்......

தன் உடலை முழுவதுமாகப் பெற்ற அந்த ஆவி, திரும்பவும் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு, வீட்டினுள் போவோர் -உள்ளிருந்து வருவோர்களைப் பார்த்து பசி தாகத்தால் ஆ ஆ என்று கதறியபடி பதறி நிற்கும்.

அந்த ஜீவன் தன் மகன் பார்ப்பான் மூலமாக கொடுக்கப் பட்டவைகளை உண்டு (?) 13 ஆம் நாளன்று எமனின் உத்தரவுப்படி திரும்பவும் கட்டி இழுத்துச் செல்ல, அது தன் வீட்டைத் திரும்பித் பார்த்தவாறே கதறிக் கொண்டு எமலோகம் சென்றடையும்.

தொடர்கிறான் விஷ்ணு......

கருடனே! **பார்ப்பான் மூலமாகக் கொடுக்கப்பட்ட வற்றைப் பெற்றுக் கொண்ட ஜீவன்,** யம தூதர்களால் கயிற்றால்



கட்டப்பட்ட நிலையில், நாள் ஒன்றுக்கு 247 காத தூரம் அதாவது 3952 கிலோ மீட்டர் - (கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள தூரம்)

இரவும் பகலுமாக ஓய்வின்றி நடந்து(?) செல்ல வேண்டும்! அவ்வாறு போகும் வழியில் கூரிய பற்களைப்போன்ற வாள் போன்ற இலைகளை உடைய ஒரு கானகத்தை கடந்து செல்ல வேண்டும்.

அவ்வாறு அந்தக் காட்டைக் கடக்கும் ஜீவன் பசியாலும், தாகத்தாலும் தவிக்கும். அவ்வாறு போகும் வழியில் அவன் படும் துயரத்தை யார்தான் சொல்ல முடியும்?

வைவஸ்வத பட்டணம் போகும் வழியில் உள்ள ஒரு ஊர் - அந்தப் பட்டணத்தில் உயர்ந்த மாளிகைகள் ஒன்றோடொன்று நெருங்கியதாகவும், யாவருக்கும் அச்சம் தரும் கோர உருவமுடைய பிராணிகளுக்கு இருப்பிடமாகவும், துக்கத்தையே கொடுப்பதாகவும் அமைந்திருக்கும்.

(இவன் சொல்வது எல்லாம் ஆகாயத்தில்!)

கருமாதி, திவசம் கொடுக்காமல் பாபத்தைச் செய்தவர்கள் அந்த நரகத்திலிருந்து உலகமே நடுங்கும் வகையில் எப்போதும் ஆ.....ஊ..... என்று ஓலமிட்டுக் கொண்டே இருப்பார்கள். அங்கு வெப்பத்தால் கொதிக்கும் சுடுநீர்தான் காணப்படும். குடிப்பதற் கேற்ற ஒரு துளி தண்ணீர் கூட அங்கு கிடைக்காது! மேகம் கூட குடிப்பதற்கு அருகதையற்ற இரத்தம் முதலியவற்றையே மழை யாகப் பொழியும்.

இறந்த 13 ஆம் நாள் எம தூதர்கள் இறந்தவனின் ஜீவனை குரங்கை (அதாவது ஆஞ்சநேயரை) கயிற்றால் கட்டி இழுத்துச் செல்வதைப் போல எம தூதர்கள் 10 ஆம் நாள் பிண்டத்தால் ஆன ஜீவனை பாசக்கயிற்றால் கட்டி இழுத்துச் செல்லும் போது, அந்த ஜீவன் தன் மகனை நினைத்து, ஐயகோ என் அருமை மகனே நான் கஷ்டத்தோடு அவதிப்படுகிறேனே!

ஐயோ நான் என்ன செய்வேன் என்று புலம்பும்!

ஆம்! தந்தை பெரியார் பார்ப்பனர்களை கடுமையாகச் சாடினார்- ஏன் தெரியுமா? அதற்கு பல மோசடிகள்தான் காரணம் என்றாலும் பின் வருவதைப் படித்துப் பாருங்கள் - உண்மை

விளங்கும்... அவ்வாறு அலறும் ஜீவன்கள் சொல்வதாக - விஷ்ணு சொன்னான் என்று சூதபுராணிகன் என்பவன் தொடர்கிறான்.....

**ஐயகோ! நான் சர்வேஸ்வரன் என்று ஒருவன் உண்டென்றும், சொர்க்கம், நரகம் என்ற இடங்கள் உள்ளன என்றும் - அவற்றிற்கு செல்ல நன்னெறி, தீயனெறி என இரண்டு வழிகள் உள்ளதென்றும், உலகில் நான் வாழ்ந்த காலத்தில் இறப்பிற்கும், பிறப்பிற்கும், அதற்கப்பாலும் உள்ள வாழ்விற்கு இதமானவற்றைச் சொன்னவர்களோடு முரண்பட்டு, கடவுள் இல்லை! சொர்க்கம், நரகம் என்றெல்லாம் கிடையாது - எனவும், கடவுள் இல்லாமல் மனிதன் வாழ முடியாதா? எனவும், இறந்தபிறகு வேறு உலகம் உண்டென்று கற்பனை செய்து உளறுகிறீர்களே என்று எதிர்த்துப்பேசி பரிகாசம் செய்தேனே! அதன் பயனை இப்போது நான் அனுபவிக்கிறேன். இப்போது நான் ஒன்றும் செய்ய முடியாதவனாக தன்னந் தனியாக தவிக்கிறேனே! மலை போன்ற ஆயுதங்களால் எம தூதர்கள் என்னை அடித்துக் கொடுமை படுத்துகிறார்களே ஐயோ! நான் பூமியில் வாழ்ந்த காலங்களில் கோவில்களுக்குப் போகவில்லையே!**

பூமியில் வாழ்ந்த காலங்களில் பார்ப்பனர்களுக்கு தான தர்மங்கள் கொடுக்க வில்லையே! வேத சாஸ்திரங்களைப் பழித்தேனே! புராணங்களை பொய் என இகழ்ந்தேனே!

இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய புராணங் களை பணம் செலவு செய்து படிக்கச் சொல்லி கேட்கவில்லையே!

விஷ்ணுவின் புனித தினமான ஏகாதசியில் விரதம் இருக்கவில்லையே! என்று ஓலமிட ஒவ்வொரு முறையும் எம தூதர் கள் அடித்துத் துன்புறுத்த - எமலோகத்திற்கு இழுத்துச் செல்லப் படுவான்!

**நமது சிந்தனை**

கண்டிப்பாக இந்நூலை எழுதிய எனக்கும், என்னைப் போன்ற நாத்திகர்கள் அனைவருக்கும் நரகம்தான்..

மேலும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, இங்கர்சால், சாக்ரடீஸ், புத்தர் போன்ற அனைவரும் நரகத்தில் தான் இருப்பார்.



இராமாயணம், மகாபாரதங்களை பணம் செலவு செய்து படிக்கச் சொல்லி கேட்கணுமாம்! என்ன காரணம் தெரியுமா? சூத்திரனுக்கு கண்ணைக் கொடுத்தாலும் - கல்வியைக் கொடுக்காதே என்று மனுதர்மம் சொல்வதனால் சூத்திரனுக்கு படிக்கத் தெரியாது. அவன் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதிக்கும் பணத்தை பார்ப்பானிடம் கொடுத்து நம்மை இழிவு படுத்தும் புராணங்களைப் படிக்கச் சொல்லி கேட்க வேண்டுமாம்!

இதில் வேடிக்கை என்னவென்றால் நமக்குப் படிக்கத் தெரியாததால் - பார்ப்பான் சொல்வதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும். அவன் இடை இடையே எதை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளவும் கேட்பவனின் மன நிலைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவும் முடியும்.

**இந்தப் பாழாய்ப் போன இந்து மதத்தில்தான் இதுபோன்ற சாதிக் கொடுமை என்று வேறு மதத்திற்கு - மானத்தைக் காக்க வேண்டி- மாறி னால் மதம் மாற்றத் தடைச் சட்டம் போடுகிறது ஜனநாயக அரசு!**

பிறந்த வீட்டில் புண்ணியாகம் என்ற பெயரில் வேட்டை - வீடு கட்டினால் - கிரகப்பிரவேசம் என்ற பெயரில் கொள்ளை திருமண வீட்டிலும் புரோகிதம் என்ற பெயரில் கொள்ளை - தொழில் நடக்கும் இடங்களிலும் கணபதி ஹோமம் என்று மோசடி நாத்திக முதல்வர் கருணாநிதி அவர்கள் காலத்தில் கூட சட்டசபை கட்டடம் தொடங்கும் போது பூமி பூஜை என்ற பெயரில் கொள்ளை! குளத்தங்கரை, ஆறு, அருவி போன்ற இடங்களில் அமர்ந்து, விட்டுப் போன திவசம் என்ற பெயரில் பகல் கொள்ளை மிச்சம் மீதி விட்டுப் போனதையும் பிடுங்கும் நிகழ்ச்சிகள் நிரந்தரமாகக் கொள்ளை அடிப்பதற்கு கோயில் கருவறை! இது மட்டுமல்லாமல் பஞ்சாங்கம் பார்ப்பது - மணப் பொருத்தம் பார்ப்பது - மழை வருவதற்கு யாகம் நடத்துவது - கிரிக்கெட்டில் வெற்றி பெற யாகம், என்று உழைக்கும் மக்களை ஏமாற்றி சுரண்டித் தின்பதே பார்ப்பனர்கள் வேலையாக உள்ளது.

வேறு எந்த ஒரு இனமும் இதுபோல மற்ற மக்களை எல்லா விதத்திலும் ஏமாற்றி வாழ்வது கிடையாது!



**ஜீவன் செல்லும் பாதையில் பரிதவித்தல்**

*எம தூதர்களால் துன்புறுத்தப்பட்டு, பசியாலும், தாகத் தாலும், மெலிந்து, சோர்வுற்று, இளைத்து, என் மனைவி எங்கே? ஊரை அடித்து உலையில் போட்டோமே? உழைப்பவன் பொருளை உறிஞ்சி உற்றாரை சுகிக்க வைத்தோமே! பிறரை நயமாக வஞ்சித்து, அவர்களது பொருளைக் கவர்ந்து நம் குடும்பம் வாழ வேண்டுமென்று மனசாட்சிக்கு மாறாக பொருள் சேர்த்து சுகமாக வாழ்ந்தோமே! அப்போது நம்முடன் சுகத்தை அனுபவித்த உற்றவர்கள் இப்போது எங்கே? நம்மை நல்லவன் என்று நம்பி பொருளை இழந்தவன் வயிறு எப்படி எரிந்ததோ அதே போல நம் வயிறு பற்றி எரிகிறதே! இனி என்ன செய்வோம் என்று அலறித் துடிப்பான்.*

*அப்போது எமதூதன் அவனது கன்னத்தில் ஓங்கி அடித்து, அட மூடா! இப்போதுதான் உனக்கு புத்தி வந்ததா? நீ செய்த பாப புண்ணியங்களே இவ்வுலகில் உனக்கு இன்பத்தையும், துன்பத்தையும் தர வல்லன! பிறர் பொருளை அபகரித்தல் முதலிய அதர்மங்களைச் செய்யாமல், தர்மம் செய்திருந்தால் உனக்கேன் இப்போது இந்த நிலை வருகிறது? என்று கண்டித்து மீண்டும் பாசத்தால் அடித்தும், சூலத்தால் துன்புறுத்துவாள்.*





**ஒரு வேளை இந்த கருட புராணம் உண்மையாக இருக்குமானால் சூத்திரர்களாகிய நாம் யாரும் பயப்படத் தேவையில்லை! காரணம் சூத்திரர்கள் என்று சொல்லப்படுகிற நாம்- உழைக்காமல் யார் பொருளையும் கொள்ளையடித்து நம் குடும்பத்தாரை வாழ வைப்பது கிடையாது!**

**அறிவிற்கு ஒத்து வராத, கடுகளவு கூட உண்மை இல்லாத இதிகாச புராணங்களை வைத்து - மக்களுக்கு பயன்படும் எந்த ஒரு தொழிலையும் செய்யாமல் - நான் முன்பு குறிப்பிட்டிருந்ததைப் போல - யாகம், தானம் என்று நம் பொருளைக் கொள்ளையடிக்கும் பார்ப்பனர்கள்தான் நரகத்தில் இருப்பார்கள் - அவர்கள் எழுதிய இவை அனைத்தையும் அவர்களே அனுபவிப்பார்கள்!**

**இன்றும் கூட பல ஊர்களில் பார்ப்பனர் நிலச் சொந்தக் காரர்களாக இருக்கிறார். அவர்கள் அந்த நிலத்தை தான மாகத்தான் வாங்கி இருப்பார்கள். மேலும் அவர்கள் அந்த நிலத்தில் எந்த வேலையும் செய்யாமல் உழைக்கும் மக்களை அபகரித்தே வாழ கிறார்கள்.**

**கோவில்களில் சூத்திரனால் செய்யப்பட்ட கருங்கல் பொம்மையை கடவுள் என்று சொல்லி ஏமாற்றி அதற்கு உயிர் வரவழைப்பதாகக் கூறி மோசடி செய்து - அந்தக் கருங்கல்லுக்கு பால், தயிர், நெய், பழச்சாறு, தேன் போன்ற சத்துள்ள உணவுப் பொருட்களைக் கொண்டு அபிஷேகம் என்ற பெயரில் வேட்டை - உழைக்கும் மக்களின் செல்வங் களை பார்ப்பனர்கள் தான் சுரண்டுகிறார்.**

*இவை மட்டுமா? இன்று பழனி முருகன் சிலையையே சுரண்டி - அந்த நவ பாஷாணத்தால் போகர் என்ற சித்தரால் உருவாக்கப்பட்ட அந்தச் சிலை கீழே விழுந்து விடுமோ என்று அஞ்சி முட்டுக்கொடுத்து வைக்கப்பட்டிருக்கும் அவலநிலை- இந்தக் காரியத்தை செய்தது யார்-அங்கு வழிபடச் சென்ற பக்தர்களா? அல்லது கருவறைக்குள் சூத்திரன் நுழைந்தால் அங்குள்ள கடவுள் தீட்டாகி விடுவார்கள் என்று சொல்லும் பார்ப்பனர்களா?*

நாம் படிக்கக் கூடாது என்ற மனு தர்ம ஆட்சி காலத்தில் இது போன்ற புராணங்களை எல்லாம் எழுதி வைத்துள்ளார்கள்.

**கருட புராணம் – பக்கம் –32**

மேலும் விஷ்ணு வைதரணி கோதானம் எனப்படும் பசு மாட்டு தானத்தைப் பற்றிச் சொல்கிறான்.....

அவ்வாறு துன்புறுத்தி எம தூதர்களால் இழுத்துச் செல்லப்படும் ஜீவன் செல்லும் வழியில், அஞ்சத் தக்க உருவமுடைய படகோட்டிகள் (?) பதினாயிரம் பேர்கள் கூட்டமாக அவன் முனபு ஓடி வந்து, ஏ! ஜீவனே! நீ உயிருடன் இருந்த போது வைதரணி கோதானம் என்ற பசு மாட்டு தானத்தைச் செய்திருந்தால் - இனி கடக்க வேண்டிய வைதரணி என்ற நதியை எளிதாகக் கடக்க நாங்கள் உதவி செய்வோம்.

நீ அந்த கோதானம் செய்யவில்லை என்றால், அந்த நதியிலே உன்னைத் தள்ளி பாதாளம் வரை அழுத்தித் துன்பப்படுத்துவோம். ஓ! ஜீவனே! அந்த வைதரணி ஆறு 100 யோசனை தூரமுடையது! (யோசனை தூரம் என்றால் - உங்களால் எவ்வளவு தூரம் மனதால் நினைக்க முடியுமோ - அவ்வளவு தூரம்)

நதி என்றால் அதில் நீர் ஓடும் என்று எண்ணிவிடாதே! அந்த நதியில் தண்ணீரே இருக்காது! இரத்தமும், சிறுநீரும், சீழும், மலங்களுமே அதில் ஓடும்! மேலும் அந்த நதியில் துஷ்ட ஜந்துக்களும் - கொடிய ஜந்துக்களுமே வாழும்!

துர்நாற்றத்தை உணரும் மூக்கு இல்லாத பிராணிகள் கூட அந்த துர்நாற்றத்தைப் பொறுக்க முடியாது! நீ உயிரோடு இருந்த போது பார்ப்பானுக்கு பசு மாடு தானம் கொடுத்திருந்தால் ஒரு பசுவானது அங்கு வந்து நிற்கும். அவ்வாறு நீ பசு தானம் செய்திருந்தால் அந்த மாடு சுகமாக உன்னை அக்கரைக்கு கொண்டு போய் விட்டுவிடும்! நீ கோதானம் செய்யவில்லை என்றால் அந்தப் பசு மாடும் அங்கு வராது!

இந்த வைதரணி ஆற்றில் மூழ்கிக் கிடந்து நீண்ட நெடுங் காலம் தவிக்க நேரிடும் என அங்கு வந்த படகோட்டிகள் சொல்லு வார்கள்.



அவ்வாறு இறந்தவன் பசு தானம் செய்யவில்லை என்றால் - அவன் இறந்த உடன் அவனது மகன் - தகப்பனுக்காகச் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தாலும் கூட அந்த ஜீவன் நதியைக் கடந்து எமனின் தம்பியாகிய விசித்திரன் என்பவனது பட்டினத்தையடைந்து ஊனஷானி மாசிகப் பிண்டத்தை உண்டு, அங்கிருந்து புறப்படும் போது ஏழாம் மாசிகப் பிண்டத்தை உண்ணும் போது சில பிசாசுகள் அவன் முன்பு பயங்கர உருவத்துடன் தோன்றி அந்த உணவையும் தட்டிப் பறித்துச் சென்று விடும் .

இவன் உயிரோடு இருக்கும் போது கோதானம் செய்யாமல் - அவன் இறந்த பிறகு தகப்பனுக்காக மகன் அந்த தானத்தைச் செய்வதினால் இந்தக் கொடுமை ஏற்படுகிறது.

**இதிலிருந்து பார்ப்பான் என்ன சொல்ல வருகிறான் தெரிகிறதா? நீ உயிரோடு இருக்கும் போதே எனக்கு பசு தானம் கொடுத்திடு - இல்லாவிட்டால் இப்படியெல்லாம் நடக்கும் என்பது மட்டுமல்ல - எப்படியும் இவன் இறந்த பிறகு மகனும் பசு தானம் கொடுப்பான். ஒரு மாட்டிற்கு பதிலாக இரண்டு மாடு கிடைத்து விடும். சீ.... இப்படியும் ஒரு பிழைப்பா?**

மேலும் விஷ்ணு சொன்னதாக சூதக முனிவன் தொடர்கிறான்-

கருடனே! இவன் உயிரோடு இருந்த காலத்தில் உதம கும்ப தானம் என்ற தானத்தைச் செய்திருந்தால், அந்த உதம கும்பத் திலுள்ள நீரைப் பருகியாவது சிறிதளவு தாகம் தீர்ந்தவனாய் ஏழாம் மாதத்தில் அந்த இடத்தைவிட்டு மீண்டும் நடந்து செல்வான்.

கருடனே, ஜீவன் இதுவரை பாதி தூரம் (அதாவது 6,40,000 கி.மீ) அந்த மாதத்தில், அவனுடைய உறவினர்கள் பூமியில் பார்ப்பானுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் பிறகு அந்த ஜீவன் பக்குவப்பதம் என்ற பட்டினத்தை அடைந்து எட்டாவது மாத பிண்டத்தை உண்டு, அங்கிருந்த நடந்து, துக்கதம் என்ற ஊரை அடைந்து மகா துக்க மடைந்து, ஒன்பதாவது மாத பிண்டத்தை அங்கு ஏற்றுக் கொண்டு - அங்கிருந்து நகர்ந்து நாதாக்கிராதம் என்ற பட்டினத்தை அடைந்து அங்கு தங்கி பத்தாவது மாத பிண்டத்தை உண்பான்.

முறைப்படி பார்ப்பானை அழைத்து கருமாதி, திவசம் கொடுக்காத அநேக ஜீவன்கள் அந்தப் பட்டினத்தில் கூட்டங் கூட்டமாகக் கூடி ஓ....ஓ..... என்று ஓயாமல் ஓலமிட்டு கொண்டே இருப்பார்கள்- அவ்வாறு ஓலமிடும் ஜீவன்களைப் பார்த்து இந்த ஜீவனும் கத்திக் கதறி விட்டு, அப்பால் நடந்து அதப்பதம் என்ற ஊரை அடைந்து, பதினோராம் மாதம் பிண்டத்தை உண்டு, அங்கிருந்து சீதாப்ரம் என்ற நகரத்தை அடைந்து அங்கு சளித் தொல்லைகளால் வதைந்து வருந்தி, பன்னிரெண்டாவது மாதத்தில் வழங்கப்படும் பிண்டத்தை உண்டு, (பிண்டம் எனப்படுவது.... இறந்தவர்களுக்காக ஒவ்வொரு மாதமும் ஓராண்டு வரை நாம் கொடுக்கும் தானங்கள் தான்). எம தூதர்களின் அடி உதைகளை வாங்கிக் கொண்டு மனம் புழுங்கி நடந்து வைவஸ்வத பட்டினம் என்ற ஊரைச் சேருவதற்கு முன்பே ஊனாப்தி என்ற பிண்டத்தை உண்டு, அப்பட்டினத்தை யடைவான். அது தான் எமபுரி என்னும் எமலோகம்.

அதன் அகலம் 144 காதம் - அதாவது 2304 கி.மீட்டர். அங்கு கந்தர்வா அப்சரசுகளோடு கூடியதாய் 84,000 பிராணிகள் வாழும். எமனிடம் அழைத்துச் செல்லும் 12 சிரவணர்கள் அங்கு இருப்பார்கள். (அதாவது 12 பார்ப்பனர்கள்) அந்த சிரவணர்களை இந்த ஜீவன் ஆராதனை செய்தால், அவன் செய்த பாபங்கள் எல்லாம் எமனிடம் சொல்லாமல் புண்ணியங்களை மட்டும் எமனிடம் சொல்வார்களாம்!

(ஆராதனை என்ற பெயரில் எமலோகத்தில் கூட லஞ்சம் சொர்க்கத்திற்குப் போக எமனிடம் லஞ்சம் கொடுக்கலாம் போலிருக்கிறது!)

**கருட புராணம் – பக்கம் –36**

**பாப புண்ணியங்களை எடுத்துச் சொல்லும் 12 சிரவணர்கள்**

விஷ்ணுவிடம் கருடன் கேட்கிறான் ..... அந்த 12 சிரவணர் கள் யார்? ஏன் இங்கு இருக்கிறார்கள்? இவர்களுடைய பெற்றோர் கள் யார்? பூலோகத்தில் மனிதர்கள் செய்யும் பாப புண்ணியங்களை இவர்கள் எவ்வாறு தெரிந்து கொள்கிறார்கள்? என்று கேட்டதாம்...

மகா விஷ்ணுவின் தொப்புள் கொடியில் தோன்றிய பிரம்மன் பல காலம் அவனைத் தொழுது, வேதங்களையும், படைப்புத் தொழிலையும் அறிந்து எல்லா உயிர்களையும் படைத்தருளினார்.



அப்போது எமனையும் படைத்தார்... ஆனால் பூலோகத்தில் வாழும் மனிதர்கள் செய்யும் பாப புண்ணியங்களை எமனால் அறிந்து கொள்ள முடியவில்லை!

எனவே எமன் பிரம்மனை வணங்கி தன் இயலாமையைக் கூற உடனே பிரம்மன் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்தெறிந்து 12 சிரவணர்களைப் படைத்தான். பிறகு எமனிடம், இந்த 12 சிரவணர்களும் பூமியில் நடப்பவைகளையும், அங்கு வாழ்பவர்கள் மனதில் நினைப்பதையும் (சங்கரராமனைக் கொலை செய்ய வேண்டும் என்று நினைத்தது உள்பட) அவர்களுடனேயே இருப்பவர்கள் போல கண்டறிந்து உன்னிடம் சொல்லுவார்கள் என்றானாம் பிரம்மன்...

**(அடுத்த பிறவியில் அவரவர் செய்த பாவங்களை அனுபவித்துக் கொள்வார்கள் என்று யாரும் நீதி மன்றத் திற்கோ - காவல்துறைக்கோ போகாமல் இருக்கிறார்களா? இந்த புராணத்தை எழுதிய பார்ப்பன இனத்திலேயே எத்தனை வழக்கறிஞர்கள் இன்றும் இருக்கிறார்களே? அது ஏன்? அடுத்த பிறவியிலோ - அல்லது நரகத்திலோ அனுபவிப்பார் என்று சட்டம் ஒரு குற்றவாளியை விட்டுவிடுமா?)**

யார் யார் எமலோகத்திற்கு எப்படிச் செல்வார்கள்? விஷ்ணு சொல்கிறானாம்.....

1. தானம். தர்மம் செய்தவர்கள் உத்தமர்களாம். அவர்கள் யாவரும் நல்ல பாதையில் எமலோகம் செல்வார்கள்.

2. பொன், பொருள் தானமாகக் கொடுத்தவர்கள் விமானம் வழியாக எமலோகம் செல்வார்கள்.

3.தானம் பெறுபவன் விரும்பியதைக் கொடுத்தவன் குதிரை மீது செல்வான்.

4.மோட்சத்தில் இச்சை கொண்டு, வேத, சாஸ்திர புராணங்களை உணர்ந்து, தெய்வபக்தி செய்பவர்கள் - தேவி விமானம் ஏறி தேவலோகம் செல்வார்கள் - இவர்களுக்கு எமலோகம் கிடையாது!

மேற்சொன்ன நான்கு வகையிலும் தான தர்மங்களைச் செய்யாதவன் கால்களால் நடந்தே 12,80,000 கி.மீ தூரம் உள்ள எமலோகத்தை அடைய வேண்டும் .

12 கலசங்களில் தண்ணீர் நிறைத்து, அன்னம் பெய்து, அதை பார்ப்பனர்களுக்கு தானமாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த 12 சிரவணர்களும் நாம் செய்த பாபங்களை மூடி மறைத்துவிட்டு, புண்ணியங்களை மட்டுமே எமனிடம் சொல்லி நமக்கு மோட்சம் வாங்கித் தருவார்களாம்!!!

எதைச் சொல்லி தொலைப்பது - தானம் கொடுத்திரு இல்லாவிட்டால் நரகம் - ஒரு வேளை கொடுக்கவில்லையா - பார்ப்பான்களை தனியாக கவனித்து விடு. எமனிடம் உண்மையை மூடி மறைத்து உனக்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்வான்கள் - பிரம்மனுடைய தர்ப்பைப் புல்லிலிருந்து 12 சிரவணர்கள் - இதில் எவன் தான் யோக்கியன்? விஷ்ணுவா? சூதக முனிவனா? நூலை எழுதிய துர்காதாஸா? பிரம்மனா? 12 சிரவணர்களா?





# சித்ரகுப்தன் கணக்கும் நரகங்களும்

**கருடபுராணம் - பக்கம் - 40**

சூதக முனிவன் கருடனிடம் மேலும் சொல்கிறான்:

கருடா! ஜீவர்கள் பூமியில் வாழ்ந்த காலத்தில் செய்த பாப, புண்ணியங்களை எல்லாம் சித்ரகுப்தன் என்ற கணக்கன் 12 சிரவணர்கள் மூலமாக அறிந்து எமனுக்கு எடுத்துச் சொல்ல, எமன் தனது தூதர்களைக் கொண்டு, அவ்வப்போதே தண்டனையை நிறைவேற்றி விடுவான்.

வாக்கினால் செய்த பாபங்களுக்கு வாக்கினாலும், உடலி னால் செய்த பாப புண்ணியங்களுக்கு உடலினாலும், எண்ணத்தால் செய்தவைகளை எண்ணத்தாலும் அனுபவிக்க வேண்டி வரும்.

வேத சாஸ்திர புராணங்களைப் படித்தல், தவம் செய்தல் முதலிய புண்ணிய காரியங்களைப் செய்தவன் எந்த இடத்திலும் தன் வாக்கினால் வென்று விடுவான்!

நீச மொழிகளை உச்சரித்தவன் (சமஸ்கிருதம் அல்லாத மற்ற மொழிகள் நீச மொழிகளாகும்) வாயிலிருந்து புழுக்களாக வெளி வரும்.

பாகவதர்கள், தெய்வீக விஷயங்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னவர்கள் - இவர்களுக்கு உதவியவர்கள் - தாங்கள் விரும்பிய படி நல்ல இணக்கமுள்ள உடல்களைப் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார்கள்!

கருடா! எமலோகத்திற்குச் செல்லும் வழியில் உள்ள துன்பங்களை உனக்கு எடுத்துச் சொன்னேன்.

இறந்தவனுக்காக அவனுடைய மகன் பார்ப்பானுக்கு அன்னதானம், கோதானம், திலக தானம், பத தானம் செய்தால் இறந்தவன் செல்லும் வழியில் துன்பமில்லாமல் செல்வான்..

குத்து விளக்கை பார்ப்பானுக்கு தானமாகச் கொடுத்தால் இறந்தவன் எமலோகம் போகும் போது இருட்டாக இருந்தாலும் வெளிச்சம் கிடைக்கும்.

அதனால் பாதை மாறாமல் எளிதாக எமலோகம் சென்ற டையலாம்! கார்த்திகை மாதம் சதுர்த்தியில் குத்து விளக்கை தானமாகக் கொடுத்தால் இறந்தவன் எமலோகத்திற்குப் போகாமல் நேராக மோட்சத்திற்குப் போய்விடுவான்!

இறந்தபிறகு 11 நாட்கள் பார்ப்பானுக்கு பல தானங்கள் கொடுத்தால் இறந்தவனுக்கு தலையில் நிறைய மசிறு (முடி) இருக்கும்.

பார்ப்பானுக்கு வாகனங்களை தானமாகக் கொடுத்தால் விமானத்தில் ஏறி எமலோகம் சென்றடையலாம்!



பத தானம் என்பது - பார்ப்பானுக்கு குடை, மாரடி, தண்டம், துணிமணிகள், மோதிரம், உதக கும்பம், ஆசனப் பலகை, சாப்பாடு, பூஜை செய்வதற்கான பொருட்கள், பூணூல், தாமிர சொம்பு, அரிசி முதலியவைகளை தானமாகக் கொடுப்பது தான் பத தானம்.



இவ்வாறு பல விதமான தானங்களைக் கொடுத்தால் எம தூதர்கள் துன்புறுத்தாமல் அழைத்துச் செல்வார்கள், எமலோகத் திற்கு!

குடையை தானமாகக் கொடுப்பதனால் நிழல் வழியாக அழைத்துப் போவார்கள்! மாரடி தானம் செய்தால் குதிரை மேல் அழைத்துப் போவார்கள் - (மாரடி என்றால் பல்லக்கு)

**நமது சிந்தனை**

**எதையாவது சொல்லி எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் என்பது போல், பல்லக்கு, கைத்தடி, துணிகள், அரிசி, சொம்பு, குடை என்று பிடுங்குவதைப் பாருங்கள். அந்தக் காலத்தில் நிரோத் கண்டுபிடிக்கப்படவில்லை. இல்லையேல் அதையும் சேர்த்திருப்பான்.**

வாகனங்களை தானமாகக் கொடுத்தால் விமானத்தில் டிக்கெட் இல்லாமல் இலவசமாக எமலோகம் போகலாமாம்? பைலட் யார்? பெட்ரோல் யார் கொடுத்தது? விமானம் இறங்க எமலோகத்தில் தளம் போட்டது எந்த இஞ்சினியர்? தலைக்கு மேல் போன பிறகு ஜாண் போனாலென்ன? முழம் போனாலென்ன? இது போன்ற நம்மால் முடிந்தவரை பார்ப்பானுக்கும், கடவுள்களுக்கும் நாம் செலவு செய்து - வாழ்க்கையில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறோம்!

**கருட புராணம் - பக்கம் - 48-49-51-52-57**

மேலும் சொல்கிறான்...

84 லட்சம் நரகங்கள் இருக்கிறது! அவரவர் செய்யும் பாப, புண்ணியங்களுக்கு ஏற்றவாறு அனுப்பிவைக்கப் படுவார்கள்!

ஒருவன் இறந்த பிறகு தொடர்ந்து 11 நாட்கள் பார்ப்பானுக்கு மேலே சொல்லப்பட்ட தானங்களை கொடுத்தால் எம தூதர்கள் திருப்தி அடைவார்கள்.

பார்ப்பானுக்கு இரும்பாலான ஊன்றுகோல், உப்பு, பருத்தி, எள், பாத்திரங்கள் ஆகியவற்றை 11 நாட்களும் தானமாகக் கொடுத்தால் - எமலோகம் சென்றடைந்த உடனேயே காலம் தாழ்த்தாமல், இவன் வந்திருப்பதை எமனிடம் அறிவிப்பார்களாம்!

அப்போது எமனுக்கு அருகிலேயே தர்மத்துவஜன் என்பவன் சதா சர்வ காலமும் இருப்பானாம்.

கருமாதி செய்யும் பார்ப்பானுக்கு 11 நாட்களும் கோதுமை, பயிறு, கடலை, மொச்சை, எள், கொள்ளு, துவரை ஆகிய ஏழு தானியங்களையும் பாத்திரங்களில் வைத்து தானமாகக் கொடுத்தால் அந்த தர்மத்துவஜன் மகிழ்ச்சியடைந்து எமனிடத்தில் நம்மைப் பற்றி நல்ல விதமாகச் சொல்லுவானாம்.

**இந்த வகையான எல்லா தானங்களையும் செய்த வனைக் கண்டவுடன் எமதர்மனே எழுந்து நின்று மரியாதை செய்வானாம்!!**

தானம் செய்யாதவர்களை எம தூதர்கள் பாசத்தாலும், சூலத்தாலும், உலக்கையாலும் அடித்துத் துன்புறுத்தி ஆடு, மாடு களைப் போல எமனிடம் இழுத்துச் செல்வார்களாம்!

இவ்வாறு தானங்களைச் செய்யாதவன் பயங்கர முகத்தோடும், கூரிய பற்களோடும் அவனது குடும்பத்தவர்களின் கனவில் தோன்றி ஐயோ என்னைத் காப்பாற்றுவோர் யாருமே இல்லையா? என்று கதறுவானாம் சில சமயம் கனவில் வராமலேயே குடும்பத்தாருக்கு பலவித இன்னல்களைச் செய்வானாம்!

சும்மாவா மராட்டியர்கள் பழமொழி சொன்னார்கள், பாம்பையும் பார்ப்பானையும் பார்த்தால் பாம்பை விட்டுவிடு! பார்ப்பானை அடி என்று!

கோர முகத்தோடும் கொடிய பற்களோடும் வந்து கதறுவானாம்..... அப்படி கனவில் வராமலும் குடும்பத்தாருக்கு பலவித இன்னல்களைச் செய்வானாம். இதன் பொருள் என்ன தெரியுமா? ஒரு வேளை நம் கனவில் வராவிட்டாலும் நமக்கு வாழ்க்கையில் இன்ப துன்பம் இயல்பாக ஏற்படும் போது நமக்கு ஏற்படும் துன்பங்களுக்கு நம் இறந்து போன முன்னோர்கள்தான் செய்கிறார்கள் என்று நம்பி மிச்சம் மீதி இருக்கும் செல்வங்களைப் பிடுங்குவதுதான் .

இதுபோல் இன்னல்கள் செய்வதை எப்படிப் போக்கலாம் என்பதற்கு அவன் சொல்லும் வழிகளைப் பாருங்கள்!





பார்ப்பானுக்கு பூதானம் எனப்படும் பூமியை தானமாகக் கொடுக்க வேண்டும்-

பகவத் கைங்கர்யம் பாகவத கைங்கர்யம் முதலானவற்றைச் செய்ய வேண்டும்-

எப்போதெல்லாம் கனவில் வந்தோ அல்லது வராமலோ துன்பம் செய்கிறார்களோ அப்போதெல்லாம் இந்த தானங்களைச் செய்ய வேண்டும்.

ஒரு முறை பூதானம் கொடுத்தால் சரி வராதாம். பிறகு ஏன் அதைக் கொடுக்க வேண்டும்? இப்படி சொல்லி ஏமாற்றித்தான் இன் றும் பல விவசாயப் கிராமங்களே பார்ப்பான்களிடம் அகப் பட்டுள்ளன. உங்க ளுக்குத் தெரிந்து எங்காவது பார்ப்பான் பணம் கொடுத்து நிலம் வாங்கி இருக்கி றானா?

# ஜனன மரண விதிகள்

**கருட புராணம் – பக்கம் – 62**

*கருடன் விஷ்ணுவிடம் கேட்கிறான்....*

*பிராமண, ஷத்திரிய, வைசியர், சூத்திரர், அல்லது பஞ்சமர் என்று ஒரு வகை இருக்கிறார்களே! இவர்கள் ஏன் குறிப்பிட்ட காலங்களில் இறந்து விடுகிறார்களே?*

*விஷ்ணு சொன்னானாம்....*

***சாஸ்திர முறைப்படி வாழாதவனும், தனக்குரிய ஜாதித் தொழிலைச் செய்யாமல் பிற சாதியினர் தொழிலைச் செய்வ தனாலும், கடவுளை ஆராதனைச் செய்யாததினாலும், (அடுத்து எங்க வரான் பாருங்கள்)***

*சூத்திர குலத்தில் பிறந்தவன் பார்ப்பானை தெய்வம் என்று நினைத்து, பக்தி செய்து அவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து அடிமையாய் இருப்பானேயானால் அவன் சொர்க்கத்திற்குப் போவான்.*

***சூத்திரன் வேறு எந்த வேலைகளும் செய்ய வேண்டிய தில்லை! மேல் சாதிக்காரன் தொழிலை சூத்திரன் செய்தால் நரகம் தான் கிடைக்கும்!***

*பகவத் கீதை சொல்வது - பார்ப்பான் வேதம் படிக்க வேண்டும் - தவம் செய்ய வேண்டும் - நாட்டு மக்களின் நலனுக் காக ... இதற்காக அவன் பணம் எதுவும் வாங்கக் கூடாது - அன் றாட சாப்பாட்டுக்குத் தேவையான உணவுப் பொருளை மட்டுமே வாங்கிக் கொள்ள வேண்டும்! இவ்வாறு செய்யும் புரோகிதர் யாராவது உண்டா? ஒரு நாளைக்கு ஒருவன் 5 கிலோ அரிசி சாப்பிட முடியுமா? இதுவல்லாமல் துணி, பூமி, ஆபரணங்கள் வேறு - இதுபோல ஒவ்வொரு மாதமும், ஆண்டுதோறும் புண்யாகம், கணபதி பூசை, திவசம், கருமாதி, கல்யாணம் செய்து வைப்பது கிரகப் பிரவேசம், போன்ற பலவித வருமானங்கள்.*



*கீழ் சாதியில் பிறந்த நாம் நம் சாதிக்குரிய தொழிலைச் செய்யாமல் வேறு சாதிக்காரன் தொழிலைச் செய்தால் நரகம் தான் கிடைக்குமாம். ஆனால் இன்று பார்ப்பனர்கள் அவர்களது சாதித் தொழிலைச் செய்யாமல் - டாக்டராக, இன்சினியராக, அரசு உயர் அதிகாரிகளாக, நிலச் சொந்தக்காரர்களாக, வழக்கறிஞர்களாக, நீதிபதிகளாக இன்னும். இதுபோல தொலைக்காட்சிகளில், வானொலி நிலையங்களில், பாகவதர்கள் போன்ற எல்லா மேல் நிலைத் தொழில்களிலும் இருக்கிறார்களே? இவர்களுக்கும் நரகம் தான் கிடைக்குமா?*

# மகன்கள் பேரன்கள் கர்மம்...

**கருட புராணம் – பக்கம் – 68**

*கீழ் சாதியில் பிறந்த எவரும் பூணூல் அணியக் கூடாது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் மட்டுமே பூணூல் அணிய வேண்டும்.*

**நமது சிந்தனை**

*உண்மையாக நாட்டிலுள்ள அனைவரின் தேவைக்காக உழைக்கும் உழவர்கள் தொழிலாளர்கள், வீடு கட்டுவோர், கல் உடைப்போர், சாலை போடுபவர்கள் - சாக்கடையில் சுத்தம் செய்பவர்கள் போன்ற பயன்தரும் தொழில்களைச் செய்பவர்கள் பூணூல் அணியக் கூடாதாம்.*

*ஊரை வளைத்து உலையில் போடும் பார்ப்பனர்கள், மக்களின் வரிப்பணத்தில் அந்தப்புரத்தில் பெண்களுடன் கூத்தாடும் ஷத்திரியர்கள், வர்த்தகம் என்ற பெயரில் உழைப்பாளி மக்களைச் சுரண்டும் வைசியர்கள் (வணிகர்கள்).*

***இவர்கள் மட்டுமே பூணூல் அணியலாமாம். இதன் மூலம் நமக்கு விளங்குவது என்னவென்றால் பூணூல் போட்டவர்கள் அயோக்கியர்கள் என்றும், போடாதவர்கள் உழைக்கும் மக்கள் என்றும் அறியலாம்!***

*மேலும் கருட புராணம் சொல்கிறது....*

*5 வயதிற்கு மேல் 12 வயதுக்குள் ஒருவன் இறந்தால் நிச்சயமாக கருமாதி, திவசம் செய்ய வேண்டும். குடை, குடம்,*

குத்துவிளக்கு முதலானவற்றை பார்ப்பானுக்கு தானமாகக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இறந்தவன் மறு பிறவியில் மரமாகப் பிறப்பான்.... அந்த மரத்தினால் உலக்கை செய்யப்பட்டு, ஆண்டாண்டு காலமாக இடி வாங்குவான்.

முறைப்படி தான தர்மங்கள் கொடுத்து கருமாதி செய்தால் - மறு பிறவியில் நல்ல சாதியில் பிறந்து மகிழ்ச்சியாக வாழ்வான்....

பக்கம் - 70 இல்.......

ஒரு விபச்சாரிக்குப் பிறந்தவன் தகப்பன் இறந்த பிறகு கருமாதி, திவசம் செய்யும் போது பார்ப்பானுக்கு சாப்பாடு போட்டால் பெரும் பாபம் வந்துவிடும்.

அதனால் அவன் சாப்பாடு போடாமல் அதற்குத் தேவையான உணவுப் பொருட்களை பார்ப்பானுக்கு தானமாகக் கொடுத்தால் பாபம் கிடையாது!

விலைமாது அல்லாது தன்னுடைய உண்மையான மனைவிக்குப் பிறந்த மகன் - கருமாதி, திவசம் செய்யும் பொருட்டு தீர்த்த யாத்திரை செல்லலாம். அன்னப்பறவை வடிவிலாவது, ஆமை அல்லது மான் வடிவிலாவது தான தர்மங்கள் செய்யலாம்.

மனைவி அல்லது விபச்சாரிக்குப் பிறந்த மகன், அன்னப் பறவை வடிவில் கருமாதி, திவசம் கொடுக்கக் கூடாது. ஆமை அல்லது மான் வடிவில் கொடுக்கலாம்!

விஷயத்திற்கு வர்ரான் பாருங்க.........

சூத்திர மரபில் பிறந்த எவனும் அன்னப் பறவை வடிவில் கருமாதி, தவசம் கொடுக்கக் கூடாது! அவ்வாறு கொடுத்தால் - கொடுத்தவனும் வாங்கியவனும் - அதைச் சாப்பிடவர்களும் நரகத்திற்குத்தான் போவார்கள்-

இதன் பொருள் என்ன? சூத்திரர்கள் எல்லாருமே விபச்சாரிக்குப் பிறந்தவர்கள் என்பதை நாசூக்காகச் சொல்கிறான் பாருங்கள்! மேலும் பக்கம் 70 இல் விஷ்ணு சொல்வதாக யார் சிறந்த பிறவி?...

கருடா! ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கும், அதைவிட கீழ் சாதிக்காரனுக்கும் பிறந்த மகனும், பார்ப்பானுடைய மகளுக்கும்,



முற்றும் துறந்த சன்னியாசி ஒருவனுக்குமாக பிறந்த மகனும், அண்ணன், தங்கைக்கு பிறந்த ஆண் பிள்ளையும் சண்டாளன் ஆவார்கள். ஒருவன் தனது சாதியிலேயே திருமணம் செய்து அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சிறந்தவர்கள்!

**பக்கம் 74 – 75 – 77 இல் கருட புராணம்**

பார்ப்பானுக்கு ஏவல் செய்வதே சூத்திரனுக்குரிய தொழிலாகும். அதுபோலவே கணவனுக்கு ஏவல் செய்வதே பத்தினிப் பெண்களின் தொழிலாகும் ....

மேலும்..... பப்ரு வாகனன் கருமம் செய்தால்

காட்டிற்கு தன் சேனைகளுடன் வேட்டையாடச் சென்ற, அரசன் பப்ரு வாகனன் - ஒரு மானைத் துரத்திச் சென்றான்- வெகு தூரம் ஓடிச் சென்ற மான் மறைந்து விட்டது!

தனிமையான அரசன், ஓய்விற்காக ஒரு மரத்தடியில் அமர்ந்தான் - அப்போது எலும்பும் நரம்பும், தசையும் இல்லாத (?) உடலை உடைய (?) பார்ப்பதற்கு பயத்தைக் கொடுப்பதுமான தோற்றத்தையுடைய ஒரு பிரேதம், பல பிரதேங்களோடு அங்கு மிங்கும் ஓடுவதையும் - பசி, தாகத்தோடு வருவதையும் கண்டானாம்.

அந்தப் பிரேதம் அரசனிடம் நெருங்கி வந்து அரசனே! உன்னை நான் காணப் பெற்றதால் - பிரேத ஜன்மம் நீங்கி நற்கதியை அடைவேன் என்று கூறியதாம்.

உடனே பப்ரு வாகனன் அந்தப் பிரேதத்திடம் நீ யார்? உன் வரலாறு என்ன என்று கேட்டான்.

வைதீசம் என்ற பட்டணத்தில் நான் வைசியனாகப் பிறந்து திருமணம் செய்து வாழ்ந்து வந்தேன். என் பெயர் தேவன். நான் என் வாழ் நாள் முழுவதும் பார்ப்பனர்களையும் தெய்வத்தையும் மதித்து ஆராதனைகள் செய்து விரதங்களும் கடைப்பிடித்து வந்தேன்.

கோவில்களைச் செலவு செய்து புதுப்பித்தேன். ஒரு நாள் இறந்து விட்டேன். எனக்குக் கருமாதி, திவசம் செய்ய வாரிசு யாரும் இல்லாமல் போனதால் இப்படி பிரேத ஜன்மம் எடுத்தேன். நீ இந்த நாட்டின் காவலன். ஆகவே நீ எனக்காகப் போய் கருமாதி, திவசம்

கொடுக்க வேண்டும். என்னிடம் விலைமதிக்க முடியாத மாணிக்கம் ஒன்றுள்ளது - அதை உனக்குத் தருகிறேன் என்று சொல்லி மாணிக்கத்தைக் கொடுத்தது.

**நமது சிந்தனை**

இறந்த பிறகு ஆவி வடிவில் போனவன் மாணிக்கத்தை எப்படிக் கொண்டு போனான்? அரசனிடம் இல்லாத மாணிக்கத்தை விட விலை மதிக்க முடியாத மாணிக்கம் இவனுக்கு எப்படி கிடைத்தது? எலும்பு, நரம்பு, தசை இல்லாத இந்தப் பிரேதம் மாணிக்கத்தை எப்படி பிடிக்க முடியும்? ஒரு பொருளைப் பிடிப்பதற்கு நரம்பு, எலும்பு அவசியம் தேவை? தசையில்லாத பிரேதம் - அரசனை எப்படி அடையாளம் கண்டது? இதையெல்லாம் கேட்டால் நாம் நாத்திகர்கள்.....



மேலும் அரசன் அந்தப் பிரேதத்திடம் கேட்டானாம் - நீ தான் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறாயே! பிறகு உனக்கேன் பிரேத ஜன்மம் வந்தது?

அதற்குப் பிரேதம்............



**அரசே, பார்ப்பனர்களுடைய பொருளையும், செவிடன்,குருடன்,ஊமை இவர்களுடைய பொருள்களையும், மோசம் செய்து அபகரித்தவன் எத்தகைய தான தர்மங்களைச் செய்திருந்தா லும் அவன் பிரேத ஜன்மத்தையே அடைவான்.**

**நமது சிந்தனை**

என்ன சொல்ல வருகிறான் பாருங்கள்- நீ என்ன கோயில் கட்டினாலும், தான தர்மங்கள் செய்தாலும் அதற்காக பார்ப்பா னுடைய பொருளை சம்பாதிக்கக் கூடாது என்கிறான்..... மேலும் அதற்குப் பரிகாரமாக என்ன சொல்லுகிறான் பாருங்கள்....

அரசன் கேட்கிறான்..... பிரேத ஜன்மம் அடைந்த பிறகு, அது எப்படி நீங்கும்?.....

பிரேதம்..... அரசே! சுருக்கமாகச் சொல்கிறேன் கேள்! ஸ்ரீமந் நாராயணனைப் போல அழகிய சிலை ஒன்றைச் செய்து, சங்கு, சக்ரம், பட்டு முதலியவற்றால் அலங்கரித்து, கிழக்கில் ஸ்ரீதரனையும், மேற்கில் மகா சூரனையும், பிரம்மனையும், ருத்ராதியினரையும், மகா விஷ்ணுவையும் நிலை நிறுத்தி, பூஜைகள் செய்து வணங்கி, அக்னியிலே யாகம் செய்து. மீண்டும் நீராடி, கருமாதி செய்து 13 பார்ப்பான்களை வருவித்து, அவர்களுக்கு குடை, பல்லக்கு, மோதிரம், ஆசனப் பலகை, துணி மணிகள், பொன் முதலியவற்றை தானமாகக் கொடுத்து, சிறப்பான விருந்து படைத்து, சய்யா தானம், கடக தானம் முதலியவற்றைக் கொடுத்தால் இறந்தவன் பிரேத ஜன்மத்திலிருந்து விடுபடுவான் என்றதாம்.

கருடன் விஷ்ணுவிடம் மேலும் கேட்கிறான் மேற்சொன்ன தானங்கள் அல்லாது இன்னும் வேறு என்னென்ன தானங்கள் கொடுத்தால் பிரேத ஜன்மம் நீங்கும்? என்று கேட்டதாம்.

அதற்கு விஷ்ணு - பொன்னால் பல குடங்கள் செய்து - அவற்றில் பாலும் நெய்யும் நிரம்பும் வரை ஊற்றி - அஷ்டதிக் பாலகர்களையும், என்னையும் ஆராதனை செய்து அந்தக் குடங்களை பார்ப்பனர்களுக்கு தானமாகக் கொடுத்தால் பிரேத ஜெனமம் நீங்கும் என்றானாம் - விஷ்ணு ....

**பலவகை தானங்கள் ......... பக்கம் – 81**

*(அரைத்த மாவயே அரைப்பது போல மீண்டும் மீண்டும் எல்லா அத்தியாயங்களிலும் தானம் என்கிற பெயரால் - உழைக்காமல் - தாங்கள் வளமுடன் வாழ என்னென்ன தேவைகளோ - அத்தனை செல்வங்களையும், இறந்தவனின் பெயரால் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் சொல்வது......)*

இங்கே விஷ்ணு சொன்னதாகச் சொல்லப்படுகிறது.

*கருடனே! தானங்களில் சிறந்தது பருத்தி தானமே மகா தானம் - நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமணர்கள் அணியும் பூணுலுக்கு பருத்தியே உகந்தது.*

ஆசாரி, குயவன், நெசவுத் தொழில் செய்யும் சேடர்கள், வைசியர்கள் இவர்கள் பருத்தி நூலால் ஆன பூணூல் அணியக் கூடாது - இவர்கள், ஷணப்ப நூல் என்னும் சணல், மற்றும் புற்களினால் ஆன நூலையே பூணூலாக அணிய வேண்டும்! *(புற்களை எடுத்துப் பூணூல் போட்டால் ஒரு நாள் கூட நிற்காது. தினம் இவனுக்கு பூணூல் தயார் செய்ய புல்லைப் பறித்து பதப்படுத்தி சுமார் இரண்டு மூன்று மணி நேரம் செலவு செய்து பூணூல் தயார் செய்ய வேண்டும். சணலும் தண்ணீர் பட்டால் அறுந்து விடும். அதையும் தினமும் தயார் செய்து கொள்ள வேண்டும்! இன்றும் கூட சிறைக் கைதிகளில் பார்ப்பானைத் தவிர மற்ற கைதிகள் பூணூல் அணிய முடியாது! வாழ்க ஜனநாயகம்!)*

மேலும் தில தானம் எனப்படும் எள் தானம், கோதானம் எனப்படும் பசுமாடு தானம், பூதானம் எனப்படும் விவசாய நிலங்களை தானமாக வழங்குதல், சொர்ண தானம் எனப்படும் தங்கத்தை தானமாக வழங்குதல், தானியங்களையும் தானமாகக் கொடுத்தால் மகா பாபங்கள் (அதாவது கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மாற்றான் பொருளை வஞ்சத்தால் திருடுதல், நம்பிக்கை துரோகம், வெடி குண்டு வைத்தல் முதலிய செயல்கள் போலும்!) அனைத்தும் உடனே விலகிவிடும்!

மேற்சொன்ன அனைத்து தானங்களையும் பார்ப்பானுக்கு மட்டுமே தர வேண்டும்! மங்கையர்களுக்கும், தனக்கு வேண்டியவர் களுக்கும் உத்தேசமாகக் கொடுக்கலாமே தவிர தானமாகக் கொடுக்கக் கூடாது!



பக்கம் - 82 இல் எள்ளையும், இரும்பையும் தானமாகக் கொடுத்தால் எமன் மகிழ்ச்சி அடைவான்! லவணத் தானம் செய்தால் எமினிடத்தில் பயப்பட வேண்டியதில்லை! பருத்தியை தானமாகக் கொடுத்தால் எமதூதர்களிடம் பயப்படத் தேவையில்லை!

தானியங்களை தானமாகக் கொடுத்தால் எமனும், அவனது தூதர்களும் மகிழ்ச்சியடைவார்கள். மேலும் அவர்கள் இறந்த ஜீவனுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வார்கள்!

**நமது சிந்தனை**

தானியங்களைக் கொடுத்தால் செத்தவனுக்கு அனைத்து உதவிகளையும் எமனும், தூதர்களும் செய்வார்களாம். அப்படியானால் இறந்தவன் கவலைப்படத் தேவையில்லை! அவனுக்குத் தேவையான பிராந்தி, விஸ்கி, நிரோத் மற்றும் பெண்கள் முதலான அனைத்து தேவைகளும் பூர்த்தியாகி விடும்.

சொர்ண தானம், (தங்கத்தை) பசு தானம் செய்வதனால் அனைத்து பாபங்களும் போக்கும் ஆற்றல் கிடைக்கும்!

இரும்பை தானமாகக் கொடுத்தால் எம தூதர்கள் நம் வீட்டில் அடி எடுத்து வைக்கவும் அஞ்சுவார்கள். மேலும் இரும்பைத் தானமாகக் கொடுத்தால் கண்ட மிருகன், ஔதும்பரன், சம்பரன், சார்த்தூலன் முதலிய எம தூதர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

விஷ்ணு என்றால் என்ன? கருடன்......

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், தங்கம், தானியம், தேன், நெய், பசு, யாகம், பார்ப்பான், அஜசங்கர இந்திராதி தேவர்கள் ஆகிய எல்லாமே விஷ்ணுதான்.

# தானத்தின் சிறப்பும் உயிர் பிரிதலும்

**கருட புராணம் – பக்கம் – 83**

விஷ்ணு சொல்கிறான்...... எனக்கு பூசைகள் செய்து, எனது கோயில்களில் தான தர்மங்களை அதிகமாகச் செய்பவன் நிறைய புண்ணியங்களை அடைவான்!

பார்ப்பானுக்கு பூமியை தானமாகக் கொடுத்தால் - பூமி எத்தனை அடி ஆழமாக இருக்கிறதோ அத்தனை ஆண்டுகள் சொர்க்கத்தில் இருப்பான்.

பார்ப்பானுக்கு மாரடி தானம் எனப்படும் பல்லக்கு தானம் கொடுத்தால் - எமலோகத்திற்கு குதிரை மீது போவது மட்டு மல்லாமல் முள் போன்ற துன்பங்கள் எதுவும் இருக்காது!

குடையை தானமாகக் கொடுத்தால் நிழல் மட்டுமல்லாமல் மழையில் நனையாமலும் எமலோகம் போகலாம்!

365-குத்து விளக்கை தானமாகக் கொடுப்பதனால் இரவில் நல்ல வெளிச்சத்தில் பயணிக்கலாம். (தினம் ஒன்று வீதம் ஓராண்டு முழுவதும்)

இவ்வாறு 365 குத்து விளக்கை தானமாகக் கொடுப்பதனால் - வெளிச்சம் மட்டுமல்லாமல் மேடு பள்ளம் இல்லாத பாதையாகவும் இருக்கும். அதுமட்டுமல்ல எமலோகத்தில் இவனது உறவினர்கள் யாராவது இருந்தால் அவர்களையும் அழைத்துக் கொண்டு நேராக சொர்க்கத்திற்குப் போய் விடுவான்!

பிறந்தவன் இறப்பது உறுதி என்பதனால் உயிருடன் இருக்கும் போதே இத்தகைய தானங்களைக் கொடுத்து நற்கதியை அடைய வேண்டும்!



செப்புத்தாலி, தான் சுயமாக சம்பாதித்த செல்வங்களை அனைத்தையும் தானமாகக் கொடுத்தவன் எவ்வித இடையூறும் இல்லாமல் ஆகாய வழியாக சொர்க்கம் சென்றடைவான்.

**தன் வாரிசுகளுக்கு ஒரு சல்லிக் காசு கூட வைக்காமல் இவனுக்கு தானமாகக் கொடுத்தால் நமக்குச் சொர்க்கமாம்!**

அரிசியும், எள்ளும், 13 கடகமும், மோதிரமும், குடையும், விசிறியும், செருப்பும் அவசியம் தானம் செய்ய வேண்டும்!

யானை, குதிரை இவற்றை தானமாகக் கொடுத்தால் சிறப்புப் புண்ணியங்கள் உண்டாகும்.

பாக்கு, மலர் இவைகளை தானமாகக் கொடுத்தால் எமதூதர்கள் அடித்து உதைக்க மாட்டார்கள்.

ஆடைகளை தானமாகக் கொடுப்பதனால் கார்மேகம் போன்ற கருத்த மேனியும், சிகப்பான முடியும், பிறை போன்ற கடவாய்ப் பற்களும், அச்சம் தரும் பயங்கர உருவமும் கொண்டு ஜீவன் முன்பு எமதூதர்கள் நல்ல உருவத்துடன் (?) (உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?) தோன்றுவார்கள் என அருளிச் செய்தார்....

எல்லா பக்கங்களிலும் திரும்பத் திரும்பச் சொல்லுவதற்கு காரணம் ஒரு வேளை ஒரு பக்கம் படிக்காவிட்டாலும் மறுபக்கம் படித்து விடுவார்கள். என்பதனாலோ?

தேவேந்திரன் மயங்கிய கதையும், மாதவிலக்கு, தாம்பத்திய உறவுகள் பற்றி.....

**கருட புராணம் – பக்கம் – 85 – 87**

மீண்டும் செத்துப் போன எலி, தவளை முதலிய இரை களைத் தேடி குப்பை மேடுகளில் சுற்றித் திரியும் கருடன் விஷ்ணுவிடம் கேட்டதாம்

மனிதனின் உடலில் தோல், நரம்பு, எலும்பு, ரத்தம், தலை, கை, கால்கள், நாக்கு, மூக்கு, ரகசிய உறுப்பு, நகம், முடி முதலியவற் றால் அமைக்கப்பட்டு, இந்திர ஜாலம் போலத் தோன்றுகிறதே! இந்த உடல் எப்படி உண்டானது?

விஷ்ணுவின் பதில்....

மாதவிலக்கான பெண்கள் 4 நாட்கள் வீட்டிற்கு வெளியில் இருக்க வேண்டும்.

முன்பு ஒரு காலத்தில் இந்திரன் தன் அரியணையில் அமர்ந்து, ரம்பை, ஊர்வசி ஆகியோர் ஆடிய நடனத்திலும், கந்தவர்கள் இசைத்த கானத்திலும் அறிவு கெட்டு மயங்கி இருந்தான்-

அந்த சமயத்தில் தேவலோக வாத்தியாரான வியாழன் அங்கு வந்தான்.

இந்திரன் மங்கையர் மயக்கத்தில் தன் வாத்தி வந்ததையும் கவனிக்காமல், அவனுக்கு செலுத்த வேண்டிய மரியாதையையும் - செலுத்தாமல் - ஆடுகிற பெண்களின் அங்க வளைவுகளிலும், நெளிவுகளிலும் மோகவயப்பட்டிருந்தான்.

வியாழனான வாத்தியும் ஆயிரம்கண்ணன் தனக்கு வரவேற்பளித்து கௌரவிக்காமல் இருந்ததைக் கண்டு மனம் நொந்து வெளியேறிவிட்டானாம்.

அதனால் இந்திரனின் செல்வங்கள் சிதைந்து போனதாம். இதை உணர்ந்த இந்திரன் வாத்தியை மதிக்காததே இதற்குக் காரணம் என்பதை உணர்ந்தானாம்.

உடனே மனம் வருந்தி வியாழனைத் தேடித் சென்றானாம். ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லையாம். குழம்பிய உள்ளத்தோடு பிரம்மனிடம் போய் நடந்ததைக் கூறினானாம்.

பிரம்மன் சிந்தித்தான். வாத்தியை இகழ்ந்ததால் தீவினை கொழுந்து விட்டு வளர்ந்துள்ளது என்பதை அறிந்து, அதற்கேற்ப இந்திரனை நோக்கி,

இந்திரா! நீ செய்தது தப்புதான், அதற்காக அவன் உன் செல்வங்களைச் சிதைத்ததும் சரிதான், இருந்தாலும் உன் வாத்தி வரும் வரை உனக்கு தற்காலிகமாக ஒரு வாத்தியை ஏற்பாடு செய்து தருகிறேன்.

தான தர்மங்கள் செய்வதில் சிறந்தவனான துவஷ்டாவின் மகன், விச்சுவபுருஷன் என்று ஒருவன் இருக்கிறான். அவனுக்கு மூன்று தலைகள் உண்டு. சீரிய ஒழுக்கமுடையவன். அறிவில் சிறந்தவன். அவனையே நீ இடைக்கால வாத்தியாராகக் கொள்வாயாக என்று பிரம்மன் சொன்னான்.



இந்திரனும் கருடன் சொன்னபடியே விச்சுவபுருஷனை தன் வாத்தியாராகக் கொண்டானாம். இந்திரன் வேள்வி ஒன்று செய்ய விரும்பி, தன் விருப்பத்தை புதிய வாத்தியிடம் சொன்னானாம்.

வேள்வி துவங்கியது - வஞ்சகனான புதிய வாத்தியார் தன் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு சென்றடையுமாறு ஆக்கம் கூறி மந்திரங்களைச் சொல்லி வேள்வியைச் செய்தானாம்.

புதிய வாத்தியின் வஞ்சகத்தை அறிந்த இந்திரன், அவனது மூன்று தலைகளையும் வெட்டிச் சாய்த்தானாம்.

**நமது சிந்தனை**

முதலில் விச்சுவபுருஷன் சீரிய ஒழுக்கமுடையவன் என்று பிரம்மன் சொல்கிறான். அவன் வஞ்சகன் என்று இந்திரன் (அவனது) வாத்தியாருடைய தலைகளையே வெட்டிச் சாய்க்கிறானாம்- இவன்கள் வாத்தியைக் கூட மன்னிப்பது கிடையாது!

அவ்வாறு வாத்தியின் 3 தலைகளையும் வெட்டிய உடன் - அந்த வாத்தி செத்துப் போனானாம்!! ஆனால் அவனுடைய தவ வலிமையினால் சோமபானம் (தேவலோக டாஸ்மாக்) செய்யும் தலை - காடை எனப்படும் பறவையானதாம். சுரா பானம் செய்யும் தலை ஊர்க்குருவி ஆனதாம். அன்ன பானம் செய்யும் தலை கிச்சிலிப் பறவையானதாம்.

கெட்டவனாக இருந்தாலும், தன் வாத்தியின் தலையை வெட்டியதால் இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்ததாம். அதனை சரி செய்வதற்கு இந்திரனுடைய ஆட்கள், பெண்களையும், மண்ணையும், தண்ணீரையும் வேண்டி இந்திரனுக்குப் பிடித்த தோஷத்தைப் பங்கு போட்டுக் கொடுத்தார்களாம்.

அப்படி அப்பங்குகளை பெற்றுக் கொண்ட பெண்களும், மண்ணும், நீரும் தேவர்களைப் பார்த்து, இந்தப் பாவங்களை நாங்கள் எப்படி போக்கிக் கொள்வது? என்று கேட்டார்களாம்.

அதற்கு தேவர்கள்-

நீரில் உள்ள தோஷம் நுரை வரும் போது கழிந்து விடும்!

மண்ணில் உள்ள தோஷம் உவராகக் கழிந்து விடும்!

பெண்களின் தோஷம் மாதவிலக்கு வரும் போது கழிந்து விடும்! என்றார்களாம்.

மேலும் மண்ணும், நீரும், பெண்களும் இந்தப் பாபத்தை நாங்கள் சுமப்பதால் எங்களுக்கு பயனேதும் உண்டா? என்று கேட்டார்களாம்.

அதற்கு தேவன்கள்,

கருவடைகிற வரை கணவனுடன் களிக்கலாம்

மண்ணைத் தோண்டிய பள்ளம் தானாகவே (மூடிவிடும்!)

நீர் இறைக்க இறைக்க சுரக்கும்-

மரம் வெட்ட வெட்ட துளிர்க்கும் - இதுதான் பலன் என்றார்களாம்.

ஆகவே பெண்கள் பிரம்மஹத்தி தோஷம் பிடித்தவர்களா கிறார்கள் - எனவே மாதவிலக்கான பெண்களை 4 நாட்கள் பார்த்தவர்களுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்து விடும். எனவே அவர்களை யாரும் பார்க்கக் கூடாது. மாத விலக்கான பெண்-

முதல் நாள் சண்டாளப் பெண் போல் இருப்பாள்!

இரண்டாம் நாள் கொலைகாரியைப் போல் இருப்பாள்!

மூன்றாம் நாள் ஆடை ஒலிப்பானைப் போல் இருப்பாள்!

நான்காம் நாள் குளித்த பிறகு சிறிது தூய்மை அடைவாள்!

ஐந்தாம் நாள் வீட்டு வேலைகளைச் செய்யும் வகையில் சுத்தமாவாள்!

மாத விலக்கான 6 ஆம் நாள் முதல் 18 ஆம் நாள் வரை வரும் நாட்களில் இரட்டையாக வரும் நாட்களில் ஆண் குழந்தையும், ஒற்றையாக வரும் நாட்களில் பெண் குழந்தையும் ஏற்படுமாம். ஆறாம் நாள் முதல்18 ஆம் நாள் வரை உற்பத்தியாகும் குழந்தைகள் விஷ்ணு பக்தியுடையதாக இருக்குமாம்.

இஸ்லாமிய, கிறிஸ்துவ இனத்தில் தோன்றும் குழந்தைகளுக் கும் இந்த விஷ்ணு பக்தி வருமா?



இந்திரனுக்கு ஆயிரக்கண்ணன் என்று பெயர் வந்ததற்கு என்ன காரணம் தெரியுமா? இன்றும் கூட கண்ணாயிரம் என்ற பெயருடைய பலர் இருக்கிறார்கள். இந்தக் கதை தெரிந்தால் அவர்கள் வெட்கப்படுவார்கள்!

தேவலோக ரிஷியின் மனைவியான அகலிகையை இந்திரன் எப்படியாவது ஒருநாள் அடைந்தே தீருவேன் என்று சபத மெடுத்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டானாம் அவள் சிறந்த பத்தினிப் பெண் ஆனதால் இந்திரனின் பாச்சா அவளிடம் பலிக்கவில்லை யாம். இதற்கு சந்திரனை அழைத்து இந்த மேற்படி விஷயத்தில் தனக்கு உதவுமாறு கேட்டானாம் இந்திரன், சந்திரன் அதற்கு ஒரு யோசனை சொன்னானாம்.

காலை 4 மணிக்கு சேவல் கூவும் போது அந்த முனிவன் குளிக்கப் போய் விடுவான். உனக்காக நான் நாளை விடிகாலை 2 மணிக்கு சேவலைப் போல் கூவுகிறேன். அவன் விடிந்து விட்டது என்று நினைத்து ஆற்றிற்கு குளிக்கப் போவான் - நீ போய் அகலி கையை எப்படியெல்லாம் அனுபவிக்கணுமோ அப்படியெல்லாம் செய்துகொள் என்று சந்திரன் சூப்பர் ஐடியா சொன்னா னாம்.(இவையாவும் தந்தை பெரியார் சொன்னது கிடையாது - புராணங்களில் உள்ளதுதான்)

அதே போல் சந்திரன் 2 மணிக்கு கூவினான். முனிவன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனான். திருட்டுத் தனமாக ஒளிந்திருந்த இந்திரன் உள்ளே சென்று, வந்த வேலையைத் தொடங்கினான். அவன் ரிஷியின் வேடம் தரித்தவனாக இருந்ததால் அகலிகை கணவன் என்று நம்பிவிட்டாளாம்.

குளிக்கச் சென்ற முனிவன் ஆறு சலனமில்லாமல் ஓடுவதைப் பார்த்து - ஞானக் கண்ணால் தன் வீட்டில் நடந்து கொண்டிருக்கிற விஷயங்களை உணர்ந்தானாம். உடனே கடுங் கோபம் கொண்டு கமண்டலத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து கதவை படபடவென்று தட்டினானாம்.

உள்ளே பிஸியாக இருக்கும் இந்திரன் பதறிப் போய் செய்வதறியாது திகைத்தானாம். அகலிகை கதவைத் திறந்தவுடன் - இந்திரன் பூனையாக மாறி கதவு இடுக்கு வழியாக தப்பித்து ஓடினானாம். அப்போது முனிவர் தன் கமண்டலத்திலிருந்த தண்ணீரை பூனை மேல் தெளித்து நீ எதற்கு ஆசைப்பட்டு வந்தாயோ

- உன் உடம்பெல்லாம் அதுவாகட்டும் என்று சாபம் விட்டானாம். இந்திரன் உடம்பெல்லாம் அதுவானதாம். எனவே தான் அவனுக்கு ஆயிரம் கண்ணன் என்று பெயர்.

விடிந்தவுடன் முனிவன் தன் சோகத்தை முறையிட இந்திர சபைக்குச் சென்றானாம். அங்கு இந்திரன் தன் உடல் முழுவதையும் துணியால் மூடிக் கொண்டு, இரண்டுகண்களை மட்டும் மூடாமல் அரச வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தானாம்.

அதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த முனிவன் - உண்மையை உணர்ந்தானாம். இந்திரன்தான் இவ்வளவு வேலைகளையும் செய்திருக்கிறான் என்பதை எண்ணி வெட்கினான்.

மாலை இந்திரன் முனிவனிடம் வந்து தவறுதலாக நடந்து விட்டது. இனிமேல் இப்படியெல்லாம் செய்ய மாட்டேன் - என்று மன்னிப்பு கேட்டானாம்.

அதற்கு முனிவன் நீ பூலோகத்தில் போய் பிறந்து - அங்கு காஞ்சிபுரத்தில் உள்ள புஷ்கரணியில் (குளத்தில்) தினமும் குளித்தால் நாள் ஒன்றுக்கு ஒரு சாமான் வீதம் 1000 நாட்களில் எல்லாம் மறைந்து விடும் என்று அருள் பாலித்தானாம் முனிவன்.

அதே போல இந்திரன் தினமும் குளித்து தன் அடையாளங் களைப் போக்கிக் கொண்டானாம்.



# சித்ரவதை எமலோகத்தில்



எமனுடைய அரண்மனை - பாப அவஸ்தைகள்

**கருட புராணம் - பக்கம் -91 - 92**

எமனுடைய உலகம் தங்கத்தினால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். தூண்கள் எல்லாம் வைரத்தால் ஆனது. அங்கு எப்போதும் ஆடல், பாடல் நடனம் நடந்த வண்ணமிருக்கும்.

அதன் நடுவில் பயங்கரத் தோற்றத்துடன் எமன் மகிழ்ச்சியோடு அமர்ந்திருப்பான்.

தெற்குப்புறத்தில் பாபம் செய்தவர்களை எம தூதர்கள் பலவிதமாக இம்சை செய்து கொண்டிருப்பார்கள். சிலர் உலக்கையால் உதை வாங்குவார்கள் - சிலர் கூரிய ஆயுதங்களால் சித்ரவதை செய்யப்படுவார்கள் சிலரை இரும்புச் சங்கிலியால் கோர்த்து தீயிலிட்டு வாட்டுவார்கள். இன்னும் சிலரை அக்னிக் குண்டத்தில் வேக வைப்பார்கள்.

அங்கு ஆண், பெண் பொம்மைகள் செம்பினால் செய்யப்பட்டு - நெருப்பினால் சூடேற்றப்பட்டு பழுத்துப் போயிருக்கும்.

வேறு பெண்ணைப் புணர்ந்தவனை பழுக்கக் காய்ச்சிய பெண் பொம்மையுடன் பொருத்தி சித்ரவதை செய்து மகிழ்வார்கள்!

அதே போல கணவனல்லாத வேறு ஆண்களைப் புணர்ந்த பெண்களை பழுக்கக் காய்ச்சிய ஆண் பொம்மையுடன் பொருத்தி சித்ரவதை செய்து மகிழ்வார்கள்!

**நமது சிந்தனை**

இது உண்மையாக இருக்குமானால் பகவான் கிருஷ்ணனின் கதி என்னவாக இருக்கும்? பார்வதியை திருட்டுத் தனமாக புணர்ந்த பிரம்மனின் கதி என்னவாக இருக்கும்? அகலிகை கதையில் சிக்கிக் கொண்ட இந்திரனுக்கும் இதே நிலை தானா? ஆறு ஆண்களிடம் போய் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்த குந்தியின் நிலையை நினைத்தால் குலையே நடுங்குதே! இதே போல் சொன்னால் இந்து மதக் கடவுள்கள் ஒருபயல் கூட தேறமாட்டான்கள்.



# சில தர்மங்களும் - தீட்டுகளும்

**கருட புராணம் - பக்கம் - 94-96**

கருடனிடம் விஷ்ணு சொல்கிறான்....

கிருத யுகத்தில் தவம் செய்தாலே போதும்!

திரேதா யுகத்தில் தானம் செய்தாலே போதும்!

துவாபர யுகத்தில் யாகம் செய்தாலே போதும்!

கலியுகத்தில் தானங்கள் செய்தால்தான் பாபங்கள் போகும்!

எந்த யுகமானாலும், கோயில், குளம், சத்திரம் கட்டுவது - தானம் கொடுப்பது நல்லது.

பார்ப்பான். க்ஷத்ரியன், வைசியன் ஆகிய மூன்று வருணத்தாருக்கு சூத்திரன் கருமாதி, திவசம், கொடுக்கலாம்-

பார்ப்பானுக்கு ஷத்ரியன் தவசம், கருமாதி செய்யலாம்!

பார்ப்பான் அவன் இனத்தாருக்கு மட்டுமே திவசம், கருமாதி செய்யாமல் வேறு யாருக்கும் செய்யக் கூடாது!

சூத்திரன் பிணத்துடன் பார்ப்பான் சுடுகாட்டிற்குச் சென்றால் 3 நாட்கள் தீட்டு ஏற்படும் பார்ப்பானுக்கு!

அந்த தீட்டு பட்ட பார்ப்பான் காவிரி போன்ற நதிகளில் குளித்தால் தீட்டு உடனே போய்விடும்.

இறந்தவனைக் குறித்து தினமும் தான தர்மங்கள் செய்வதனால் - இறந்தவனின் எரிக்கப்பட்ட உடல் மீண்டும் தோன்றுகிறது!

ஆகவே இறந்த பிறகு 10 நாட்கள் முறைப்படி தான தர்மங்கள் செய்ய வேண்டும் - இல்லாவிட்டால் இறந்தவன் சரீரம் கிடைக்காமல் வருந்துவான்!

நல்ல வில் வித்தைக் கற்றவன் குறி தவறாமல் அம்பெய்துவது போல இறந்தவனைக் குறித்து செய்யப்படும் தானங்கள் அனைத்தும் இறந்தவனையே போய்ச் சேரும்.

சூத்திரனுக்கு மட்டும் - அவனுடைய வீட்டில் யாராவது இறந்து விட்டால் 30 நாட்கள் தீட்டு உண்டு. இந்த 30 நாட்களும் அவன் இறந்தவனுக்காக தான தர்மங்கள் செய்ய வேண்டும்! இவ்வாறு செய்யும் போது சய்யாதானம் கொடுத்தால் இறந்தவனுக்கு சொர்க்கம் கிடைக்கும்.

**சூத்திரர்களுக்கு நாத்திகர்களாகிய நாங்கள் சொல்வது - நீங்கள் கொடுக்கும் பொருள்கள் அனைத்தும் இறந்து போன உங்கள் உறவினர்களிடம் போய் குறி தவறாமல் சேர்ந்து விடுமாம். ஆகவே நீங்கள் அவர்கள் சாப்பிட்ட உணவு எதுவோ அதையும், சாராயம் (அ) பிராந்தி சாப்பிடுபவர்கள் இறந்து போனால் அதையும், புழுங்கல் அரிசி, 4 முழம் வேட்டி அல்லது கோவணம் - லுங்கி, எது அவர்கள் வாழும் காலங்களில் எதை உடுத்தி இருந்தார்களோ அதை எல்லாம் கொடுத்தனுப்புங்கள் - அப்போதுதான் இறந்தவர்கள் திருப்தி அடைவார்கள்.**

அதைவிட்டு அவர்களுக்கு ஒத்துவராத பச்சரிசி, புடலங்காய், கொத்தவரை - சேனை 16 -முழம் வேட்டி - அங்கவஸ் திரம் இவை எல்லாம் கொடுத்தால் பயன்படுத்தத் தெரியாது.

சய்யாதானம் எனப்படுவது யாதெனில் நல்ல மரத்தினால் கட்டில் செய்து, அதற்கு தங்கம், வெள்ளியினால் பூண்கள் செய்து போட்டு முத்து மற்றும் ரெத்தினங்களால் அதை அலங்கரித்து, அதன் மேல் பாய் விரித்து - ஒரு கணவன், மனைவி உறவு கொள்ளத் தேவையான அனைத்துப் பொருட்களையும் அதன் மீது வைத்து, நவகிரகங்களை பூசித்து, சிவன், பார்வதி, பெருமாள், லட்சுமி ஆகிய 4 பேரும் இதில் படுத்து மகிழ்ச்சியடைய வேண்டும் என வேண்டிக் கொண்டு கட்டிலுடன் பார்ப்பானுக்கு தானமாகக் கொடுக்க வேண்டும். மேலும் அந்தப் பார்ப்பானை வலம் வந்து வணங்க வேண்டும்!



# ஏமக் கிரியைகள்

**கருட புராணம் – பக்கம் – 98**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் இறப்பது நல்லதல்ல.

ஆகவே இந்த ஐந்து நட்சத்திரங்கள் உள்ள நாட்களில் இறந்தவர்கள் கூடுதலாக தானம் கொடுக்க வேண்டும்.

எள், பசுமாடு, மான், நெய் போன்றவைகளை தாராளமாகக் கொடுத்தால் இறந்தவன் ஓரளவிற்கு நிம்மதி அடைவான்.

ஊரில் ஒருவன் இறந்து விட்டால், யாரும் சாப்பிடக்கூடாது! பல் துலக்கக் கூடாது தண்ணீர் கூட குடிக்கக் கூடாது! எந்தக் காரியங்களும் செய்யக் கூடாது!

**நமது சிந்தனை**

ஊரில் யாராது இறந்து விட்டால் எந்தக் காரியமும் செய்யக் கூடாதாம். இது உண்மையானால் இன்று தமிழ் நாட்டில் மட்டும் எத்தனை பேர் தினமும் இறந்து போகிறார்கள் எந்தக் காரியமும் நடக்கக் கூடாது என்றால் மருத்துவமனை மூடப்பட வேண்டும். பஸ், லாரி முதல் கடைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும் - கோவில்கள் உட்பட.

அர்ச்சனை அபிஷேகம் செய்யக் கூடாது அதற்கான சாமான்கள் விற்கக் கூடாது பெட்ரோல், டீசல், பூணூல், எதுவும் கிடைக்காது. தினமும் காஞ்சியில் ஒருவர் இறப்பது உறுதி பெரியவாள் முதல் சின்னவாள் வரை தினமும் சாப்பிட முடியாதே!

பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை தர வேண்டும்; ஆசிரியர்களுக்கும் வேலையில்லை; அலுவலகங்கள் அனைத்தும் நடக்காது. இது சாத்தியமாகுமா? உண்மையாக இருக்க முடியுமா?

# பிரயோபவேசம், தலயாத்திரை

**கருட புராணம் - பக்கம் -98**

ஒருவன் சன்னியாசியான பிறகு ஆபாசங்களில் ஆசை கொண்டு யாருக்கும் தெரிந்தோ, தெரியாமலோ பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கக்கூடாது. அப்படி வைத்திருந்தால் அவனுக்கு தீராத வியாதிகள் வரும். அவனை விட பெரிய பாவியானவன் யாருமில்லை!

ஒருவன் நான் புனித யாத்திரை போய் நல்ல தலத்தில்தான் இறந்து போவேன் என்று உறுதி கொண்டு, பார்ப்பானிடம் சங்கல்பம் செய்து கொண்டு போவானேயானால் அவன் புண்ணியம் செய்தவன் ஆகிறான் - அவ்வாறு சாகாமல் திரும்பி வந்தால் அவனை விட பாவியும் கிடையாது!

அவ்வாறு புனித யாத்திரை செல்லும்போது விஷ்ணு கோவிலுக்குச் செல்வானேயானால் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒரு பசுமாடு தானம் கொடுத்ததற்குச் சமம். ஏதாவது ஒரு காரணத்தினால் புனித யாத்திரையை தொடர முடியாமல் திரும்பி விட்டால் ஒவ்வொரு பாத சுவடுகளுக்கும் ஒரு பசுமாட்டைக் கொன்றதற்குச் சமம்.

ஒருவன் செய்யும் பாவங்கள் திவ்ய தேசங்களில் செய்யும் பகவத், பாகவத சேவையினால் நிவர்த்தியாகிவிடும்.

**நமது சிந்தனை**

சன்னியாசி பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தால் அவனுக்கு வியாதிகள் வருமாம்! செத்துப் போன சங்கராச்சாரி பல மாதங்கள் (ஆண்டுகள்?) நோய்வாய்ப்பட்டு ஆர்.வெங்கட்ராமன் துணையோடு வெளிநாட்டிலிருந்து (SCAN) வரவழைக்கப்பட்டு ஒரு வழியாக இறந்து போனார். நமது ஓடிப் போன சங்கராச்சாரியின் கதியும் அதோ கதிதான்!



# சொர்க்கமும் நரகமும் யாருக்கு

**கருட புராணம் - பக்கம் - 101**

கருடன் கேட்கிறான்.........

பெருமாளே! தினமும் தானங்கள் எவ்வாறு செய்ய வேண்டும்?

விஷ்ணு ........ தினமும் பார்ப்பானுக்கு சாப்பாடு போட்டு, சாப்பாடு, தண்ணீர் போன்றவைகளை பாத்திரங்களில் நிரப்பி 365 நாட்களும் தானமாகக் கொடுத்தால், கொடுத்தவன் இறந்த பிறகு எமலோகம் இழுத்துச் செல்லப்படும் போது எம தூதர்கள் அவனை எவ்வித இடையூறும் செய்யாமல் அழைத்துப்போவார்கள்.

இது அல்லாமல் இறந்த 12 ஆவது நாள் மேற்சொன்னது போல் 12 பாத்திரங்களில் தீனியும், தண்ணீரும் தானமாகக் கொடுக்க வேண்டும். இறந்தவன் ஏழையாக இருந்தால் ஒரு பெரிய பாத்திரமும், ஒரு சிறிய பாத்திரமுமாக கண்டிப்பாக இரண்டு பாத்திரங்களிலாவது தர வேண்டும்.

மேலும் கருடன் கேட்கிறான்........ மோட்சம் கிடைக்க என்னவெல்லாம் செய்ய வேண்டும்? அயோத்தி, மதுரை, காசி, காஞ்சி, ஸ்ரீரங்கம் ஆகிய ஐந்து ஊர்களில் செத்தவர்கள் மோட்சம் அடைவார்கள்!

***7 அல்லது 8 வயது பெண் குழந்தையை திருமணம் செய்தவர்கள் நிச்சயம் மோட்சம் அடைவார்கள்!***

வேதசாத்திரம் படித்தவன் மோட்சத்திற்குப் போவான்!

**பெண், நிலம், வீடு, கன்றுடன் பசு, யானை முதலான வற்றை பார்ப்பானுக்கு தானமாகக் கொடுத்தவன் நிச்சயம் சொர்க்கத்திற்குப் போவான்.**

கிணறு,நடைபாதை, குளம், கோயில்களை புதுப்பிப் பவர்கள் - அவற்றை உண்டாக்கியவர்களை விட நல்லுலகை அடைவார்கள்.

# தீட்டு எனப்படும் ஆசௌசம்

**கருட புராணம் - பக்கம்-104**

ஒருவன் இறந்து விட்டால், அவன் குடும்பத்தில் 10 நாட்கள் முதல் 30 நாட்கள் வரை அவரவர் சாதிக்கு ஏற்றவாறு தீட்டு உள்ளது!

ஒருவன் தீட்டு ஏற்படும் முன்பு பார்ப்பானுக்கு தானம் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அதை தீட்டு வந்த பிறகும் கொடுக்கலாம். அதனால் பாதகம் ஒன்றுமில்லை! ஆனால் தானம் கொடுப்பதைத் தவிர வேறு எந்தக் காரியங்களும் செய்யக் கூடாது!

பசுமாடுகளையும், பார்ப்பனர்களையும், பெண்களையும் பாதுகாக்கும் பொருட்டு உயிரை இழக்க நேரிட்டால் அவனுக்கு ஒரே ஒரு நாள் மட்டுமே தீட்டு உண்டு! அப்படியில்லா விட்டால் அவர்கள் குளித்த உடன் தீட்டு போய் விடும்!

சூத்திரப் பெண்ணைத் தொட்டு விட்டோ, அல்லது துணி வெளுக்கும் வண்ணாத்தியை தொட்டு விட்டோ குளிக்காமல் ஒருவன் மரணமடைந்தால் - அவனுக்கு நிச்சயம் நரகம் தான்! அவர்கள் குடும்பத்திற்கு தீட்டு கிடையாது!

எதிர்பாராத விதமாக துர் மரணமடைந்தால் - பார்ப்பானுக்கு ஆறு மாதம் கழித்து - ஷத்திரியனுக்கு இரண்டு மாதம் கழித்து - வைசியனுக்கு 15 நாட்கள் கழித்து - சூத்திரனுக்கு உடனேயும் கருமம் செய்ய வேண்டும் .

யாராவது விபத்தில் மரண மடைந்தால் - விஷ்ணுவை வழிபட்டு, பார்ப்பனர்களுக்கு சாப்பாடு போட்டு, தானியங்களை தானமாகக் கொடுத்து தர்ப்பணம் செய்தால் துர்மரணம் சரியாகி விடும்.

அவ்வாறு செய்த மறுதினம் தங்கத்தினால் ஒரு விஷ்ணு சிலையும் வெள்ளியினால் ஒரு பிரம்மன் சிலையும், இரும்பினால் எமனுடைய சிலையும் செய்து ஐந்து கும்பங்கள் வைத்து, அவற்றை நவரத்தினங்களால் நிரப்பி, அதற்கும் பூணூல் போட்டு பூசைகள் செய்து எட்டு வகை தானியங்களையும் சேர்த்து, பாத்திரங்களில் எள், ஹிரண்யம் வைத்து-



**ரிக் வேதம் ஓதிய பார்ப்பானுக்கு பயிருடன் கூடிய நிலத்தையும் சேர்த்து தானமாகக் கொடுக்க வேண்டும்**

யஜுர்வேதம் ஓதியவனுக்கு கன்றுடன் பசுவும், மேற்சொன்ன பொருட்களும் தானமாகக் கொடுக்க வேண்டும்!

சாம வேதம் ஓதியவனுக்கு சம்பா நெல்லும் மேற்சொன்னவைகளும் தானமாகக் கொடுக்க வேண்டும்!

இவ்வாறு செய்தால் விபத்தில் இறந்தவன் நற்கதி அடைவார்கள்!

**நமது சிந்தனை**

இவன்களை எல்லாம் லாரியை விட்டு ஏற்றிக் சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும் காரணம் வேதசாத்திரமும் படித்தவன் சொர்க்கத்திற்குத் தான் போவான் என்று அவனே சொல்லி இருக்கிறான்.

# தானம் செய்வதனால் ஏற்படும் பயன் - துன்பங்களுக்கு காரணம்

**கருட புராணம் - பக்கம் - 109 - 110**

நான்கு வேதங்களையும் படித்த பார்ப்பானுக்கு எந்தவித துன்பமும் வராமல் பார்த்துக் கொண்டவன். அஸ்வமேத யாகம் செய்தவனை விட பயனடைவான் - அத்தகையவன் யாகம் செய்தால், அசுரர்களும் மகிழ்வார் -

ஒரு அரசன் பார்ப்பானுடைய செல்வங்களை அபகரித்து, நால் வகை சைன்யங்களையும் சேர்த்து போருக்குப் போவானேயானால் அந்த சேனைகள் யாவும் அப்போர்க்களத்திலேயே அழிந்து போகும்!

தன் முன்னோர்களால் கொடுக்கப்பட்ட அல்லது நாம் பார்ப்பான்களுக்கு தானமாக கொடுத்த பொருட்களை, நமக்கு எத்தகைய வறுமை வந்தாலும் அபகரிக்கக் கூடாது!

அவ்வாறு எக்காரணம் கொண்டாவது பார்ப்பானுக்கு தானமாகக் கொடுத்த பொருட்களை அபகரித்தால் - அவன் நூற்றுப்

பதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் கிருமியாகப் பிறந்து அதிலேயே உழல்வான்.

பொருட்கள் மீது ஆசை கொண்டு அதனைப் பறிப்பதற்காகவே - கபட நட்பு கொண்டு - பார்ப்பானின் பொருட்களை அபகரித்தவன் நெடுங்காலம் நரகத்தில் உழல்வான்-

யாராவது ஒருவன் இரும்பையோ அல்லது விஷத்தையோ தின்று விட்டால் கூட அது ஜீரணம் ஆகுமாறு செய்து விடலாம் ஆனால் பார்ப்பான் பொருளை அபகரித்தால் அதை சரி செய்ய மூவுலகிலும் வழி இல்லை!

தெய்வத்தின் பொருள்களைத் திருடினாலும் வேதம் சொல்லுகிற பார்ப்பான் பொருளைத் திருடினாலும், அல்லது அவனை அவமதித்தாலும் - அவ்வாறு செய்தவனின் குலம் நாசமடையும்.

கடவுள் இல்லை என்று உளறுபவன் மகா பாவியாவான் - அவனுக்குத் திவசம், கருமாதி செய்யத் தேவையில்லை!

அவ்வாறு இறந்து போன நாத்திகனுடைய மகன் கருமாதி, திவசம் செய்ய விரும்பினால் ஏழு பார்ப்பான்களை வரவழைத்து - அவர்களை ஆசனத்தில் அமர்த்தி - அவன்களை வலம் வந்து பூசைகள் செய்து - தான தர்மங்கள் கொடுத்து தங்கத்தினால் பாம்பு செய்து அதையும் தானமாகக் கொடுத்தால் நாத்திகனும் நற்கதியடைவான்.

**தோழர்களே - எவ்வித உழைப்பும் இல்லாமல் நம் செல்வங்களை எல்லாம் கொள்ளையடிக்கும் வேதம் படித்த பார்ப்பனர்களின் செல்வத்தை நாம் வறுமை வந்த காலத்தில் கூட எடுக்கக் கூடாதாம்-**

**இவ்வாறு தானங்களும் பார்ப்பான்களுக்கு மட்டுமே செய்ய வேண்டும் என்கிறான். நவரத்தினங்கள் - தங்கத்தினால் - வெள்ளியினால் சிலைகள் - தங்க வெள்ளி பூண்கள் போட்ட கட்டில் - யானை, பயிருடன் கூடிய நிலம் - வீடு, சாப்பாடு, தானியங்கள் என்று ஒன்று கூட விடாமல் இல்லாத சொர்க்கத்திற்கு டிக்கெட் கொடுப்பதாகக் கூறி எப்படியெல்லாம் மோசடி செய்கிறார்கள் பாருங்கள்.**



நாம் நினைக்கலாம் இன்று இப்படி யாரும் தானம் கொடுப்பதில்லை என்று! உண்மைதான்- நாம் படிக்கக் கூடாத சாதியாக இருந்த போது அடித்த கொள்ளை தான் இன்றும் பல ஊர்களில் பார்ப்பனர்கள் கொழுத்த பணக்காரர்களாகவும் - நிலச்சொந்தக் காரர்களாகவும் இருக்கிறார்கள்.

தந்தை பெரியாரின் கடின உழைப்பினால் நம் மக்களுக்கு பக்தி போகாவிட்டாலும் கொஞ்சம் புத்தி வந்துள்ளதை நாம் பார்க்கிறோம்.

எனவேதான் காஞ்சி சங்கராச்சாரி கைதான அன்று தமிழ் நாட்டில் ஒரு சிறு சம்பவம் கூட நடக்கவில்லை! குஜராத்தில், மகாராஷ்டிரத்தில் பேருந்து எரிப்பு, கடையடைப்பு எல்லாம் நடந்தது.

இன்று பார்ப்பனர்கள் - அமெரிக்கா, லண்டன் என்று வெளிநாட்டிற்கு சென்று ஓடி ஒளிவதெல்லாம் - இனிமேல் நம் மோசடி பலிக்காது. சூத்திரர்களும் படிக்க எழுதத் தெரிந்து கொண்டு நல்ல பதவிகளில் வந்து விட்டார்கள் என்பதனால் - குடுமியை வெட்டி கிராப் வைத்துக் கொண்டு - பஞ்சகச்சத்தை விட்டெறிந்து நாகரீக உடை அணிந்து மற்ற மக்களைப் போல வாழ வேண்டியவனாகி விட்டான்.

முன்பு குடுமியுடன் புரோகிதம் செய்த பார்ப்பான் - இப்போது ஏதாவது ஒரு சைடு பிஸினஸாக - கிராப்புடன் கருமாதி செய்கிறான்.

நமக்கு அறிவு வளர வளர இது வெகு விரைவில் குறைந்து போகும்.

# அருணாசல புராணம்

இனி விஷ்ணுவின் மச்சான் சிவ பெருமானின் பெருமையைச் (?) சொல்லும் அருணாசல புராணத்தை பற்றி காண்போம்...

இந்த நூலின் முதல் பதிப்பு 2000 மூலம் எழுதியது:- எல்லப்ப நாவலர் பதிப்பாளர் - வே.சு.ரமணன் - தலைவர், ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை.

கருட புராணத்தில் செத்தவன் பேரைச் சொல்லி கொள்ளையடிப்பதற்காக பொய்களை உண்மைபோல் அவன் சொன்னான், இவன் சொன்னான் என்று கதை விட்டிருந்தான்.

இந்த அருணாசல புராணமோ பக்தி என்ற போதையின் பெயரால் பாமர மக்களை ஏமாற்றி அவர்கள் உயிருடன் இருக்கும் போதே அவர்களது செல்வங்களைப் பிடுங்குவதற்காக எழுதப்பட்டது.

இதுவரை எந்த ஒரு கடவுளும் வந்து எந்த பக்தனுக்கும் எந்த ஒரு உதவியும் செய்ததில்லை என்பதை அனைவரும் உணர்ந்துதான் இருக்கிறார்கள்.

நமக்கு ஒரு பிரச்சனை என்றால் மாவட்ட கலெக்டர் - தாசில்தார் - நகராட்சி அலுவலகம் - கோர்ட் - காவல் துறை - இது போன்று நம் கண்முன் இயங்கிவரும் அலுவலகங்கள் - அதில் இரண்டே இரண்டு கைகளுடன் நம் கண்முன் இருந்து நம் தேவைகளை முடிந்தவரை பூர்த்தி செய்து தருகிறார்கள்.

உங்களுக்கு ஒரு ரேஷன் கார்டு வேண்டுமென்று கடவுளிடம் கேட்டுப் பாருங்கள் கிடைக்குமா? அல்லது வேறு ஏதாவது உதவி கேட்டாலும் கிடைக்குமா? நிச்சயம் கிடைக்காது.

ஆனால் ஒன்று மட்டும் நடக்கும். நம் கையில் உள்ள கொஞ்சம் நஞ்ச சில்லரையும் அர்ச்சனை என்ற பெயரால்



தொலைந்து விடும். நம் பிரச்சனை தீராது - அர்ச்சனை செய்பவன் பிரச்சனைதான் தீரும். பணம் அவனிடம் போய் விடுகிறது.

**அருணாசல புராணம் – பக்கம் – 33 – பாடல் – 70**

குண்டகர், பதிகர், கோளகர், புலையர் -

கொலையர், உறுப்பினில் குறைந்தோர் -

கண்டர், நெடுந் தூரத்தில் இருப்போர் -

கருணை சேர் அருண பூ தரத்தை -

எண்தக ஒரு கால் நினைத்திட முக்தி -

இவரலால், விலங்கு, புள், மரங்கள் -

முண்டகம் முதலானவும் முள் காரை -

முளைத்திட முக்தியே பெருமால்

**இதன் பொருள்**

ஒரு பெண் தன் கணவனுக்கு அன்றி வேறு ஒருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களும் பாவிகளும், விதவைப் பெண்ணால் பெறப்பட்ட கோளகரும், நீசரும், கொலை செய்கிறவர்களும், உடல் ஊனமுற்றோரும், தீமை செய்கிறவர்களும், நெடுந்தூரத்தில் இருப்பவர்களும், கிருபை பொருந்திய அருணாசலத்தை ஒரு தரம் நினைக்க முக்தி உண்டாகும்.

இவையல்லாமல், மிருகங்கள், பறவைகள், காட்டு மரங்கள், தாமரை முதலிய கொடி பூண்டுகளும் அந்த ஊரில் முளைத்திட மோட்சம் கிட்டும்.

அண்ணாமலையாரை ஒரே ஒரு தரம் நினைத்தாலே செய்த தீமையெல்லாம் தீர்ந்து போவதோடு - மோட்சமும் கிடைக்குமாம்!

என்னஅயோக்கியத்தனம். இப்படி எதையாவது சொல்லியே படிப்பறிவில்லாத நம் மக்களை கோவிலுக்குள் வரவழைத்து அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருட்களையெல்லாம் பக்தியின் பெயரால் கொள்ளை அடித்திருக்கிறான்கள்.

மேலும் ரமண மகரிஷியை விட வேறு எவனும் அந்த

அருணாசலத்தை அதிகமாக நினைத்திருக்க முடியாது! ஆனால் அந்த மாமுனிவர் ரமணனோ புற்று நோயால் அவதிப்பட்டு செத்தார் என்பது மறைக்கப்பட முடியாத உண்மை! எதனால் அவருக்கு இந்த நிலை? ஏன் அவரை அந்த அருணாசலம் காப்பாற்றவில்லை?

இது ஒரு புறம் இருக்கட்டும் திருவண்ணாமலையில் பிறந்திருக்கும் இந்துக்கள் அருணாசலத்தை நினைக்காமலும், வழிபடாமலும் இருந்திருக்க வாய்பில்லை! அப்படியானால் அவர் கள் செய்த தவறுகள் எல்லாம் மன்னிக்கப் பட்டிருக்க வேண்டும்? அது உண்மையானால் அவ்வூரில் காவல் நிலையங்கள், நீதி மன்றங்கள், மருத்துவமனைகள் இவை எதுவும் தேவையில்லை தானே? பிறகு ஏன் மற்ற ஊர்களில் உள்ளது போலவே அந்த ஊரிலும் நோயாளிகளும், குற்றவாளிகளும் இருக்கிறார்கள்? இவர்கள் அனைவரும் மற்ற மதத்துக்காரர்களா? மற்ற சிவனுக்கெல்லாம் இல்லாத சிறப்பு இந்த அருணாசலத்துக்கு மட்டும் எப்படி வந்தது?

**அருணாசலபுராணம் – பாடல் – 71**

சிலையெலாம் லிங்கம் - அதுவே சிவலோகம்
தேவர் பாதவங்கள் - பாதவங்கள்
அலைஉலாம் புனல்கள் - சடைஉலாம் கங்கை
அருந்தும் ஊண் - அமரர் உண் அமுதாம்
உலவியே சொல் சுருதியாம் - உறங்கல்
மலைவு அறு சமாதி ஆகும் - அத்தலத்தை
மானுமோ மற்றொரு தலமே!

**இதன் பொருள்**

திருவண்ணாமலையில் உள்ள கற்கள் எல்லாம் சிவலிங்கங்களாம்! அதனால் அதுவே சிவலோகம் ஆகும்! அங்கு உள்ள மரங்கள் எல்லாம் - கேட்டதைத் தரும் கற்பகவிருஷம். அத்தலத்தில் உள்ள நீரெல்லாம் சுவாமிகள் சடையிலி ருக்கிற கங்கை நீராகும். அங்குள்ளவர்கள் சாப்பிடுவதெல்லாம் தேவர்கள் சாப்பிடும் தேவாமிர்தம். அந்த ஊரில் சுற்றி வந்தால் பூமியைச் சுற்றி வந்ததற்குச் சமம். அவ்வூரில் பேசப்படும் வார்த்தைகள் அனைத்தும் வேதமாகும். அந்த ஊரில் தூங்கினால் சிவ நிஷ்டை கூடி சமாதி இருத்தலாகும். ஆன படியினாலே அந்த தலத்திற்கு வேறு ஒரு தலம் சமமாகுமோ? என்பதுதான்.

அந்த ஊரில் உள்ள கற்கள் எல்லாம் சிவலிங்கம் என்பது



உண்மையானால் அவ்வூர் மக்கள் செருப்பை அணிந்து அந்த சிவலிங்கங்களின் மேல்தான் நடக்கிறார்களா? அல்லது பறந்து சென்று தங்கள் வேலைகளை முடித்துக் கொள்கிறார்களா?

சிறுநீர் கழித்தல், மலங் கழித்தல் முதலானவைகளையும் அந்த சிவலிங்கங்களின் மேல்தான் செய்கிறார்களா? அல்லது கல் இல்லாத இடமாகப் பார்த்து இந்த வேலைகளைச் செய்கிறார்களா?

அங்கு உள்ள மரங்கள் எல்லாம் கேட்டதைத் தரும் தேவலோக மரமாம். இது உண்மையானால் - அந்த ஊரில் கடை களே தேவையில்லையே ஒரு மரத்திடம் போய் ஒரு கலர் டி.வி.யும் - ஒரு செல்போனும் கொடு என்று கேட்டால் கிடைத்து விடுமே?

இது மட்டுமா? சங்கரராமனைக் கொலை செய்ய நல்ல அரிவாள் ஒன்று கேட்டாலும் கிடைத்து விடப்போகிறது! கொல்லர் களுக்கும் வேலையில்லை!

பசிக்குத் தேவையான உணவுகள் சிக்கன் பிரியாணி சாப்பாடு, சாராயம் இன்ன பிற சாதனங்களும் மரத்திடம் கிடைக்கு மென்றால் உலக மக்கள் அத்தனை பேரும் திருவண்ணாமலைக்கு வந்து விட மாட்டார்களா?

இவ்வளவு சக்தியுள்ள மரங்கள் இருக்கும் திருவண்ணா மலையில் அருணாசல ஈஸ்வரர் கோவிலில் பிச்சைக்காரர்கள் ஏன் மலிந்து கிடக்கிறார்கள்?

பொய் சொல்லுவதற்கு ஒரு அளவு வேண்டாமா? பாமர மக்கள் சிறிதும் சிந்திக்கக் கூடாது என்பதற்காகவே இது போன்ற அண்டப் புளுகுகளை அவிழ்த்து விடுகிறான்கள்!

அங்கு உள்ள நீரெல்லாம் - சிவபெருமான் - தன் சடையில் மறைத்து வைத்திருக்கும் வைப்பாட்டியான கங்கையின் நீராகுமாம். அப்படியானால் அங்குள்ள சாக்கடை நீர் - செப்டிங் டேங்கில் உள்ள நீர் எல்லாமே கங்கை நீர்தானா?

அங்கு உள்ளவர்கள் சாப்பிடும் உணவெல்லாம் தேவாமிர்த மாம்! உங்களுக்குத் தெரிந்து திருவண்ணாமலையில் தேவாமிர்தம் எங்காவது கிடைக்கிறதா? அல்லது அதை சாப்பிட்டவர்கள் யாராவது இருக்கிறார்களா?

அந்த ஊரைச் சுற்றி வந்தால் உலகையே சுற்றி வந்தது போலாகுமாம்! அப்படியானால் திருவண்ணாமலைக்கு போய் உலகையே விசா இல்லாமலேயே ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளைப் பார்த்து விட்டு, நமக்குத் தேவையான வெளிநாட்டுப் பொருட்களை ஏதாவது ஒரு மரத்திடம் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியுமா? அங்குள்ளவர்கள் சொல்லும் வார்த்தைகள் எல்லாமே வேதமாம். (நான் ஒருமுறை அங்கு போயிருந்த போது இரண்டு பேர் கட்டிப் புரண்டு கொண்டு - ஒருவன் போடா குச்சிக்காரி மகனே என்றும், மற்றவன் நீதான்டா தேவடியாப்பையன் என்றும் கண்டபடி பேசிக் கொண்டிருந்தார்கள் இதுவும் வேதம்தானோ?)

அங்கு தூங்கினால் சமாதிக்கு சமமாம். அப்படியானால் அங்கு தூங்கியவர்கள் மறுநாள் எழுந்திருப்பதே கிடையாதா?

ஏதோ எல்லப்ப நாவலன் என்ற ஒரு அயோக்கியன் காட்டு மிராண்டி காலத்தில் எழுதி வைத்தான் என்றால் அதை இன்றுமா மறு பதிப்பும் போட்டு மக்களை ஏமாற்றுவது?

**அருணாசல புராணம் – பக்கம் – 37 பாடல் – 77**

நிலம் தொழும் அருணாசலத்திலிருந்து
நெஞ்சினில் ஐயமாய்ப் பிரிந்து - ஓர்

தலம் தனை விரும்பி நடந்தவர், முன்செய்
தவங்களும் அறங்களும் தவறாம்
குலம் தனில் உதித்தவர் ஆயினும் புலையர்
குணத்தவர் ஆயினும் - கொடியர்
உலந்தவர் உயிரோடிருக்கினும்: அதற்கு ஓர்
உவமை சொன்னவர்க்கும் ஈது ஒக்கும்.

**இதன் பொருள்**

இந்த அருணாசலத்தைவிட சிறந்த தலங்கள் இருக்கும் என மனதில் எண்ணி - வேறு ஒரு கோவிலை நாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அதற்கு முன் செய்த தவங்களும் தான தர்மங்களும் பயன்படாமல் போய் விடும்.

நல்ல சாதியில் பிறந்தவனாயினும் - நீசராகி விடுவர் -

நல்ல குணமுள்ளவனானாலும் கொடிய குணத்தவனாகி விடுவான்



உயிரோடு இருந்தாலும் அவன் இறந்தவர்களுக்குச் சமம்.

இந்த அருணாசலத்து ஒப்பாக வேறு கோயிலைச் சொன்னாலும் இதுபோல நடக்கும்!!!

**நமது சிந்தனை**

பக்தி வந்தால் புத்தி போகும் புத்தி வந்தால் பக்தி போகும்
- தந்தை பெரியார்.

வேறு கோயிலுக்குப் போனாலே அவன் கொடியவனாம் - சிவன் மகன் பழனியாண்டி கோயிலுக்கும் - சிவன் மச்சான் - திருப்பதியிலிருக்கும் விஷ்ணு கோவிலுக்கும் - சபரிமலை - அறுபடை வீடு போகிறவர்கள் எல்லோருமே நீசர்களா? கொடியவர்களா?

உலகத்தோர் போற்றும் அருணாசலமென்றால் அதைப் பற்றி போப்பாண்டவரோ, ஒசாமாவோ ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை? என் நண்பர் ஒரு பார்ப்பனர் திருவண்ணாமலை - காஞ்சி - பழனி என்று எல்லா கோயில்களுக்கும் போய் வருகிறார். ஆனால் அவர் இதுவரை நீசர் ஆகவில்லையே! பூணூல் போட்டுக் கொண்டு பார்ப்பானாகவே இருக்கிறாரே?

நல்ல சாதியில் பிறந்திருந்தாலும் அருணாசலத்தை வணங்கா தவர்கள் கீழ்சாதியினர். அப்படியானால் சாதிச் சான்றிதழில் இரண்டே சாதிகள்தான் இருக்கும்!

ஒன்று அவனை வணங்கிய மேல் சாதி! மற்றொன்று - அந்தச் சனியனை வணங்காத கீழ்சாதி

ஆனால் இன்று நம்மில் எத்தனை சாதிகள் கற்பிக்கப் பட்டுள்ளது என்பது உங்களுக்கே தெரியும்.

கீழ் சாதியில் பிறந்த ஒருவர் அருணாசலத்தை வழிபட்டு மேல் சாதியாகி பூணூல் அணிந்து கொண்டு கருவறையில் உள்ள அந்த கருங்கல்லைத் தொட முடியுமா? இவையெல்லாம் நம் முன்னோர்கள் படிப்பறிவில்லாத காலத்தில் எழுதப்பட்டவைகள் ஆகும்

**திருமலையின் சுருக்கம்**

*சர்வ உயிர்களையும் அழிக்கும் காலத்தில், எல்லா உயிர்களையும் அழித்த பின்பு, தனியாய் நின்ற பரமசிவன், மீண்டும் உலகம் உண்டாக வேண்டுமென்ற எண்ணம் கொண்ட உடனே பஞ்ச கர்த்தர்கள் உண்டானார்கள்.*

*பின்பு பிரம்மாவானவர் - தன்னால்தான் உலகமும், அதிலுள்ள சாசரங்களும் உண்டாக்கப் பெற்றதென்கிற அகங்காரங் கொண்டு - விஷ்ணுவை அவமதிப்பதான வார்த்தைகளைச் சொல்ல (என்னென்ன வார்த்தைகள் என்பது தொடர்ந்து வருகிறது! இந்தக் கடவுள்களின் யோக்யதை இன்னும் தெளிவாகப் புரியும்)*

*ஒருவருக்கொருவர் கோபமுண்டாகி அண்ட கடகங்கள் எல்லாம் வெடிக்கும் படியாக சண்டை செய்யும் போது - தேவர்கள் எல்லாம் பயப்பட்டு, பரமசிவனிடம் போய்த் தொழுது முறையிட சுவாமி அவர்களுக்கு அபயங்கள், கொடுத்து பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் ஏற்பட்டுள்ள பகையை தீர்த்து வைக்கும் படியும், அண்டங்கள் எல்லாவற்றிற்கும் குறை வராமல் காப்பாற்றுவதற்காகவும், அவ்விருவருக்கும் மத்தியில் அக்னியாகத் தோன்றினார்.*

*இதைக் கண்ட விஷ்ணுவும் பிரம்மாவும் இந்த தீயின் அடியையாவது முடியையாவது (மயிரையாவது) கண்டு பிடிப்பவர்களே பெரியவர் என்று ஒருவருக்கொருவர் சபதம் செய்து கொண்டு,*

*விஷ்ணு அடியை கண்டுபிடித்து விடுவேன் என்று கூறி (மலம் தின்னும்) பன்றியாகவும் பிரம்மா அன்னப் பறவையாகவும் அவதாரம் எடுத்து வெகு காலம் தேடியும் கண்டறிய முடியாமல் போனார்கள்.*

*அப்படி இருந்தும், ஜோதியின் உச்சியை தான் பார்த்து விட்டதாகப் பொய் சொல்லி சிவனின் தலையிலிருந்து தவறி கீழே விழுந்த ஒரு தாழம் பூவைக் காட்டி இது ஜோதியின் முடியில் இருந்து கொண்டு வந்தேன் என்றார். அந்தத் தாழம் பூவும் உண்மைதான் என்று பொய் சாட்சி சொன்னதனால் இன்று முதல் உன்னைச் சூட மாட்டேன் என்று சிவன் கூறினார்.*



*இதைக் கேட்ட பிரம்மா, பயப்பட்டு, துக்கமடைந்து கிருபைக் கடலாகிய பரமசிவனைத் துதித்து, சுவாமி அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டுமென்று வணங்க, அதனால் சிவனுக்கு பிரம்மன் மேல் கருணையுண்டாகி*

***பிரம்மாவே! பயப்படாதே பூமியில் பிராமணர்களுக்குச் (பார்ப்பான்களுக்கு) செய்யும் பூசையை உன் பூசையாகக் கொண்டு - (எங்க வர்ரான் பாருங்க) மறு படியும் உன் படைத்தல் வேலையை தொடங்கி விடு என்று சொன்னார்.***

*இந்த நெருப்பானது சிறிய மலையாகப் போகட்டுமென்றும், அதன் வெளிச்சம் மறைந்து மற்ற மலைகளைப் போல் ஆகட்டும் என்றும், இதன் உச்சியில் கார்த்திகை மாதத்தில் ஒரு வெளிச்சம் காட்டுவேன். அதை வந்து வணங்கியவர்கள் மோட்சத்தை அடைவார்கள் என்றும், இதனடியில் நான் லிங்க (ஆண்குறி) வடிவாய் எழுந்தருளுவேன் என்று சொல்லி அந்த மலையினுள்ளே சிவன் மறைந்து விட்டார்.*

*உடனே அந்த இடத்தில் ஒரு லிங்கம் உண்டானதைக் கண்டு தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்து - கோபுரங்களும், மண்டபங்களும் - மதில்களும் செய்வித்தார்கள் பின்பு அழியாத நகரமும் 300 வகை தீர்த்தங்களும் உண்டாயின!*

*அடப் பாவிகளே! உங்கள் கடவுள்களைப் பற்றி நீங்களே இவ்வளவு கேவலமாகச் சொல்லலாமா?*

*பிரம்மா கொச்சை வார்த்தைகளால் விஷ்ணுவைத் திட்டினானாம். இதை ஏதாவது ஒரு ஐயங்கார் ஒத்துக் கொள்வாரா? விஷ்ணு என்ன இளிச்சவாயனா? பிரம்மா திட்டும் போது பார்த்தவன் எவன்? எந்த மொழியில் எழுதியுள்ளான்? கல் வெட்டிலா? காகிதத்திலா? பனை ஓலையிலா? இதையெல்லாம் ஆதாரங்களுடன் நிரூபிக்க முடியுமா?*

*இவன் திட்டினானாம்! அவனும் சண்டை போட்டானாம் - எல்லா சக்தியும் உள்ள சிவனுக்கு இவர்கள் இருவரும் சண்டை போடுவார்கள் என்பது மட்டும் ஏன் முன்னமே தெரியாமல் போனது? வெள்ளையர்கள் வந்து நம்மை அடிமைபடுத்திய போது ஏன் இந்தச் சிவன் வரவில்லை?*

தேவர்கள்தான் கோபுரங்களும், மண்டபங்களும் செய்வித்தார்களாம். இப்போது கோவில்களில் திருப்பணி வேலைகள் நடக்கும் போது தேவர்கள் ஏன் வருவதில்லை. எல்லா வேலைகளையும் சூத்திரர்களே செய்கிறார்களே?

தொல்பொருள் ஆய்வுத் துறையினர் திருவண்ணாமலை கோயில் 700 ஆண்டுகள் பழமையானது என்று ஆதாரங்களுடன் சொல்கிறார்கள். அப்போது சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலம்? அப்போது வந்த தேவன்கள் இப்போது ஏன் வருவதில்லை?

பொய் சொன்னதால் பூலோகத்தில் பிரம்மனுக்குக் கோவிலோ பூசையே இருக்கக் கூடாது என்று சாபம் விட்டானாம் சிவன். ஆனால் இன்னும் கும்பகோணத்தில் ஒரு பிரம்மன் கோவிலும், திருச்சி அருகே திருவானைக் காவலில் ஒரு பிரம்மன் கோவிலும், அவைகளில் தினமும் பூசைகள் நடப்பது எப்படி சாத்தியமாகிறது?

காரணம் இந்த அருணாசல புராணத்தை எழுதிய எல்லப்ப நாவலனுக்கு திருச்சி, கும்ப கோணம் எங்கிருக்கிறது என்பதே தெரியாது! பொய் எழுத மட்டும் நன்றாகத் தெரியும்.

இதையெல்லாம் தாண்டிய மோசடி என்னவென்றால், உனக்கு பூமியில் கோவில் பூசை கிடையாது என்று பிரம்மனிடம் சொன்னவுடன் - அவன் அழுதானாம் - உடனே அந்தச் சிவன் பயல் பூமியில் பார்ப்பான்களுக்குச் செய்யும் பூசையெல்லாம் உனக்குத் தான் என்றானாம்!

இப்போது புரிகிறதா அந்த எல்லப்ப நாவலன் யாரென்று? ஏதோ ஒரு மோசடிப் பார்ப்பானின் வேலைதான் இந்த நூல். ஒரு அயோக்கியன் எவனுடைய பேரிலோ இந்நூலை எழுதியுள்ளான்.

மேலும் கார்த்திகை மாதம் - கார்த்திகை நட்சத்திர தினத்தன்று இந்த மலை உச்சியில் ஜோதியாக வருவேன் என்று சொன்னானாம்.

ஒரு வருடம் இவர்கள் 1000 லிட்டர் நெய்யும் - 600 மீட்டர் காடா துணியும் கொண்டு தீபம் ஏற்றி வருவதை நிறுத்திப் பார்க்கட்டும் சிவன் தானாக வருகிறானா என்று? ஒரு டெஸ்ட் பார்க்கலாமே?



நல்ல சத்துள்ள உணவான நெய்யை பக்தியின் பேரால் வீணடிக்கிறான்கள். அதற்குச் செலவிடும் பணத்தை ஏழை மாணவர்களின் கல்விச் செலவிற்கோ - திருவண்ணா மலையில் சுகாதாரசெலவிற்கோ முதியோர்களுக்குத் தேவையான உதவிகளோ செய்தால் அந்தச் சிவன் ஏற்றுக் கொள்ள மாட்டானா?

# அருணாசல தோத்திர மகிமை

**அருணாசல புராணம் – பக்கம் – 41 பாடல் –81**

பஞ்ச பாதகம் ஒருவன் அப்பதியில் பண்ண
நெஞ்சினால் நினைத்திடுகினும், நினைத்ததே
தஞ்சம் ஆகிய முக்தியாம் என மறை சாற்றும்
அம் சொலால் அதுமொழிந்த பேர்க்கு என்ன பேறு அரிதே

**இதன் பொருள்**

ஒருவன் கொலை, கொள்ளை, கற்பழிப்பு - போன்ற பஞ்சமா பாதக செயல்களை அந்த அருணாசலத்தில் செய்ய வேண்டுமென்று மனதில் நினைத்தாலே - அப்படி அத்தலத்தை நினைத்ததே மேற்பட்ட புண்ணியமாகி - அதனால் பற்றுக் கோடாகிய முக்தியுண்டாகும் என்று வேதங்கள் கூறும். அவ்வாறு இருக்கும் போது நல்ல எண்ணங்களுடன் அத்திருமலையை தோத்திரம் செய்தால் என்ன பயன்தான் கிட்டாது?

**குறிப்பு:-** பஞ்சமா பாதகம் செய்யலாகாது என்பதே விதி: நீதி: வேறு எங்காவது பிறந்தவன் அருணாசலத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தாலே - அவ்விடத்தை நினைத்ததற்காக முக்தியே கிடைக்கும்.

**நமது கேள்வி**

இன்று ஒருவன் நான் திருவண்ணாமலைக் குப் போய் ஒருவனை கொலை செய்யப் போகிறேன் என்று பகிரங்கமாகச் சொன்னால் முக்தி கிடைப்பது ஒரு புறம் இருக் கட்டும் சட்டமும்

காவல்துறையும் அவனை விட்டு வைக்குமா? அல்லது சட்டப்படி தண்டனை வழங்கி முக்திக்கு அனுப்பி வைக்குமா?

நடைமுறைக்கு இவைகளெல்லாம் ஒத்து வராது என்பதை பாமர மக்களே உணர்ந்து இது போன்ற நூல்களை தீயிலிட்டுக் கொளுத்தும் வரை - இந்த ஆன்மீகவாதிகளின் அட்டூழியம் ஓயாது.

**அருணாசல புராணம் – பாடல் –86 – பக்கம் – 42**

உண்ணும் மைந்தரில் மரீசிபால் காசிபன் உதித்தான் -
பன்னு தக்கனும் அறுபது பெண்களைப் பயந்தான் -
அன்ன காசிபன் அதன் பதின் மூவரை அணைந்தான் -
முன்ன லாகிய அதிதி பால் இமையவர் முளைத்தார்

**இதன் பொருள்**

பிரம்மனுக்குப் பிறந்த பிள்ளைகளாகிய எழுவரில் மரீசி முனிவருக்கு - காசிப முனிவர் பிறந்தார் - தக்கன் என்பவன் அறுபது பெண் குழந்தைகளைப் பெற்றான். அந்த 60 பேர்களில் 13 பெண்களை காசிபர் மணந்தார். அதில் மூத்தவளாகிய அதிதி வயிற்றில் முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தார்கள்

**நமது வேதனை**

நான் எதைச் சொல்ல? நான் செய்த முதல் தவறு இந்தப் புத்தகத்தைப் படித்தது. ஏன் படிக்க வேண்டும் என்று கேட்பீர்கள் - எங்காவது ஒரு மூலையில் ஒரு உண்மையான செய்தி இருக்காதா? என்ற ஆதங்கம்தான் - இதுபோன்ற நூல்களை மிகுந்த வேதனை யுடன் படிக்க வேண்டியுள்ளது.

மேலும் ஒன்றைப் பற்றி பாராட்டுவதானாலும், குறை சொல்லுவதானாலும் அதனை நன்கு ஆராய்ந்து பார்த்த பிறகே உண்மையைக் கூற முடியும். இந்த நூலைப் படிக்காவிட்டால் நான் எதுவும் எழுதவும் முடியாதே!

பிரம்மன் 7 பிள்ளைகளைப் பெற்றானாம் - முதலில் பிரம்மன் மனைவி சரஸ்வதியின் பிறப்புக் கதையைப் பாருங்கள்!

பிரம்மன் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தானாம். ஒரு அழகிய பெண் எருமை மாட்டை(?) பார்த்தானாம்- அதன் மீது மோகம் கொண்டு புணர்ந்த போது அந்த எருமை மாடு ஒர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்ததாம் - அது அழகாக இருந்ததினால்



பிரம்மன் தன் மகளைத் தானே திருமணம் செய்து கொண்டானாம் - அவள் பெயர்தான் சரஸ்வதி - கல்வித்துறைக் கடவுள்.

அந்த மனைவியுடன் சேர்ந்து பிரம்மன் ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தானாம். அந்த ஏழு பேரில் தக்கன் என்பவன் 60 பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தானாம்.அந்த 60 பேர்களில் 13 பெண்களை அவர்களுடைய பெரியப்பாவாகிய காசிபன் திருமணம் செய்து செய்து கொண்டானாம். தம்பி பெத்துப் போட்டுக் கொண்டே இருந்திருக்கிறான். அண்ணன் திருமணம் செய்து கொண்டே இருந்திருக்கிறான் - இவங்களுக்கெல்லாம் சோறு போட்டவன் எவன்? முதலில் அவனைச் சித்திரவதை செய்து கொல்ல வேண்டும்.

நான் இதைச் சொல்லும் போது பக்தர்களுக்கு வேதனை யாகக் கூட இருக்கலாம். அடுத்து வரும் பாடலையும் - அதன் பொருளையும் பாருங்கள் - புரியும்.

**அருணாசல புராணம் – பாடல் – 94 – பக்கம் 43**

பரியதான தன் தேவி மூக்கு இரண்டிலும் பரிதி
உரிய ஆண் பரியாகி இந்திரியத்தை ஊற்ற
வரிசை பற்றிய மருத்துவர் இருவரும் வந்தார்
விரி சாரசம் பிறந்தன பலப்பல விதமாய்

**இதன் பொருள்**

சூரியன் தன் மனைவியை புணர்வதற்கு அழைத்த போது - அவள் ஒத்து வராமல் பெண் குதிரையாகி ஓடினாள். சூரியன் ஆண் குதிரையாக மாறி - அவளைத் துரத்த - அவள் திரும்பிப் பார்த்தாள். அப்போது சூரியன் தன் மனைவியான பெண் குதிரையின் இரண்டு மூக்குத் துவாரங்களிலும் இந்திரியத்தை ஊற்ற, வரிசையாக அஸ்வினி தேவர்கள் இருவர் பிறந்தனர். அதன் பிறகு விரிந்த அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும் உண்டாயின.

**நமது சந்தேகங்கள்**

இதே நூலில் 39 ஆம் பக்கத்தில் என்ன சொன்னார்களோ அதற்கு நேர் மாறாக பக்கம் 44 இல் சொல்லப் பட்டிருக்கிறது!

எல்லா உயிர்களையும் கொன்று விட்டு சிவன் மட்டும் தனியாகத் தோன்றி, பிரம்மனைப் படைத்ததாகவும் பிறகு பிரம்மன்

தான் எல்லா உயிர்களையும் படைத்ததாகவும் சொன்னவன்,

சூரியன் தன் மனைவியின் மூக்கில் இந்திரியத்தை ஊற்றினானாம். அதிலிருந்து எல்லா உயிர்களும் தோன்றின என்கிறான்.

இதில் எது உண்மை?

கொஞ்சமாவது அறிவிருந்தால் எவனாவது இதுபோல் எல்லாம் உளறுவானா? ஆம் தந்தை பெரியார் தான் சொன்னார்

கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்று - சூரியன் ஒரு கடவுளாம் - அவனுக்குப் பெண்டாட்டியாம் - என்ன வேடிக்கை? பல கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு நெருப்புப்பிழம்பு சூரியன் - இவன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் சூரியன் இருப்பது போல சித்தரிக்கிறான். இந்த சூரியனையும் நம் மக்கள் கடவுளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் முன்பு கூட சொல்லி இருந்தேன் - நடை முறைக்கு ஒத்து வராது ஆனால் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று!

ஆறு தலையுடன் ஒரு கடவுள், யானைத் தலை, பன்றித் தலை, மாட்டின் தலை, பாம்பின் தலை, குரங்கின் தலைகளுடன் பல கடவுள்கள், இது அல்லாமல் - வேப்பமரம், ஆலமரம், அரசமரம் கடவுள் - துளசிச் செடி - தும்பைச் செடி கூட கடவுள் - அருகம் புல்லும் இந்து மதத்தில் கடவுள் அது மட்டுமல்ல - சாணியை எடுத்து உருட்டி வைத்து - அதில் குங்குமம், சந்தனம், அருகம் புல் வைத்தவுடன் சாணியும் கடவுளாகி விடும் அவல நிலை.

இத்தனைக் கடவுள்கள் உள்ள நாட்டில் - பசியும், பஞ்சமும், தீராத நோய்களும், கொலை, கொள்ளை, கள்ள நோட்டு முதலான குற்றங்கள் எப்படி வருகின்றது.

இந்தக் கடவுள்களுக்கு பக்தர்களை காப்பாற்றுவதை விட வேறு என்னதான் வேலை இருக்க முடியும்? இதோ பாருங்கள் அவர்களின் வேலை என்ன என்பது புரியும் - பிரம்மாவும் விஷ்ணுவும் போடும் சண்டை



**அருணாசல புராணம் – பக்கம் 45 – பாடல் 95**

கண்டு உலகமெலாம் நமது கற்பனை என்றே
புண்டரிக வேதியின் மதத்து, அரிபுரத்தில்
தண்டி எதிர் கொண்டு பகை தங்க இசை வண்டு ஆர்
வண் துளைப மாயவனை வைது உணர வழங்கும்

**இதன் பொருள்**

இப்படி எல்லாவற்றையும் உண்டாக்கிய பத்மாகனனான பிரம்ம தேவன், தன்னால் படைக்கப்பட்ட சிருஷ்டிப் பொருள்களைப் பார்த்து - இந்த உலகமெல்லாம் நம்முடைய படைப்பினால் அல்லவா உண்டாயின என்று கருவம் கொண்டு விஷ்ணுவின் M P தொகுதியான வைகுண்டத்திற்கு வலிய போய், எதிர்த்து பகை கொள்ளும்படி, சங்கீதம், பாடுகின்ற வண்டுகள் சூழ்ந்த, துளசி மாலையைத் தரித்த விஷ்ணுவைப் பார்த்து, அவமதித்து சில வார்த்தைகள் சொல்லத் தொடங்கினான்.

**அருணாசல புராணம் – பக்கம் – 45 பாடல் – 96**

ஏழுலகம் ஏழு பிலம், ஏழு புயல், ஓர் ஏழ்
ஆழி முதல் ஏழுகிரி யாம் வசை இயற்றி
வாழும் இவை யாவையும் வருத்திட மனத்தால்
பாழி கொள் மரீசி முதல் மைந்தர்கள் படைத்தேன்

**இதன் பொருள்**

விஷ்ணுவே! 14 உலகங்களையும் கருத்த 7 மேகங்களையும், 7 கடல்களையும் முதன்மையாக ஏழு குருபருவதங் களையும் உண்டாக்கும்படி மனதினால் படைத்து இப்போது வாழுகின்ற எல்லா உயிர்களையும் உண்டாக்க வலிமையுடைய மரீசி முதலிய இருடிகளைப் பெற்றேன்.

**நமது சிந்தனை**

எல்லாவற்றையும் நான் தான் படைத்தேன் என்று சொல்லும் பிரம்மாதான் உலகின் முதல் குற்றவாளி, காரணம் இன்று நடக்கும் கொலை, கொள்ளை முதல் கள்ள நோட்டு, கறுப்புப் பணம், கள்ளக் கடத்தல், கற்பழித்தல், போலி மருத்துவர்கள், பன்றிக் காய்ச்சல் முதல் விபத்துக்கள் வரை எல்லாம் அவனால்தான் வந்தது என்றால் அவனைக் கைது பண்ணுவது தான் முறை!

ஏழு கடலையும் படைத்த பிரம்மன் சுனாமியை ஏன் படைத்தான்? கடல் கொள்ளையரை ஏன் படைத்தான்? கோயிலில் பூட்டை உடைத்து சக்தியுள்ள கடவுள்களையே திருடும் திருடர்களை ஏன் படைக்க வேண்டும்.

அவரவர் செய்த பாபம் என்றால் பாபம் செய்பவனை ஏன் படைக்க வேண்டும்? எல்லோரையும் நல்லவர்களாக படைப்பதில் என்னதான் சிக்கல்? ஐந்து விரல்களும் ஒரே போல் இருக்காது என்ற அறிவிற்கு ஒத்து வராத பழங்கதை எல்லாம் தேவையில்லை - ஐந்து விரல்களும் ஒரே அளவு இருந்தால் எந்தப் பொருளையும் ஒரு கையால் எடுக்க முடியாது!

மேலும் அந்தக் கைகளையும் படைத்தது பக்தர்கள் கொள்ளைப்படி அவன் தானே படைத்தான்? இன்று வீடு, கடைகள் தீப்பிடித்து எரியும் போது - இதுவும் அவன் செயல் என்று யாரும் ஏற்றுக் கொள்வது கிடையாது. வயிற்றிலும், வாயிலும் அடித்து ஐயோ அப்பா என்று கதறுவதேன்?

அறிவிற்கு ஒத்து வராததை அழித்தொழி என்று பெரியார் தான் சொன்னார்-

**பாடல் – 97 பக்கம் –46**

அளித்திடு களிப்பினை அகத்தினில் விடாயேல்
வெளிப்பட ஒருத்தனை அளித்திட விதிப்பேன்
குளிர்ச்சிய கடற்கு இடை குதித்திடு - அதனுள்ளே
ஒளித்திடு - சுத்திரன் உனைச் சருவு முன்னே

**இதன் பொருள்**

பெருமாளே! சகலத்தையும் ரட்சிக்கிறோம் என்கிற மமதையை விட்டு விடு. அவ்வாறு விடாமல் போனால் உன் பதவியைப் பறித்து, படைத்து. காக்கும் தொழிலுக்கு வேறு ஒருவனை நியமித்து விடுவேன். நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் உன்னைக் கொல்லும்படி வளைத்துக் கொள்வதற்கு முன்னே - குளிர்ச்சி பொருந்திய திருப்பாற் கடலுக்குள்ளே குதித்து ஒளிந்து போ என்றார். பிரம்ம தேவர்



நமக்குச் சொல்லப்பட்ட கருத்து அன்பே கடவுள் - ஆனால் - கடவுள்கள் மோதிக் கொள்வதைப் பார்த்தால் அங்கு அன்பிற்கு கடுகளவும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை

எல்லோரையும் படைக்கும் பிரம்ம தேவனே இவ்வளவு கீழ்த் தரமான சிந்தனையுள்ளவனாக இருந்தால் - அவனால் படைக்கப்பட்டமனிதர்கள் எப்படி நல்லவர்களாக இருக்க முடியும்?

**அருணாசல புராணம் – பாடல் – 101 பக்கம் – 47**

உந்தி மலரோன் என இகழ்ச்சி யுரையாதே!
முந்த ஒரு தூணிடை முளைத்தனை! உனக்குத்
தந்தை யெனவோ அலது தாயது எனவோ? சொல்!
செந்தழல் பிறந்து, கிளை தீய்ப்பது அறியாயோ !

**இதன் பொருள்**

ஓ விஷ்ணுவே! நம்முடைய தொப்புள் கொடியினில் தோன்றியவன் என்று நிந்தனை சொல்லாதே! முன்பு நீ ஒரு தூணிடத்திலே பிறந்தாயே? அந்தத் தூண் உனக்குத் தந்தை என்று சொல்லட்டுமா? தாய் என்று சொல்லட்டுமா? அந்தத் தூண் தான் உனக்குத் தாய் தந்தையானால் நீ எனக்குத் தந்தையாவாய் (?) (குழப்புறான்யா -)

நெருப்பு மூங்கிலிடத்துப் பிறந்து பிறந்த மூங்கிலையே எரித்து விடுவதை அறியமாட்டாயா? அதுபோல உன்னிடத்திலே நான் பிறந்தாலும் உன்னையே அழித்து விடுவேன் - பிரம்ம தேவன்.

தூண் தான் விஷ்ணுவைப் பெற்றெடுத்ததாம்! இந்துக் கடவுள்கள் ஒன்று கூட தாய் தந்தைக்குப் பிறக்க வில்லை!

பார்வதியின் அழுக்கிலிருந்து பிறந்தவன் விநாயகன்

வாயுவிற்கும் - சூரியனுக்கும் பிறந்தவன் அனுமான்

எருமைக்கும் - பிரம்மாவிற்கும் சரஸ்வதி -

குதிரைக்கும் - கோசலைக்கும் - ராமன் -

பன்றிக்கும் - லட்சுமிக்கும் - நரகாசுரன்

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் கவியரசு

வரிகள் ஓரளவு நம்பிக்கையை தருகிறது.

காலம் ஒரு நாள் மாறும் - நம்

கவலைகள் யாவும் தீரும் -

வருவதை எண்ணி சிரிக்கின்றேன்

வந்ததை எண்ணி அழுகின்றேன்....

நம் மக்களும் படித்து அறிவாளிகள் ஆன பிறகு இந்த மூடத் தனங்களுக்கு விடிவு காலம் வரும்!

**அருணாசல புராணம் – பாடல் – 102 பக்கம் – 47**

வேதன் இதன் சொற்றென கொடும் படை வெதுப்பிக்
காதிடை துளைத்து அனல் புகட்டினன கடுப்ப
கோதேமோடு எழுந்த புகை கொண்ட நகை கொண்டே
மாதவன் மகிழ்ந்தனன் - மறுத்திவை உரைப்பான் .

**இதன் பொருள்**

பிரம்மன் இவ்வாறு இகழ்ந்து பேசிய வார்த்தை கள், பெருமாளுக்கு இரண்டு காதுகளிலும் - கொடிய வேலாயுதத் தைப் பழுக்கக் காய்ச்சித் துளைக்க விட்டு, உள்ளே செலுத்திய நெருப்புப் போல தகிக்க, மிகுந்த கோபம் கொண்டு, பிரம்மனுக்கு இவ்வளவு அகங்காரம் எப்படி வந்தது என் ஆலோசித்து சில வார்த்தைகளைச் சொன்னார் -

**அருணாசல புராணம் – பாடல் – 103 பக்கம் – 47**

வந்த வழி தன்னையும் நினைத்திலை
உந்தி உன தன்னையென உன்னுதலை இல்லாய்
தந்தை சிறு மைந்தர் பிழை தன்னை உணரான் என்று
இந்த உரை சொல்லினை, இகழ்ந்தது பொறேனே

**இதன் பொருள்**

பிரம்மனே நீ வந்த வழியையும் நினைத்தா யில்லை! என் தொப்புளை உன் தாய் என்று ஆலோசிக்கவும் இல்லை! தந்தையார் இருப்பவர் பிள்ளைகள் செய்த பிழையை ஒரு குற்றமாக நினைக்க மாட்டார்கள் என்று நினைத்து இந்த வார்த்தைகளைச் சொன்னாயோ? இனி மேல் இப்படி இகழ்வாயாகின் பொறுக்க மாட்டேன் - என்று பெருமாள் மேலும் சொல்லுகிறார்.



**அருணாசல புராணம் – பாடல் – 103 பக்கம் – 48**

கன்றும் மது எம்கைவட பகடு தானும்
என் தனயராகவும் இகழ்ந்துயிர் குடித்தேன்
மன்ற ஒரு தீமை செயின் மைந்தன் என உண்டோ?
அன்றி உடல் நோயையும் அறுத்து எறிகிலாரோ?

**இதன் பொருள்**

கோபத்தையுடைய மது என்பவனும், யானை போன்ற கைவடன் என்பவனும் எனக்குப் பிள்ளைகளாய் இருந்தும் என்னை இகழ்ந்து எதிர்த்ததினால் கொன்று விட்டேன். நிலை பெற்ற தீங்கு செய்தால் மகன் என்று பார்க்க முடியுமா? அதுவன்றி உடலில் ஒரு கட்டி கண்டால் அதை அறுத்து எறிந்து குணப்படுத்திக் கொள்ளாமல் இருப்பார்களோ?

**அருணாசல புராணம் – பாடல் – 105 பக்கம் – 48**

பித்தன் உனது ஓர் தலை பிடுங்கி எறி போதில்
அத்தலை நமக்கு என அமைக்க விதி இல்லாய்
எத்தனவன் என்பதுனை? இத்தகைமை - கொண்டோ
பைத்தலை அரா முடிகொள் கோள் யாரிடம் விதித்தாய்!

**இதன் பொருள்**

ஓ பிரம்மனே! பித்தனாகிய சிவன் உன்னுடைய தலையில் ஒன்றைப் பிடுங்கி எறிந்த காலத்தில், அத்தலையை மீண்டும் உண்டாக்கிக் கொள்ள வகையில்லாத நீ, உன்னை எப்படி தலைவன் என்று கொள்வது? இத்தலையைக் கொண்டு தானோ படத்தையுடைய ஆதிஷேசனின் முடியிலிருக்கிற பூமியைப் படைத்தாய்? என்றார் பெருமாள்

**நமது சிந்தனை**

பித்தன் என்றால் பைத்தியம் பிடித்தவன். இந்நூலின் தொடக்கத்தில் எல்லாக் கடவுள்களைக் காட்டிலும் சிவன் தான் உயர்ந்தவன் என்கிறான். இப்போது அவனையே பைத்தியம் என்கிறான்

அது கிடக்கட்டும் பிரம்மனின் 5 தலைகளில் ஒன்றைப் பிடுங்கிய கதை தெரியுமா உங்களுக்கு? சிவனுக்கும் ஐந்து தலை; பிரம்மனுக்கும் ஐந்து தலை!

பிரம்மன் எப்படியாவது ஒரு நாள் பார்வதியை அனுபவிக்க வேண்டும் என மோகம் கொண்டு

ஒரு நாள் சிவன் இல்லாத போது இரவில் நைஸாக நெருங்கி யிருக்கிறான். இரவானதால் தலையைத் தடவிப் பார்த்த பார்வதி - ஐந்து தலை இருப்பதை உணர்ந்து கணவன்தான் என எண்ணி இசைந்து விடுகிறாள்.

இப்படியாக பிரம்மனும், பார்வதியும், அம்மா அப்பா விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கையில் சிவன் எதிர்பாராத விதமாக உள்ளே வந்து விடுகிறான்!

அங்கு நடக்கும் விபரீதத்தைப் பார்த்து பார்வதியை அடித்து நொறுக்குகிறான். அவளோ, இல்லை மாமா, இரவில் தலையைத் தடவிப் பார்த்தேன். ஐந்து தலை இருந்ததால் நீ தான் என்று எண்ணி நானும் தடவினேன். அவனும் (பிரம்மனும்) தடவி விட்டு, இப்போது உன்னைப் பார்த்ததும் ஓடி விட்டான் என்று ஒரு வழியாக சமாளித்தாள்.

அதை நம்பிய நமது முட்டாள் சிவனோ பிரம்மனைத் தேடிப் போய், டேய் உனக்கும் ஐந்து தலை, எனக்கும் ஐந்து . இதனால்தான் இந்தக் குழப்பம் - உன் தலைகளில் ஒன்றை எடுத்து விடுகிறேன் பார் என்று கூறி நடுத் தலையை கிள்ளி எடுத்து விடுகிறான்.

அவ்வாறு கிள்ளப்பட்ட அந்தத் தலை சிவனுடைய கட்டை விரலை நன்றாகக் கடித்துப் பிடித்துக் கொண்டது. சிவனும் தன்னால் முடிந்தவரை உதறிப் பார்த்தான் - தலை நழுவிய பாடில்லை? பல ஆண்டுகள் அத்தலையுடன் தன் பணிகளைக் கவனித்து வந்தான்.

பிறகு வெட்கத்தை விட்டு, பிரம்மனிடம் போய் - டேய் தப்பு செய்தவன் நீ தாண்டா - உன் தலையுடன் நான் அவதிப்பட்டு வருகிறேன் - என்னை மன்னித்து ஏதாவது ஒரு வழி செய்யடா என்று கெஞ்சினான்.

சிவன் மீது இரக்கம் கொண்ட பிரம்மனும் நீ சுடுகாட்டிற்குப் போய், அங்கு பிணத்தை எரித்த சாம்பலை உடம்பெல்லாம் பூசிக்



கொண்டு, அங்குள்ள எருக்கம் பூ, ஊமத்தம் பூ, பாம்பு இவைகளை சூடிக் கொண்டு பைத்தியம் போல் சில காலம் திரிந்து வா. உனக்குப் பிடித்திருக்கிற பிரமஹத்தி தோஷம் தானாகவே சரியாகி விடும் என்றான்.

சர்வ சக்தியுடைய சிவன், பிரம்மன் சொன்னது போல் சுடுகாட்டில் பிணத்தை எரித்த சாம்பலைப் பூசிக் கொண்டு திரிந்தா னாம். சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தத் தலையும் கீழே விழுந்த தாம்.

இந்தக் கோலத்தைத்தான் திருஞானசம்மந்தர் இரண்டு வயதுக் குழந்தையாக இருக்கும் போது,

தோடுடைய செவியன் விடையேறியொரு வெண்மதி சூடி காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன் - என்று பாடி அந்தசிவனுடைய யோக்கியதையை நமக்குத் தந்தானாம்!!

இரண்டு வயதுக் குழந்தை பாடியது சிவனுடைய அருளாகவே இருக்கட்டும். ஒருவரைப் புகழ்ந்து பாடும் பொழுது, உயர்ந்த பண்புகளைப் பாடாமல் மனைவியைப் பறிகொடுத்து - சுடு காட்டில் திரிந்த கதையைச் சொல்லி கேவலப்படுத்துவது சரியா?

இதையெல்லாம் கேள்வி கேட்டால் நாம் நாத்திகர்கள். அவர்கள் சொல்வதை அப்படியே நம்பி, தேர், தெப்பம் போன்ற திருவிழாக்களுக்கு செலவு செய்தால் நாம் ஆத்திகர்கள்.

அதைத்தான் பிரம்மனிடம் பெருமாள் கேட்கிறானாம். இந்த கிள்ளப்பட்ட தலையை வைத்துத்தான் ஆதிஷேசன் தலையில் உள்ள இந்த உலகத்தைப் படைத்தாயோ? என்று

எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை வலையினில் மாட்டி - இன்னும்
எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

- **பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

**அருணாசல புராணம் பாடல் - 106 - பக்கம் - 48**

*மச்சஉரு வம்கொடு மறைத்தொகுதி தந்தேன்*
*விச்சை உள தானவரை வென்று உயிர்க் குடித்தேன்*
*நச்சு மரம் ஆயினும், வைத்த மரம் என்றே*
*அச்சம் உறுகின்றனன், அழிக்க அரிது அன்றே!*

**இதன் பொருள்**

*பிரம்மனே! சோமுகாசுரன் உன்னிடத்தில் வேதங்களைப் பிடுங்கிக் கொண்டு போன போது, நான் மச்ச அவதா ரம் கொண்டு, அவ்வசுரனைச் கொன்று! வேதம் அனைத்தையும் வாங்கித் தந்தேன். அதோடு சாமர்த்தியமுள்ள தேவர்களோடு உன்னையும் காப்பாற்றினேன்.*

*எட்டி மரமானாலும் வைத்த மரத்தை வெட்ட மாட்டார் கள். அதே போல் என் பிள்ளையாகிய உன்னைக் கொல்லக் கூடாது என்று பயப்படுகிறேன். இல்லையேல் உன்னை அழிப்பது எனக் கொன்றும் பெரிய காரியம் கிடையாது!*

**நமது சிந்தனை**

*இப்போது எல்லா வீடுகளில் குடிநீர்க் குழாய் வந்து விட்டது. முன்பெல்லாம் தெருவில் சென்றுதான் தண்ணீர் எடுத்து வர வேண்டும். அப்போது அங்கே பைப்படிச் சண்டை நடப்பது போல கடவுள்களும் மோதிக் கொள்கிறார்கள்*

*இதுவரை உங்களுக்கு ஏதாவது புரிந்ததா யார் அப்பன்? யார் மகனென்று? அதுதான் மதம். ஒன்றுமே இருக்காது - புரியாது - புரிந்தாலும் ஒத்துவராது!*

*தோழர்களே இந்த அருணாசல புராணம் 294 பக்கங்களைக் கொண்டது. நாம் இதுவரை 50 பக்கங்கள் தான் வந்திருக்கிறோம். இதை விமர்சித்து முழுவதும் எழுத வேண்டுமானால் சுமார் 500 பக்கங்கள் உள்ள நூலாகத்தான் எழுத முடியும். ஒன்றுமில்லாத காரியத்திற்கு அவ்வளவு செலவு செய்வது பகுத்தறிவாகாது.*

*ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் புராணங்கள் எல்லாமே புளுகு மூட்டைகள் தான் என்பது நீங்களே பகுத்தறிவோடு எந்தப் புராணத்தைப் படித்தாலும் விளங்கி விடும்.*



*பக்தியுடன் படித்தால் விளங்காது! புத்தியுடன் படித்தால் விளங்கும்! நன்றி, வணக்கம்.*

# பக்தி வந்தால் புத்தி போகும்

*(1) சாலையில் நடந்து போகிறோம். தவறுதலாக மாட்டுச் சாணியை மிதித்து விடுகிறோம். உடனே பக்கத்தில் உள்ள தரையிலோ அல்லது நீராலோ அதை சுத்தம் செய்து கொள்கிறோம். ஆனால்*

*புரோகிதர் வருகிறார் - சாணியை எடுத்து உருட்டி வைக்கிறார். அதன் மீது இரண்டு அருகம் புல்லை வைத்து சந்தனம், குங்குமம் பூசி அந்தச் சாணிக்கும் ஒரு பூணூலைப் போட்டு*

சுக்லாம் பர்தரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
பிரஸவன்ன வதனம் தியாயேத் சர்வ விக்னோய சாந்தையே

*- என்று தலையில் குட்டிக் கொண்டு சாணியின் முன்பு நடிக்கிறார்.*

*அதைச் சிறிதும் சிந்திக்காத நம் மக்கள் தாங்களும் தலையில் குட்டிக் கொண்டு புரியாத மந்திரத்தை அவன் சொல்வது போலவே சொல்லிக் கும்பிடுகிறோம்.*

*காலில் மிதித்த சாணிக்கும் இந்தப் பிள்ளையார் சாணிக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?*

***(2)** நம் வீட்டுப் பெண் குழந்தை வெளியிலிருந்து வீட்டினுள் வருகிறது. உள்ளே வந்தவுடன் இருட்டாக இருப்பது நாம் அறிந்ததே!*

*அவ்வாறு வரும் போது அரை டம்ளர் பாலை அந்த குழந்தை தெரியாமல் தட்டி விடுகிறது. உடனே அம்மாவும் அப்பாவும் கத்துகிறார்கள் - நீ நாளைக்கு இன்னொருவன் வீட்டில் வாழப் போகிறாய் - கண் தெரியவில்லையா? அங்கு போன பிறகு மாமியார் கண்டபடி பேசுவார்கள் என்று வெறும் அரை டம்ளர் பாலை தவறுதலாக சிந்தியதற்காக இந்த உலகமே அழிந்து விட்டது போலச் சாடுவார்கள்.*

*ஆனால் பக்தியின் பெயரால் 5 லிட்டர் பாலைக் கொண்டு போய் கருங்கல் கடவுளின் மேல் ஊற்றி பின்புறம் சாக்கடை*

வழியாக வரும் அசுத்தம் கலந்த பாலை தீர்த்தம் என்று கூறி குடிப்பார்கள். இதில் யார் செய்தது தவறு?

**(3)** மாடு எனும் வீட்டு விலங்கை மாட்டுத் தொழுவத்தில் கட்டுவது புத்தி

அதையே மூக்கணாங்கயிறு போட்டு, கழுத்தில் சங்கிலியைப் போட்டு கட்டி வைத்து - பால் தரும் காலங்களில் மட்டும் நல்லதீவனம் கொடுத்து - 1/2 லி பால் குறைவாகக் கறந்தாலும் காட்டுமிராண்டித் தனமாக அதை அடித்து - அதன் கன்றுக்குக் கூட சிறிதேனும் பால் தராமல் முழுவதும் ஒட்ட ஒட்டக் கறந்து - அதற்கும் குங்குமம், சந்தனம் வைத்து அதன் வாலைத் தூக்கி அதனடியில் கையை வைத்து மகாலட்சுமி அங்குதான் இருக்கிறாள் என்று கும்பிடுவது பக்தி

**(4)** இளநீர் பறித்து தோட்டத்தை நாசம் செய்யும் குரங்கை விரட்டுவது புத்தி -

கருங்கல் குரங்குக்கு வாயில் வெண்ணெய் தடவி, பட்டு-வடை மாலை - துளசி மாலை சாத்தி - கும்பிடுவது பக்தி

**(5)** வீட்டிற்குள் வரும் விஷமுள்ள பாம்பை அடித்துக் கொள்வது புத்தி

பாம்பு புற்றுக்கு பூசைகள் செய்து புடவை கட்டிவிட்டு நாகம்மா என்று கும்பிட்டு - முட்டை, பால் வைத்து காப்பாற்றும் படி வேண்டிக் கொண்டு, அதிலுள்ள பாம்பு வீட்டிற்கு வந்து விட்டால் பதறிப் போய் அதன் தலையிலேயே அடித்துக் கொன்று அதை புதைக்கும் போது - பால் ஊற்றி பட்டுத்துணி போட்டு புதைத்துக் கும்பிடும்போது உள்ளதுதான் பக்தி

## சகுனம்

ஒரு அரசனும் மந்திரியும் இரவு நகர சோதனைகளுக்கு போய் விட்டு விடியல் காலையில் வந்து உறங்கினார்கள்.

அரசன் தான் எழுந்து வரும் போது எதிரே மந்திரி வந்து கொண்டிருந்தார் - மந்திரியை கவனித்த அரசன் நிலைப்படியை



கவனிக்கவில்லை! அதில் வலுவாக மோதியதால் நெற்றியில் காயம் உண்டானது.

ஆத்திரம் அடைந்த அரசன் - மந்திரியின் முகத்தில் விழித்ததால் தான் இவ்வாறு ஆகிவிட்டது. எனவே அந்த மந்திரியின் தலையை வெட்டுமாறு உத்தரவிட்டார்.

மந்திரியோ சிரித்துக் கொண்டே போனார். ஆச்சரியப்பட்ட அரசன் உன் தலையை வெட்டச் சொன்னேன், நீ சிரித்துக் கொண்டிருக்கிறாயே? பயமில்லையா உனக்கு? என்று கேட்டார்.

என் முகத்தில் விழித்த உங்களுக்கு நெற்றியில் வெட்டு - நானும் அப்போது தான் எழுந்து வந்தேன் - உங்கள் முகத்தில் விழித்த எனக்கு உயிரே போகப் போகிறது - ஆம் இருவரில் யார்முகம் மோசமானது என்று நினைத்துச் சிரிக்கிறேன் என்றார்.

### கொஞ்சம் சிந்தித்தால் போதும்!

கடவுள் நம்மைக் காப்பாற்றுவார் என்று நினைத்துத்தான் நாம் பழனி, திருப்பதி போன்ற பெரிய கோயில்களுக்குப் போகிறோம்.

அங்கு தேவஸ்தானம் செலவு செய்து வைத்துள்ள போர்டுகளில் என்ன எழுதியிருக்கிறது என்று கவனித்தீர்களா? கருவறை அருகே நெருங்க நெருங்க சுவர்களில் எல்லா பெரிய பெரிய கோவில்களிலும் காணலாம். திருடர்கள் ஜாக்கிரதை - உங்கள் உடமைகளை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் - காணாமல் போனால் நிர்வாகம் பொறுப்பல்ல என்று!

இதன் பொருள் என்ன? உங்களையும் உங்கள் உடமைகளையும் நீங்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் - கடவுளோ, கடவுளுக்கே மூன்று வேளை சாப்பாடு போடும் தேவஸ்தானமோ காப்பாற்ற முடியாது என்பது தானே!

தன் காலுக்கு அடியில் இருக்கும் உண்டியலைக் காப்பாற்ற முடியாத கடவுளால் நம்மை எப்படி காப்பாற்ற முடியும்?

# சோதிடம்

இந்தியாவில் இந்துக்கள் என்பவர்கள் சாமி ஆடுதல் வாக்குச் சொல்லுதல், பூதம், பேய், பிசாசு, மனிதனை அடித்தல், மனிதனைப் பிடித்தல், மந்திரம் மந்திரித்தல், பில்லி சூனியம் செய்து மக்களுக்கு துன்பம் சாவு முதலியவை உண்டாக்குதல், குட்டி சாத்தான், கருப்பு முதலியவைகளைக் கொண்டு சித்து விளையாடுதல், வசியம் செய்து மக்களை ஸ்வாதீனப் படுத்தல், முன் ஜன்மம் பின் ஜன்மம் உண்டெனல் இவை முதலாகிய விஷயங்களில் நம்பிக்கைக் கொண்டு தங்கள் வாழ்க்கை நலத்திற்கு என்றும், எதிரிகளின் கேட்டிற்கு என்றும் எப்படித் தங்கள் பணத்தையும் நேரத்தையும் உபயோகிக்கின்றார்களோ அதுபோலவே தங்கள் வாழ்க்கைக்கு ஜோசியம் என்னும் ஒரு விஷயத்திலும் அதிக நம்பிக்கை வைத்து பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து வருகிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவோ கெடுதிகளும், பொருள் நஷ்டம், காலம் நஷ்டம், தப்பு அபிப்பி ராயம் முதலியவைகளும் ஏற்பட்டு வருவதை கண்கூடாய்ப் பார்க் கின்றோம். சாதாரணமாய் எப்போதுமே ஜோசியன், மந்திரவாதி, கோயில் குருக்கள் ஆகிய மூவரும் மக்களின் பேராசைக்கும் முட்டாள் தனத்திற்கும் சரிபங்கு தாயாதிகளேயாவார்கள். எப்படி எனில் முதலில் ஜோசியன் ஒருவனு டைய ஜாதகத்தைப் பார்த்து பலன் சொல்லுவதன் மூலம் கண்டம் நீங்க சாந்தி யும் கிரகதோஷ பரிகாரத்திற்கு சாமிகளுக்கு அர்ச்சனை அபிஷேகங்களும் செய்யும்படி சொல்லுவான். இதைக் கேட்ட அந்த மனிதன் தனது முட்டாள் தனத்தினால் ஏற்பட்ட பயத்திற்காகவும், ஆசைக்காகவும், மந்திரவாதியைக் கூப்பிட்டு சாந்தி கழிக்கச்சொல்லுவான். இந்த மந்திரவாதிகள் அனேகமாய் வைத்தியர் களாகவும் இருப்பார்கள். இவர்கள் சாந்தி கழிக்க கடைச்சாமான் பட்டியல் போடும் போதே ஒரு மண்டலம் (48 நாள்) அரைமண்டலம் நவகிரகங் களுக்கோ அல்லது குறிப்பிட்ட சனி செவ்வாய் முதலிய ஏதாவது ஒரு கிரகத்திற்கோ ஒருசாமிக்கோ, அர்ச்சனை, எள்ளு, பருத்திக்கொட்டை முதலிய தானம், விளக்கு வைத்தல் அபிஷேகம் செய்தல் ஆகியவை களையும், ஏதாவது புண்ணிய புராணம் படித்தல் முதலியவைகளையும் சொல்லிவிடுவான். இவைகளை எல்லாம் செய்வதால் மந்திரவாதிக்கும்



அர்ச்சகனுக்கும் புராண பிரசங்கிக்கும் வரும் வரும்படியில் ஒரு பாகம் ஜோசியனுக்குச் சேர்ந்து விடும்.

இந்தப்படியே எங்கும் இப்போதும் நடப்பது வழக்கம். ஆகவே இந்த விஷயத்தில் மந்திரம் அர்ச்சனை ஆகியவைகளைப் பற்றி விசாரிக்குமுன் ஜோசியம் என்பதைப் பற்றியே முதலில் யோசிப்போம்.

அதாவது:- ஜோசியம் என்றால் என்ன? அது உண்மையா? அப்படி ஒன்று இருக்க முடியுமா? என்பன முதலாகிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

ஜோசியம் என்பது உலக வழக்கில் அனுபவத்தில் ஒரு மனித ஜீவனுடைய பிறந்த காலத்தை ஆதாரமாய் வைத்து அந்த மனிதனின் வாழ்க்கை, அதன் சம்பவம், பலன் முதலாகியவைகளை மொத்தமாய் வருஷப் பலனாயும் மாதப் பலனாயும் தினப் பலனாயும் நிமிஷப் பலனாயும் சொல்லுவதும், அவற்றுள் துன்பம் வரத்தக்கது ஏதாவது நேர்ந்தால் அதற்கு ஏதாவது பரிகாரம் செய்து தடுத்துக் கொள்வதும், இஷ்ட சித்திக்கு ஏதாவது விரோதமாய் இருந்தால் அதற்கும் ஏதாவது பரிகாரங்கள் செய்வதன் மூலம் விரோதத்தை நீக்கி சித்தியடைய முயற்சிப்பதும் ஆகிய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகும். இந்த ஜோசியம் முன் சொன்னது போல் பிறந்த காலத்தைக் கொண்டு சொல்வதோடு மற்றும் வேறு பல வழிகளிலும் அதாவது பேர் நாமத்தைக் கொண்டும் - கேள்க்கப்பட்ட நேரம், கேட்ப வரின் இருப்பு நிலை, கேட்ட சங்கதி, ஜோசியனுக்கு எட்டும் நேரம், கேட்பவ ரின் தாய், தகப்பன் சகோதரம் பந்து முதலானவர்களின் பிறந்தகால ஜாதகம் முதலியவைகளைக் கொண்டும் பலன் சொல்வது உண்டு. இன்னும் இது போன்ற பல வகை அதாவது ஏதாவது ஒரு எண், ஒரு புஷ்பம், ஒரு எழுத்து ஆகியவைகளைக் கேட்டல், ஒரு அங்கத்தை தொடுதல் முதலாகிய வைகளின் மூலமும் பலன் சொல்லுவதுமுண்டு. ஆகவே மேல்கண்ட எல்லாவற்றின் மூலம் பலன் சொல்ல முடியுமா? முடியாதா? என்பதைப் பற்றி யோசிப்பதில் முதலாவதாக ஜீவன் பிறந்த காலத்தை ஆதாரமாக வைத்துப் பலன் சொல்லக் கூடுமா? என்பதைப் பற்றி முதலில் ஆறாய்வோம்.

*பிறந்த காலம் என்பது வயிற்றுக்குள் இருக்கும்போது ஜீவன் (உயிர்) ஏற்பட்ட காலமா? அல்லது வயிற்றிலிருந்து 7, 8, 9, 10 மாதங்களில் எப்பொழுதானாலும் பிறக்கும் காலமா? அப்படி பிறக்கும் காலத்தில் தலை வெளியில் தெரியும் காலமா? அல்லது ஒரு நாள் அரை நாள் அக்குழந்தை கீழே விழாமல் கஷ்டப்படும் காலத்தில் தலை வெளியாகி நிலத்தில் பட்டு கால் நிலத்தில் விழாமல் தாய் சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்கும் காலமா? அல்லது கால் தலை ஆகிய யெல்லாம் மருத்துவச்சி கையில் விழுந்த நேரமா? அல்லது மருத்துவச்சி கையிலிருந்து கீழே விழுந்த நேரமா? என்பனவாகிய கேள்விகள் ஒரு புறமிருக்க ஜீவனுடைய சரீரமெல்லாம் பூமியில் விழுந்த நேரம் என்பதாக வைத்துக் கொண்டே பார்ப்போ மானாலும் அந்த நேரத்தை சரியாக எப்படி கண்டு பிடிக்க முடியும் என்பதை யோசிப்போம். குழந்தை கீழே விழுந்ததும் அது உயிருட னிருக்கிறதா? இல்லையா? ஆணா பெண்ணா என்பன போன்றவைகளைப் பார்க்க சிறிது நேரமாவது செல்லும். பிறகு அந்தச் சேதியைக் கொண்டு வந்து வெளியில் இருக்கும் ஆண்களிடம் சொல்ல சிறிது நேரமாவது செல்லும். அந்த சேதியைக் கேட்டவன் நேரத்தை குறிக்க அங்கேயே அவனுக்கு கடிகாரம் வேண்டும். அந்த கடிகாரம் சரியான மணியா? என்பது தெரிய வேண்டும். கடிகாரமில்லாவிட்டால் வானத்தைப் பார்த்து நேரம் கண்டுபிடிப்பதாயிருந்தால் அதற்கு பிடிக்கும் நேரம் முதலியவை அல்லது அக்கம் பக்கம் கடிகார நேரம், அதுவுமில்லாவிட்டால் உத்தேச சுமார் நேரம் ஆகியவைகளின் தாமதங்களும் பிசகுகளும் எப்படி நேராமல் இருக்க முடியும்? இவை ஒரு புரமிக்க அந்த நேரத்தால் பலன் சொல்லுவதனால் அந்த நேரத்தில் உலகத்தில் பிறக்கும் ஜீவன்கள் எவ்வளவு இருக்கக்கூடும். மற்ற ஜீவன்களை எல்லாம் தள்ளிவிட்டு வெறும் மனித ஜீவனை மாத்திரம் எடுத்துக் கொண்டாலும் உலகத்தில் 170 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்ற கணக்குப்படி பார்ப்போமானால் சென்னை முதலிய பட்டணங்களின் சாதாரண அனுபவங்களின் படிக்கு உலகத்தில் நாள் ஒன்றுக்கு 226666 (இரண்டு லட்சத்து இருபத்தாராயிரத்து அறுநூற்று அறுபத்தாறு) குழந்தைகள் பிறப்பதாக கணக்கு ஏற்படுகின்றது. (இந்தக் கணக்கானது ஐந்து லட்சம் ஜனத்துகை உள்ள சென்னை நகரத்திற்கு தினம் ஒன்றுக்கு 70 - எழுபது குழந்தைகள் - பிறப்பதாக கணக்குப் போடப்பட்டிருக்கின்றது.) இதைத் தவிர*



*கணக்குக்கு வராத விதவைகளின் குழந்தைகள், கல்யாணம் ஆகாத பெண்களின் குழந்தைகள், புருஷன் சமீபத்தில் இல்லாத ஸ்ரீகளின் குழந்தைகள் ஆகியவைகளைச் சேர்த்தால் இன்னமும் இந்தக் கணக்குக்கு அதிகமாகும். இது ஒரு புறமிருக்க மேல்படி சாதாரண கணக்குப் படிக்குப் பார்த்தாலே ஒரு நாளைக்கு பிறக்கும் குழந்தைகளைப் பங்கிட்டுப் பார்த்தால் ஒரு நிமிஷத்திற்கு சுமார் 160 குழந்தைகள் வீதம் பிறக்கிறதாக கணக்கு ஏற்படுகிறது. இதில் 33 கோடி ஜனத்தொகை கொண்ட நமது இந்தியாவுக்கு மாத்திரம் கணக்குப் பார்த்தால் நிமிஷத்திற்கு 33 குழந்தை வீதம் பிறக்கின்றதாக கணக்கு ஏற்படுகிறது. ஆகவே இந்த 33 குழந்தைகளுக்கு மாவது ஜாதகப் பலன் ஒத்து இருக்க முடியுமா? இவைகளுக்குச் சரியான நேரம் கண்டுபிடிக்க முடியுமா? என்பதை யோசிக்க வேண்டும்.*

*நிமிஷக் கணக்கே இப்படி நிமிஷத்துக்கு 33 குழந்தைகள் பிறப்ப தாயிருக்கும் போது ஒரு சோதிடம் சொல்லுவதற்கு போதுமான காலமாகிய ஒரு லக்கினம் நட்சத்திரம் ஆகியவைகளின் காலத்திற்குள் எத்தனை குழந்தைகள் பிறக்கக்கூடும் என்பதைப் பார்த்தால் இது சிறிதும் பொருத்த மற்றதென்பதாகவே காணலாம்.*

*சாதாரணமாய் ஒரு ஜாதகம் என்பது வருஷம், மாதம், தேதி, கிழமை, மணி (அல்லது நாளிகை) அந்த சமயத்தின் லக்கினம் நட்சத்திரம் ஆகிய வைகளைக் குறித்துள்ளதேயாகும். உதாரணமாக பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் 2-ந் தேதி புதன் கிழமை காலை சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு விருச்சிக லக்கினத்தில் அஸ்த நட்சத்திரத்தில் ஒருவன் பிறந்தான் என்பதாக ஒரு துண்டு சீட்டில் எழுதி ஒரு ஜோசியனிடம் கொடுத்து விட்டால் இதன் பேரில் அந்த ஜோசியன் பலன் சொல்லிவிடக் கூடும் என்பதே அநேகமாக ஜோசியத்தின் லட்சணம். ஆகவே இந்த விருச்சிக லக்கினம் என்பது $5\frac{1}{4}$ நாளிகை உடையதாகும். இந்த ஐந்தே கால் நாளிகைக்குள் அதாவது 126 நிமிஷ நேரத்திற்குள் உலகத்திலே 20160(இருபதாயிரத்து நூற்று அறுபது) குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும். இது ஒரு புறமிருக்க மேலும் இந்த லக்கினத்தில் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகிய பூதக் கண் ணாடிப் பூச்சி முதல் யானை வரையில் உள்ள ஜீவன்களின் குழந்தைகள்பல நூறு கோடிக்கு மேல் பிறந்து இருக்க வேண்டும். இதுவுமொரு புறமிருக்க,*

இந்தியாவில் மாத்திரம் அந்த விருச்சிக லக்கினத்தில் முன் சொல்லப் பட்ட கணக்குப் படிக்கு 4158 (நாலாயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு) குழந்தைகள் பிறந்திருக்க வேண்டும்.

ஆகவே அன்றைய தினம் இந்த விருச்சிக லக்கினத்தில் பிறந்த காரணத்திற்காக மேற்படி 4158 பேருக்கும் வாழ்க்கையில் ஒரு விதமான பலன் அனுபவமிருக்க முடியுமா? அந்தப்படி இருக்கின்றதா? என்பதை முதலில் யோசிக்க வேண்டும்.

தவிர இந்த பலன் அனுபவங்கள் மனிதனுக்குத் தானாக ஏற்படுவதா? அல்லது ரக்ஷிக்கிற கடவுள்களின் தன்மையால் ஏற்படுவதா? அல்லது முன் ஜென்மத்தில் செய்த கர்மத்தின் பலனாய் பலன் ஏற்படுவதா? அல்லது விதியின் பயனாய் பலன்கள் ஏற்படுவதா? என்பவைகளையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந் நான்கிலும் மனிதனுக்குப் பலன் அவனது சொந்த இஷ்டத்தால் செய்கையால் தற்சம்பவமாய் ஏற்படுமானால் மேல்காட்டியவைகளில் அது தவிர மற்றவைகள் மூன்றும் அடிபட்டுப்போகும். கிரகங்களின் தன்மை யினால் ஏற்படும் என்றால் இதைத் தவிர மற்ற மூன்றும் அடிபட்டு போகும். முன் ஜன்ம கர்மத்தின்படி என்றால் இது தவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். மூலைவிதிப்படி என்றால் இதுதவிர மற்ற மூன்றும் அடிபட்டுப் போகும். ஆகவே மனிதனுடைய அனுபவ பலனுக்கு இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் காரணமாய் இருக்க முடியுமே தவிர இன் நான்கும் சேர்ந்து குழப்பிக் கொண்டிருக்க முடியாது. இது ஒரு புறமிருக்க இந்த வியாசத்திற்கு அவசியமான பிறந்த நேர லக்கினத்தால் ஏற்பட்ட கிரகத் தன்மைப் பலனைப் பற்றியே மேலும் ஆராய்வோம்.

உதாரணமாக இன்ன இன்ன கிரகம் இன்ன இன்ன வீட்டில் இருப்ப தாலும் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன கிரகங்கள் இன்ன இன்ன கிரகங்களைப் பார்ப்பதாலும் இந்த ஜாதகன் இன்ன இன்ன காரியம் செய்து இத்தனை தடவை சிறைக்குப் போவான் என்பதாக ஒரு சரியான பிறந்த காலத்தைக் கண்டு பிடிக்கப்பட்ட ஜாதகன் ஒருவனுக்கு சரியான கெட்டிக்கார ஜோசியன் ஒருவன் பலன் சொல்லுகின்றான் என்பதாக வைத்துக் கொள்ளுவோம். இவற்றுள் இந்த ஜாதகன் இன்ன வேளையில் இன்னாரைக் கொன்று ஜெயிலுக்குப்



போவான் என்று இருந்தால் அந்தக் கொல்லப்பட்ட வனுடைய ஜாதகத்திலும் இன்ன வேளையில் இன்னாரால் கொல்லப்பட்டுச் சாவான் என்று இருந்தாலொழிய ஒருக்காலமும் பலன் சரியாய் இருக்கவே முடியாது என்பது உறுதியானதாகும். இந்த இரண்டு ஜாதகர்களுடைய பலனும் இருவருக்கும் தெரிந்து விட்டதாகவே வைத்துக் கொண்டாலும் இவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டாவது தப்பித்துக் கொள்ள முடியுமா? என்றால் ஒருக் காலமும் முடியவே முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தப்பித்துக் கொண்டால் சோதிடம் பொய்யாய் விடும். அன்றியும் ஒரு சமயம் தப்பித்துக் கொள்வதாகவே வைத்துக் கொண்டால் அந்த இருவர்கள் ஜாதகத்திலும் "இந்த சங்கதி தெரிந்து இருவரும் ஜாக்கிரதையாய் இருப்பதின் மூலம் இருவருக்கும் அந்தக் காலத்தில் அந்த சம்பவங்களால் கொலையோ சிறைவாசமோ கண்டிப்பாய் ஏற்படாது" என்று தான் அந்த ஜாதகத்தின் முடிவு இருந்தாக வேண்டும். அப்படி இருக்கு மானால் இந்த விஷயத்தை அவ்விருவரும் தெரிந்து ஜாக்கிரதையாயிருந் தாலும் தெரியாமல் கவலையற்றே அஜாக்கிரதையாயிருந்தாலும் இருவருக் கும் கொலையும் சிறைவாசமும் கிடைக்க முடியவே முடியா என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் ஜாதகத்தில் ஏற்கனவே இருக்கின்றபடி நடந்து தானே தீரும்.

இதற்கு சாந்தி தோஷ பகிஷ்காரம் என்பவைகள் செய்வதன் மூலமா வது ஏதாவது பலனை மாற்றி விட முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கலாம். அதாவது இன்ன கிரகம் இன்ன வீட்டில் இருப்ப தால் இன்ன கெடுதியான பலன் ஏற்படும். ஆதலால் இன்ன தோஷ பரிகார சாந்தியும் இன்ன கிரக தேவதைக்கு இத்தனை நாள் அர்ச்சனையும் செய்தால் நிவர்த்தி யாகும் என்று ஜோசியன் சொல்வானானால் அல்லது ஜாதகத்தில் இருக்கு மானால் இந்த சாந்தியின் மூலமாகவோ அர்ச்சனையின் மூலமாகவோ அந்த கிரகங்களை அந்த காலத்தில் அந்த வீட்டை விட்டு மாற்ற முடியுமா அல்லது அவைகள் மாறுமா என்பதைக் கவனிக்க வேண்டும். அது மாத்திர மில்லாமல் இம்மாதிரி சாந்தியோ பரிகாரமோ செய்வதன் மூலம் தப்பித்துக் கொள்வான் என்றும் அதில் இருந்தாக வேண்டாமா? அப்படிக்கில்லாத பக்ஷம் எந்தவித சாந்தியாலும் தோஷம் பரிகாரமாக முடியாது. முடிந்தால் ஜோசியம் பொய்யென்றே தீர்மானமாகி விடும்.

நிற்க, முடிவாக எந்தக் காரணத்தைக் கொண்டாவது ஜோசியம் நிஜம் என்றாகி விட்டால் எந்த மனிதன் மீதும் எந்தக் குற்றமும் சொல்வதற்கு இடமுண்டா?

ஜாதகபலன்படி நடவடிக்கைகள் நடந்தால் அதற்கு ஜாதகன் மீது குற்றம்சொல்லுவது மடமையும் யோக்கியப் பொருப்பற்றத் தன்மையும் ஆகாதா? என்று கேட்க்கின்றோம். ஒரு மனிதனுக்கு இன்ன காலத்தில் திருடரால் பொருள் நஷ்டம் ஏற்படும் என்று இருந்தால் அதே நேரத்தில் மற்றொரு மனிதனுக்கு திருட்டுத் தொழிலில் பொருள் லாபம் கிடைக்கும் என்று ஜாதகப் பலன் இருந்துதான் ஆக வேண்டும். அதுமாத்திரமல்லாமல் திருட்டுக் கொடுத்தவனுக்கு பணம் கொடுத்து யார் யார் நஷ்ட மடைந் தார்களோ அவர்கள் ஜாதகத்திலும் இன்ன காலத்தில் இன்னாருக்கு பணம் கொடுத்து அது திருட்டுப் போய் அதனால் நஷ்டமடைய வேண்டும் என்று இருந்தேயாக வேண்டும். அதுபோலவே திருடினவனிடமிருந்து பணம் வாங்கியவர்களுக்கும் இன்ன காலத்தில் இன்னான் இன்னாரிடம் திருடு வதால் இன்ன இன்னாருக்கு லாபம் வரும் என்று அவர்கள் ஜாதக பலனும் இருந்தாக வேண்டும்.

ஆகவே இந்தப்படி எல்லாம் ஜோசிய உண்மை இருந்துவிட்டால் பிறகு கடவுள் செயல் எங்கே? மோட்ச நரகம் எங்கே? தலைவிதி எங்கே? முன் ஜன்ம வினைப்பயன் எங்கே? இவைகளுக்கு வேலை ஏது? என்பதைப் பற்றி யோசித்தால் இவை அவ்வளவும் பொய்யாகவே முடியும்.

இவைகளுக்கெல்லாம் நேரமும் இடமும் சம்பாதித்து மெய்ப்படுத்தக் குழப்புவதாக வைத்துக் கொண்டாலும் கண்டிப்பாக ஒரு மனிதனின் நடவடிக்கைகளுக்கு அந்த மனிதனுடைய பொறுப்பையாவது அடியோடு விட்டுத்தானாக வேண்டும். இனியும் இதைப்பற்றிய விபரங்கள் மற்றொரு சமயம் விரிப்போம்.

**குடி அரசு - தலையங்கம் - 06.07.1930**



# ஆத்மா

ஆத்மா,என்னும் விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கும் நமது நண்பர்கள் பலர் இது ஒரு தத்துவ விசாரணை விஷயம். இதைப்பற்றி எழுதவோ, பேசவோ வேண்டிய அவசியம் சமுதாய சீர்திருத் தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக்காரர்கள் அனாவசியமாய் கண்ட கண்ட விசயங்களிலெல்லாம் தலையிட்டு சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக் கொள்ளுவானேன்? என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட நண்பர்கள் சமுதாய சீர்த்திருத்தம் என்பது என்ன என்பதாக சரிவர உணராத வர்கள் என்று நினைத்துவிட்டு நம் பாட்டுக்கு நாம் மேலே செல்லக் கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில் சமுதாய சீர்த்திருத்தம் என்றால் ஏதோ அங்கும் இங்கும் இடிந்துபோன - சுவண்டு போன - ஆடிப்போன பாகங்களுக்கு சுரண்டி கூறுகுத்தி, மண்ணைக் குழைத்து சந்து பொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதி இருக்கின்றார்கள். ஆனால் நம்மைப் பொருத்த வரை நாம் அம்மாதிரி துறையில் உழைக்கும் ஒரு சமுதாய சீர்திருத்தக்காரரல்ல என்பதை முதலில் தெரித்துக் கொள்ளுகின்றோம். மற்ற படி நாம் யார்? என்றால் என்ன காரணத்தினால் மக்கள் சமுதாயம் (மக்கள் சமுதாயம் என்றால் உலக மக்கள் சமுதாயம்) ஏன் சீர் திருத்தப்பட வேண்டிய நிலைமைக்கு வந்தது? என்பதை உணர்ந்து உணர்ந்தபடி மறுபடியும் அந் நிலை ஏற்படாமல் இருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில் அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை மேற்கொண்டிருக்கின்றபடியால் சமுதாய சீர்திருத்தம் என்பதைப் பற்றி மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்த தற்கு நாம் மாறுபட்ட கொள்கை யையும், திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயே தான் பலவற்றில் உலக மக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவை இல்லை என்றும், கெட்டது என்பதை

நல்லதென்றும், நல்லது என்பதை கெட்டது என்றும், காப்பாற்றப்பட வேண்டும் என்பதை ஒழிக்க வேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயத்தை கூறுவோராக - செய்வோராகக் காணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும் மதிக்கப்படுவதும் பழிக்கப்படாமல் - குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். உதாரணமாக இது விஷயமாய் நாயனார் அவர்களது குறளில்

“உலகத்தார் உண்டென்பதில் என்பான் - வையத்

தலகையா வைக்கப்படுவான்”

என்று ஒரு குறள் காணப்படுகின்றது. இதன் பொருள் அக்குறளில் காண்கின்றபடி பார்த்தால் “உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை இல்லை என்று சொல்லுபவன் உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்” என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதில் இருந்து உலகத்தார் என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? “உலகத்தார் என்றால் உயர்ந்தோர்” என்று சொல்லுவதானால் உயர்ந்தோர் என்பதற்கு லக்ஷணமென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? வையத் தலைகை என்பதற்கு திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பன போன்ற பல தர்க்க விவகாரங்கள் அக்குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும் அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக்குறளின் கருத்து “அநேக மக்களால் உண்டு என்று கருதப் பட்ட ஒரு விஷயத்தை இல்லை என்று சொல்லுபவன் அறிவில்லா தவன்” என்று பொருள்படுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இப்படி இருந்தாலும் இதிலிருந்து அவன், அதாவது உலகத்தாரால் உண்டு என்பதை இல்லை யென்று சொல்லுபவன் எதனால் அறிவில்லாதவன் என்று கண்டு பிடிக்க வேண்டியது இங்கு முக்கியமாகின்றது. எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுகின்றதற்காக அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லது பலர் - அநேகர் மற்றவர்கள் - எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு, அது எப்படி இருந்தாலும் கண்மூடித் தனமாய் பின்பற்றாமல் தனது



சொந்த அபிப்பிராயத்தை துணிந்து சொல்ல வந்துவிட்டானே அந்த அடங்காத-கீழ்படியாத - ஊருடன் ஒத்துப் போகாத - ஆணவமான தண்மையுடைய அந்தசெய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக் கூறியதற்கு ஆதாரமாக அவன் கொண்ட அபிப்பி ராயம் குற்றம் என்று ஏற்படுமானால் இங்கு உலகத்தார் சொல்லுவதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு நாயனார் சொல்லி இருக்க வேண்டும். அல்லது அப்படி உலகத்தார் அபிப்பிராயத்துக்கு விரோத மாக அபிப்பிராயப்பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்லுவது என் கின்ற தன்மை குற்றமானதென்று கருதி நாயனார் சொல்லி யிருந்தால் மனிதனுக்கு அவனவனபிப்பிராயத்திற்கு சுதந்திரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச்சொல்லி இருக்க வேண்டும். ஆகவே அக்குறளானது உலக மக்களில் பொதுவாக பெரும்பான்மையோரையோ அல்லது அறிவாளி களாகிய பெரும்பான்மையோரையோ யாரைக் குறிப்பில் வைத்துக்கொண்டு நாயனார் சொல்லி இருந்தாலும் அக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமதபிப்பிராயம்.

ஆதலால் ஆத்மா என்கின்ற விசயத்தைப்பற்றி யார் என்ன சொல்லி இருந்தாலும் - உலகமே என்ன கருத்துக் கொண்டிருந்தாலும் அதை லக்ஷி யம் செய்யாமலேயே நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம்.

ஆதலால் ஆத்மா என்பது ஒரு வஸ்து அல்ல, பொருள் அல்ல. அது சுதந்திரம், அறிவு உணர்ச்சி முதலாகியவைகளை உடையதல்ல என்பதோடு அது ஒரு பெரிதும் அர்த்தமற்ற வார்த்தை என்றே நமக்கு காணப்படுகின்றது. இங்லீஷ், தமிழ் அகராதிகளில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்லீஷில் சோல் (Soul) என்றும், சோல் என்றால் அறிவு-யோசனை - ஆசை பிறக்கும் இடம், ஊக்கம், உள் சக்தி, மனிதவர்க்கம், உயிர் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருந்து அதாவது இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்பட வேண்டியது ஒரே ஒரு

வார்த்தைதான் ஆகும் . பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டி இருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாய் இருக்கின்றன.

ஆகவே பிராணன் என்பது என்ன என்று பார்த்தால் அது ஒரு காற்று, பிராணவாயு இருதயத்தில் இயங்கிக்கொண்டிருப்பது என்பதாகத் தான் அகராதிகளில் காணப்படுகின்றது.

இது இங்ஙனமிருக்க இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்திற்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்துவென்றும் அது சூக்ஷம வஸ்து வென்றும் அதற்கு பிறப்பு இறப்பு இல்லை என்றும் அது மனிதன் இறந்த பின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும், மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங்களுக்காக அதன் பயனை சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கின்றதென்றும் மற்றும் எத்தனையோ விதமாக அதைப்பற்றி பல மதங்களில் பல விதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால் அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்திற்கு வேறாய் "என் சரீரம்" என்று சொல்லுவதன் மூலம் சரீரத்திற்கும் வேறுபட்டதென்றும் சொல்லுவது போன்ற ஏதேதோ பிரிவுகள் காட்டி அந்த ஆத்மா சரீரம் விட்டுப்பிரிந்த பிறகு அடைய வேண்டிய - அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிரதானமாகக் கருதி அதற்கு தகுந்தபடி அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டு அந்த மாதிரி ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன வென்றும் அதற்காகவே உலகத்தில் மனித கோடிகளுக்கும் மதம் அவசியமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆகவே கிறிஸ்து, பௌத்தம், இஸ்லாம், இந்து ஆகிய மதங்களில் பௌத்த மதம் தவிர மற்ற முக்கியமான மூன்று மதங்களும் ஏறக்குறைய ஒரே கொள்கையில் தான் ஆத்மாவுக்கும், கடவுளுக்கும் உள்ள சம்மந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக் கொண்டு இருக்கின்றன.

நிற்க மேற்கண்ட ஆத்மா என்பதில்



1. மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மத சம்மந்தங்களுக்கு அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்மந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்கு சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணு, ஜெந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர் வாழ்வன முதலிய ஜெந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

2. இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

3. மனித ஆத்மா மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை சரீரத்தை விட்டுப்பிரிந்த பிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே மற்றப் புல், பூண்டு, ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வன, அணு ஜந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

4. இந்த ஆத்மாக்களில் மேல் கண்ட ஜந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள், தன்மைகள் முதலியவைகள் அதாவது புலன்வித்தியாசங்கள் அறிவுவித்தியாசங்கள், உள்ளதுபோலவே மனிதஜீவனும் மற்ற ஆத்மாக்கள் போலவே இருப்பதோடு புலன் அறிவு விஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம் மாறுதல் முதலியவைகள் உடைய ஜந்துவா?

5. உலகத்திலுள்ள மேல் கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு. மனித ஜெந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படி வேறுபாட்டை உடைய ஜந்துவா மனிதன்?

என்பன போன்ற இன்னும் பல கேள்விகளும் சந்தேகங்களும் ஒரு பக்கமிருந்தாலும், மனிதன் என்பதையே நாம் என்ன என்பதாக முதலில் ஆராய்வோம். மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (ளுநடக) என்பதான தான், நான், என் என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளே யாகும். அக்குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்ளும் போதும் எனக்கு என்னுடைய என்று சொல்லிக் கொள்ளும் போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகின்றது? என்பதை கவனித்தால் ஆத்துமத் தன்மை என்பது தானாகவே விளங்கும்.

அதாவது ஒரு மனிதன் நான் என்பதில் அந்த மனிதசரீரத்தின் எந்தப் பாகம் தனித்து இருந்து நான் என்கின்றது? அல்லது அந்த சரீரம் மொத்தமுமா? அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை நான் என்ற உணர்ச்சி இருக்கின்றது? சரீரத்தில் இருந்து எது போய்விட்டால் நான் என்பது போய்விடுகின்து? என்பது முதலாய் கேள்விகளுக்கு சமாதானம் கிடைத்தாலொழிய நான் என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதை கவனிக்கும்போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம், என் சித்தம், என் பிராணன், என் பிராணவாயு, என் சூக்ஷும சக்தி, என் கடவுள், என் ஆண்டவன் என்பது போன்ற அதாவது மனிதன் அல்லது ஆத்மா அல்லது ஜீவன் என்பவைகளாகிய எது எதை நாம் மனிதனாக ஆத்மாகவாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றோமோ அவைகளை எல்லாம் தன்னில் இருந்து தனிப்படுத்தி அவைகள் கூட என் என்பதைச் சேர்த்து பேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே என் ( நான் ) வேறு. மேற்கண்ட மற்றவைகள் எல்லாம் வேறு என்பதாக நினைக் கும்படியாக இருக்கின்றது. ஆதலால் இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை உணர்ச்சி ஆகிய நான் என்பது அல்ல என்றே சொல்ல வேண்டி யிருக்கிறது.

இந்த நிலையில் மனிதனாகிய நான் என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங்களுக்கு ஆக நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ ஆகிய சூக்ஷும ஜீவன் என்பது எப்படி அந்தப்பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பதுதான் எப்படி நியாயமாகும்? நான் செய்த காரியத்திற்கு என் ஆத்மாவை தண்டிப்பதோ, கண்டிப்பதோ சன்மானமாகியவைகளை கொடுப்பதோ எப்படி கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக் தத்தக்கதாகும்.

இந்தமாதிரியான பிரச்சினைகளுக்கு சமாதானம் சொல்லுபவர்கள் பெரிதும் ஒரே சமாதானம் தான் சொல்லுவார்கள். அதென்னவென்றால் "இம் மாதிரியான பிரச்சினை வெகு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே பலரால் கேட்கப்பட்டாய்விட்டது. இவை சாதாரண மனிதர்களுக்கு புரியும் படி யானவைகள் அல்ல, சொன்னாலும்



உங்களைப் போன்றவர்களால் கிரகித்துக் கொள்ளமுடியாது. வேண்டுமானால் கைவல்யம், ஞானவெட்டி, வாகிஷ்டம், கீதை, வேதாந்தசாரம், தத்துவகீதை முதலாகியவைகளைப் பாருங்கள். அதற்கு வேறு பல பக்குவங்கள் வேண்டும்" என்பது போன்ற பதிலை சொல்லி விடுவார்கள்.

சாதாரணமாக கிறிஸ்துவர்களுக்கும் இஸ்லாமானவர்களுக்கும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் தீர்ப்பு நாளை உத்தேசித்து தாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு பலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடு விட்டு விட்டார் கள். ஆதலால் அவர்களிடம் அதிக சிக்கலோ புரட்டோ கிடையாது. பௌத்தர்கள் "ஆத்மா என்பதே கிடையாது நித்திய வஸ்து என்பதே கிடையாது" என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக் குள்ளும் இம்மாதிரியான கொசமுசாக்கள் கிடையாது.

ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம், ஆத்மா, சூக்ஷும சரீரம், மோக்ஷ லோகம், நரகலோகம், மறுபிரப்பு அதுவும் பலவித மாய் அதாவது புல்லாகிப் பூண்டாகி என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும் இவைகள் எல்லாவற்றையும்விட மற்றொருவிதமாய் அதாவது ஆத்மாக்கள் பிதுர் தேவதைகள் ஆகி பிதுர்லோகம் என்பதில் இருந்து கொண்டு பிள்ளைகள் சந்ததியார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தின் பிராமணா ளுக்கு கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய் பெற்று அடைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய் சொல்லப் படுகின்றன. ஆகவே இவை தானாகவே ஒன்றுக்கொன்று முரண்படுவதாலும் அதைப்பற்றி முன்னமேயே பலபல சமயங்களில் வேறுவேறு வியாசங்களில் எழுதப்பட்டதாலும் இதை நிறுத்திவிட்டு அடுத்த வியாசத்தில் "நான்" அல்லது ளநடக தன்மை என்பதைப்பற்றி விவரிப்போம்.

***குடி அரசு - கட்டுரை - 03.05.1931***

# "நான்"

சென்ற வாரத்திற்கு முந்திய வாரத்தில் ஆத்மா என்னும் விஷயத்தைப் பற்றி எழுதிய வியாசத்தின் இறுதியில் அதன் தொடர்ச்சி பின்னால் வரும் என்று எழுதப்பட்டிருந்தது. அதாவது ஆத்ம உணர்ச்சி என்று சொல்லப்படு வதான "நான்" (என், எனது, என்னுடைய) என்பதின் தன்மையைப் பற்றி எழுதுவதாக எழுதியிருந்தோம்.

ஆகவே இப்போது மனிதன் தன்னை உணர்த்தும் வகையில் நான் என்று சொல்லிக் கொள்வது எது என்பதே இப்போது இவ்வியாசத்தில் ஆராய்வதாகும். முன் வியாசத்தில் ஆத்மா என்பதைப் பற்றிச் சொன்னது போலவேதான் இப்போது "நான்" என்பதைப் பற்றியும் சொல்ல வேண்டி யிருக்கின்றது.

மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்வது எதனால்? அது எது? என்னும் ஆராய்ச்சியானது இந்து மதம் என்பதின் கடைசி அதாவது "வேதாந்த" தத்துவமாகப் பாவிக்கப்பட்டு "அதைக் கண்டுபிடிப்பதே கடவுளைக் கண்டு பிடித்ததாகும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக "தன்னை அறிந்தவனே கடவுளை அறிந்தவனா வான்" என்றும், "தன்னைத்தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டிய தில்லை" "தன்னை அறிந்தவரை ஞானி" என்றெல்லாம் சொல்லப் படுவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

ஆகவே இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை 'நான்' என்று சொல்லிக்கொள்கின்றானே அது எது என்று கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ அது சுலபத் தில் மனதுக் கெட்டாதது என்று கருதியே இப்படிச் சொல்லியிருக்கக் கூடும் என்பதாகவும், மற்றும் 'நான்' என்பதை கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால் பிறகு அவன் "ஞானி யாகவும்" "துறவியாகவும்" அல்லது கடவுளைப்பற்றி கவலைப்பட வேண்டி யவனல்லாத - லக்ஷியம் செய்யப்பட வேண்டியவனல்லாத "நாஸ்தீகனாக" வும் ஆகிவிடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாக முடிவு செய்து கொள்ள வேண்டியிருக்கின்றது.



எப்படி இருந்தாலும் ஒரு மனிதன் தான் யார்? தனக்குள் இருந்து நான் - என் என்று வரும் உணர்ச்சி எது? அதெப்படி உண்டாகின்றது? எது வரையில் அவ்வுணர்ச்சி இருக்கின்றது? என்பவை முதலான உண்மையை உணர்ந்தால் அவன் நாஸ்திக அபிப்பிராயத்தை அதாவது ஆத்மாவோ, கடவுளோ இருக்கின்றது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ள வேண்டியவனாகி விடுவான் என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு என்பதை ஒப்புக் கொள்ளுகின்றோம்.

உலகத்தில் பெயரும் - உருவமும் உள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒரு வித சேர்க்கையால் அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக் கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில் உலகத்தில் உள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடை யாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது என்பதை ஞாபகத் தில் வைத்துக் கொள்ளவேண்டும், ஏனெனில் எந்தப் பெயரும் ஒரு தோற் றத்திற்கு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் உபயோகிக்கப்பட்டு - சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்து வுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக் கொண்டு அதற்குப் பெயர் என்ன? என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக் காட்டும்படி அம்மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக் காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை அதாவது அவன் முன் சொன்ன பெயரை உடையதாக அது காணப் படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம், அதாவது

ஒரு லாந்தர் - ஒரு மேஜை-ஒரு கடிகாரம் - ஒரு புஸ்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டால் முறையே முன் சொன்ன பெயர்களைத்தான் சொல்லுவான்.

ஆனால் ஒரு லாந்தர் என்பது எது என்று தொட்டுக் காட்டச் சொன்னால் லாந்தர் என்பதில் அவன் தொட்டுக்

காட்டிய பாகம் ஒரு சிமிணி யையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோ தான் தொட்டுக் காட்டப்பட்டதாய் இருக்கும்.

அதுபோலவே ஒரு மேஜையைத் தொட்டுக் காட்டச் சொன்னால் தொட்டுக் காட்டிய பாகம் ஒரு பலகையையோ, அல்லது காலையோ, ஆணியையோ, குமிளையோ, கைப்பிடியையோ தான் தொட்டுக் காட்டியதாய் காணப்படும்.

அது போலவே ஒரு கடிகாரம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் மேல் மூடியையோ, கண்ணாடியையோ அல்லது, திறந்த கடிகாரமாய் இருந்தால், ஒரு சக்கரம் என்பதையோ, ஆணி என்பதையோ தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும்.

அதுபோலவே ஒரு புஸ்தகம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் தொட்டுக் காட்டிய பாகம் காகிதமாகவோ, அட்டை யாகவோ, காலிகோ துணியாகவோ, தோலாகவோ தான் காணப்படும்.

இப்படியே மற்றும் அதன் உள்பிரிவு பெயர்களும் அதாவது மேல் சொல்லப்பட்ட பெயர்களும் சரியானபடி தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்கமுடியாது. ஏனெனில் அவன் லாந்தர் என்பதாகக் காட்டியது கம்பி என்பதனாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக் காட்டியதாக இல்லாமல் இரும்பைத் தொட்டுக்காட்டியதாகதான் காணப்படும். இரும்பு என்பதை காட்டும் போது ஏதோ ஒரு வகையான மண்ணின் சேர்க்கையை காட்டிய தாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூபமாத்திரத்திற்கு - ஒரு உருவத்திற்கு-ஒரு மாதிரியான தோற்றத்திற்கு அந்தப் பெயர் சொல்லப்படுவதாகக் காணப்படுமே அன்றி அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு அந்த வஸ்துக்கள் வேறு எந்த ரூபத்தை அடைந்தாலும், வேறு எந்த குணத்தை அடைந்தாலும் அந்தப் பெயரையே யுடையதாக காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்பட முடியாது என்பது இவற்றிலிருந்து நன்றாய் உணரக் கிடைக்கின்றது.

ஆகவே லாந்தர் என்றதும், மற்றும் மேஜை, கடிகாரம், புஸ்தகம் என்றதும் ஒரு வித வடிவத்தில் காணப்படும் ஒரு



தோற்றத்தின் பெயரே அல்லாமல் ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத் தகுந்ததாகும்.

எப்படியெனில் மேஜை நாற்காலி, பெஞ்சு, ஊஞ்சல் என்று சொல்லப் படுவதான வஸ்துக்கள் மரம் என்னும் ஒரே மூலப் பொருளாலும் இரும்பு என்னும் ஒரே உபமூலப் பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும் தனித்தனி வடிவத் தோற்றத்தினால் தனித்தனி பெயரை உடையதாகி இருப்பது போலவே உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால் பலவித பெயர்களை உடையதாயிருந்து பல பல காரணங்களால் அதே வஸ்துக்கள் வேறு பல பெயர்களையும் அடைந் தாலும் முடிவில் அவற்றின் மூலப்பொருள்கள் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்துவாகவேதான் இருக்கும்.

இதுபோலவேதான் ஜீவன்கள் என்கின்ற 'உயிர்'ப் பிராணிகள் எல்லாம்கூட உருவத்தில் -தோற்றத்தில் வேறு வேறு வகையாய் - பெயராய் சொல்லப்பட்டாலும் அவற்றின் மூலப் பொருள்களும் ஒன்றேயாகும். அதாவது மரத்தையே மூலப் பொருளாய்க் கொண்டமேஜை, நாற்காலி பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம் தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பது போல் அணுக் கிருமி, பூச்சி, புழு, பக்ஷி, மிருகம், குரங்கு மனிதன் முதலாகிய பல ஜெந்துக்களும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய் பலபெயர்கள் சொல்லப்பட்டாலும் தொட்டுக்காட்டும் பாகங் களானது எல்லா ஜீவ வர்க்கத்திற்கும் ஒரே மாதிரியான-ஒரே பெயர் கொண்ட தான மூலப் பொருளாகத்தான் இருக்கும். ஆகவே ஜீவ வர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப் பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவற்றை அவற்றின் மூலப் பொருள்களும், தத்துவமும் ஒன்றே யாகும்.

எனவே எத்தனையோ கோடிவித ஜீவப்பிராணிகள் என்பதில் மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய வுருவத்திற்கு சொல்லப்படும் பெயரேயொழிய மனிதன் என்கின்ற ஒரு தத்துவத் தனிப் பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில் மனிதன் என்று குறிப்பிடுவதற்கு தொட்டுக்காட்டக்கூடிய ஒரு வஸ்து மனித சரீரத்தின் எந்த பாகத்திலும் கிடையாது என்பதாலேயாகும். உதாரணமாக ஒரு மனித உருவத்தைக் காட்டி அவனை மற்ற ஒரு

மனிதனைத் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில் ஏதாவது ஒரு அவயவத்தைத்தான் தொட்டுக்காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால்,வயிறு, மார்பு, முதுகு, தோள் என்பவை முதலாகிய ஏதாவது ஒரு பெயரையுடைய அவயமாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ வஸ்துவையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால் அது தசை, தோல் முதலாகிய பெயர்களையுடைய பொருளாகத்தான் காணப்படும். இப்படி எல்லாம் இருந்தாலும் கூட அப்படி காட்டப்பட்ட மனிதனும் இயங்குதல் அதாவது அசைகின்ற சக்தி இருக்கும் போதுதான் அந்த தோற்றத்திற்கு மனிதன் என்கின்ற பெயரை உடையதாகவும் அதாவது அசைகின்ற சக்தி இல்லாது போய் விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதே தோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாக ஆகிவிடுகின்றது.

அன்றியும் மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும் வரை அந்த சரீரத்தில் எந்த பாகம் அதாவது முன் சொல்லப்பட்ட அவய வங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எந்த பாகம் போய் விட்ட போதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. ஆகையால் அசையும் சக்தி உள்ள ஒருவித தோற்ற உருவத்திற்குத்தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்து வருவதை பார்க்கின்றோம். இந்தப் படியான மனிதன் அசையும் சக்தியை உடைத்தாய் இருக்கும்வரை தான் அவனுக்குள் உயிரோ-ஜீவனோ-ஆத்மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகின்றார்களே ஒழிய வேறில்லை.

இந்த அசையும் சக்தி இருக்கின்ற ஜீவன்கள் எல்லாவற்றிற்குமே தான் ஆத்மா என்பதாக ஒன்று இருக்கின்றது என்பது ஆத்மாவாதிகளின் கொள்கையாகும். அதாவது "சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்து விட்டால் அசைவு நின்று விடும்". அதாவது மனிதன் செத்துப்போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தாலும் "சரீரத்திற்கு அசையும் சத்தியை கொடுப்பது தான் ஆத்மா" என்பது ஆத்மாவாதிகள் கொள்கையென்பதும் இதனால் புலப்படும். ஆகவே இந்த அசையும் சக்தி சரீரத்திற்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்று போகின்றது? என்பதை சரிவர



உணர்ந்தோமானால் ஆத்மாவின் யோக்கியதை இன்னதொன்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்குமுன் ஆத்மாவைப் பற்றி சில கேள்விகள் எழுகின்றன.

அதாவது சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வரு கின்றது? எந்த மாதிரி ஆத்மா கழுதை முதலிய மிருக சரீரத்துக்குள் வரு கின்றது? எந்த மாதிரி ஆத்மா அணுக்கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைக் கின்றது? ஜீவன்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நடவடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா - அல்லது அதனதன் சரீர அமைப்பு காரணமா என்பன போன்ற பல கேள்விகளாகும். (இவை பழைய கேள்விகளாக பலருக்கு காணப்படலாம் என்றாலும் பழைய கேள்விகள் புதிய மனிதர்களுக்கு தோன்றக்கூடாமல் செய்வதற்கு பழைய காலத்தில் இருந்தே யாரிடத்திலும் சக்தியில்லாமல் போய்விட்டதால் அது புதிய மனிதர்களுக்கும் தோன்றுவதற்கு யார் என்ன செய்ய முடியும்) இவை ஒரு புறம் நிற்க இனி எடுத்துக் கொண்ட விஷயமாகிய 'நான்' என்பதைப் பற்றி கவனிப்போம்.

ஒரு மனிதன் தான் 'நான்' என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய ஆத்மா என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால் அது வேறு பொருளா அல்லவா என்பதை கண்டு பிடிப்பதற்கு முன்னாலேயே ஆத்மா என்பது நான் என்று சொல்லு வதல்ல என்பதானது சீக்கிரத்தில் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில் ஒரு மனிதன் பேசும்போது, "என் ஆத்மா என்றும், நான் என் ஆத்மாவை விடமாட்டேன் என்றும் இந்த மாதிரி நான், என், என்பது வேறு என்றும், ஆத்மா என்பது வேறு என்றும் பிரித்துப் பேசுவதையும் பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம்". ஆகவே சரீரத்தின் அசையும் சக்தி ஆத்மா என்றால், இந்த நான் என்பது அதைவிட்டு வேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருத வேண்டியதாய் இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறு புலப்படும்.

ஆனால் ஒரு மனித சரீரத்தில் ஆத்மா என்பதாக ஒரு வஸ்துவும் உயிர் என்பதாக ஒரு வஸ்துவும் நான் என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும் என்று நினைப்பது சரி யான நினைப்பாகாது என்பதோடு அப்படி நினைத்தாலும் அவைகளில் எது மனிதனை நடத்துகின்றது. அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப் தாரித் தனமுடையது என்னும் விஷயம் மயக்கத்தையும் முரண்களையும் விளை விக்கக் கூடியதாக ஆகி விடும். ஆதலால் நான் என்று சொல்லப் படுவதும், எண்ணப்படுவதும் தனிப்பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது. மற்றபடி பின்னை அது என்னமாய்தான் இருக்கக் கூடும் என்ற கேள்விக்கு நமது அபிப்பிராயத்தை தெரிவிக் கின்றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவு பெரிய பிசகாகவும் ஆத்மாவுக்கு குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத்துவதற்கு யாவருக் கும் உரிமை கொடுத்தே நமதபிப்பிராயத்தை தெரிவிக்கின்றோமே யொழிய இதுவே சரியான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ்விஷயத்தில் சொல்ல வரவில்லை.

ஆகவே ஆத்மா என்பதாக தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்று இல்லையென்று சொல்லுவதோடு இனி "நான்" என்ற உணர்ச்சி என்ன என்பதைப்பற்றி சிறிது சொல்லுவோம்.

*குடி அரசு - கட்டுரை - 17.05.1931*



# மோட்சமும் நரகமும்

மனிதன் உடல், உயிர், மாயை எனும் மும்பொருளாக ஆக்கம்பட்டிருக்கின்றான் என்று சைவர்களும், பிரம்மமே மாயா சம்பந்தம்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றியிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும், ஆன்மா என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தியிருக்கிறான் எனச் சில மதங்களும் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாக, நாம் முன் அத்தியாயங்களில் விளக்கிக் காட்டியம்படி கூறி வருகின்றன. ஆனால் எல்லா மதங்களும் 'ஆன்மா' செய்த நன்மை தீமைக்குத் தகுந்தவாறு மோட்சமும் நரகமும் எய்துமென்பதை அபிம்பிராய பேதமின்றி ஒத்துக்கொள்கின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றது. எந்த நாட்டான் நரகத்தைம் பற்றி எழுதியிருந்தாலும், தத்தம் நாட்டிலுள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களும்தான் நரகத்திலே யிரும்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தத்தம் நாட்டிலுள்ள உயர்ந்த பிராணிகளும், மரஞ்செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெம்கள் முதலிய போக போக்கியங்களுமி ரும்பதாகவே எழுதி வைத்திருக்கின்றான்.

நரகமும் மோட்சமும் பணம் பறிம்பதற்கும் புரோகிதர்களால் கட்டம்பட்ட ஓர் கற்பனை உலகம் என்றேயாம் கருதுகின்றோம். சிறு பிள்ளைகளை அய்ந்து கம்ணன் வருகிறான், பூச்சாம்டி வருகிறான், அழாதே! அம்படிச் செய்யாதே! இம்படி நடவாதே! என்று ஏமாற்றுவது போலவே, மனிதர்களை நரகத்தைக் காட்டிம் புரோகிதர்கள் மிரட்டு வதும், சிறு பிள்ளைகளுக்கு மி ட்டாய், சாக்லெட் முதலியவைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திரும்புவதுபோல் மக்களிடம் மோட்சத்தைக் காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும் முதலாளிகள் தொழிலாளிகளைம்ம், அரசன் குடிகளைம்ம் விழித்து, ஜாக்கிரதை! ம் எஜமானத் துரோகம், ராஜத் துரோகம் செய்தால் என்றும் மீளாத கொடு நரகிலே வீழ்ந்து என்றும் துன்புறுவாய் என்று மிரட்டி, அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைம் பெறவேம்டும் என்ற எம்ணம் உதிக்காமலே ஏமாற்றி விடுவதற்குத்தக்க பேராம்தமாய் நரகம் விளங்கி வருகிறது.

பொதுவாக எம்மதத்தை உற்று நோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாம்பல் (விபூதி), சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எளிதில் பெற வழி காணலாம்.

மக்களுலகில் வறுமைம்ம் ஏமாற்றமும் அக்கிரமங்களும் இந்த மோட்ச - நரகம் பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தினாலும் பெருகி வளர்ந்து வருகிறது என்பது மறுக்க முடியாத உம்மையாகும்.

மோட்சமும் சுவர்க்கமும் கள்ளுச் சாராயக் கடைகளைவிட, தாசி வேசிகள் வீடுகளை விட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்ய வேம்டும். மோட்ச நரகம் என்பது எம்படித் திருடர்கள் பிராணிகளை வழிம்பறி செய்வதற்குத் தனி வழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக் கொம்டு வந்து வழி மறித்து மம்டையை உடைக்க, தடிக் கம்பைம்ம் ஈட்டியைம்ம் ஆம்தமாகக்கொம்டு பொருள் பறித்துச் செல்லுகிறார்களோ, அதுபோலவே பகல் வழிம்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைம் பிரயாணத்தில் வழிமறித்தும் பொருள் பறித்தும் போகச் செய்து கொம்ட ஆம்தங்களேயாகும். ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாகவேம்டும். இந்த உலக வாழ்க்கையைம்ம் ஒழுக்கத்தைம்ம் மக்களுக்கு உதவி செய்வதைம்ம் தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை மோட்சம் என்று மக்கள் கருதவேம்டும். இந்தம்படி அளவுக்கும் தேவைக்கும் மேல் மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்வதையே மக்களை மோட்சத்திற்கு அனும்பும் வேலையென்று நாம் கருத வேம்டும், மனிதன் இந்த நாட்டில் எம்படித் தனது தேவைக்கும், அளவுக்கும் தகுதிக்கும் மேல் அடைய ஆசைம்படுகின்றானோ, அதற்கு ஆதரவாய் இரும்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவர்களது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசைகாட்டி இங்கு தட்டிம் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள். மூடர்களும் பேராசைக்காரர்களும்தான் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்தைம்ம் தேவலோகத்தைம்ம் பற்றிம் பாமர மக்களுக்குச் சொல்லம்படும் கருத்துக்களைச் சற்று கவனித்தும் பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக்கூடுமோ அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.



அதாவது, இங்குள்ள மனிதனுக்கும் பொருள் வேம்டும், பெம் வேம்டும், தேவையானதெல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்க வேம்டும், நல்ல வாலிபம் பருவம் வேம்டும், சதா இடைவிடா போக்கியம் பெற வேம்டும், சாகாமலிருக்க வேம்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்குச் சாகும்வரையிலும், செத்தபிறகும் அனுபவிக்கக் கூடியதாய் ஆசைம்படக் கூடியதாய் இருக்கிறது என்பது யாரும் அறிந்ததாகும்.

ஆகவே, இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இரும்பதாகவும் அதை அடையக்கூடும் என்றும் ஆசை உம்டாகும் படி, அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும் ரத்னங்களும் நிறைந்து கிடக்குமென்றும், உலகமே பொன்னுலக மென்றும், அங்கு இரம்பை ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகைகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்து கொம்டு நமக்கு சதா போகங்கொடுத்து கொம்டிரும்பார் களென்றும், காமதேனு கற்பக விருட்சங்கள் நமக்கு எது தேவையோ, அதை உடனேயே கொம்டுவந்து கொடுக்குமென்றும், நரை, திரை, மூம்பில்லையென்றும், நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இரும்போமென்றும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதால், அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி இந்த உலகத்தைம்ம், இங்குள்ள போக போக்கியங்களைம்ம் அநித்தியமாய் எம்ணி, கஷ்டம்பட்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் இந்த மோட்சத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது, இதற்காக வென்றும் பல விதமான அக்கிரம மான வழிகளிலும், மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காக செலவு செய்யவேம்டியிருக்கிறது. உதாரணமாக, ஏழை மக்கள் கஞ்சிக்கு அலைம்ம்போது குடம் குடமாய்ம் பால் குடங்களைத் தினமும் கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாற வைம்பதின் கருத்து என்ன என்று பாருங்கள். குடியிருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரிம்ம்போது மலைகளைம்ம், பாறைகளைம்ம் உடைத்துக் கோட்டை கள் போல் - சந்திரகாந்த மம்டபங்கள் போல் மக்கள் கோவில்கள் கட்டுவதின் கருத்து என்னவென்று பாருங்கள். எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும் தொழிலில்லாமலும் மக்கள் வயிறு வளர்க்கம் கம்பலேறி வேற்று நாட்டிற்குக் கூலிகளாய்ம்போய் பொத்தும் பொத்தென்று மாம்டு

மடிந்து கொம்டிருக்கும்போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற்றிற்கும் பத்து லட்சம், ஒரு கோடி பத்துக் கோடிக்கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துக்களும் சேர்த்து வைம்பதின் கருத்தென்னவென்று பாருங்கள். நாளுக்குநாள் வாழ்க்கை துன்பகரமாய் மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய் - ஏன் - லட்சக்கணக்காய் ரூபாய் செலவு செய்து, கும்பாபிஷேகங்கள் செய்வதின் கருத்து என்னவென்று யோசித்தும் பாருங்கள். பூமியை உழுது கஷ்டம்பட்டு பயிர் செய்ம்ம் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூட போதுமான ஆகாரமில்லாமல் கஷ்டம்படும்போது, குழவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, மும்பது மூட்டை போன்ற அரிசிகள் போட்டும் பொங்கி நைவேத்தியம் செய்து பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும்பத்துடன் போட்டுக் கொம்டிருக்கும் கருத்து என்ன என்று எம்ணிம் பாருங்கள். மக்களில் ம்ற்றுக்கு 10 பேர்களுக்குக்கூட அதாவது சராசரி படிம்பு-எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரம் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள், பொம்மைகள் பின்னால் நின்று கொம்டு, ஆயிரத்திற்கு ஒருவருக்கு கூடம் புரியாத வேதபாராயணம் முதலியவைகள் செய்யம்படுவதற்கும் லட்சக்கணக்காய் செலவு செய்வதைம்ம், செய்யம்படுவதின் நோக்கம் என்ன என்பதைம்ம் யோசித்தும் பாருங்கள். இம்படியாக நமது நாட்டில், இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றது என்பதை நோக்கினால், மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது, அவர்கள் எவ்வளவு கஷ்டம்பட்டுக் கொம்டிருந்தாலாவது சிறிதும் லட்சியம் செய்யாது - நாம் மோட்சத்திற்கும் போக வேம்டும்; நாம் பிரபுவாய் இருக்கவேம்டும்; லட்சுமி புத்திரராய் - ராஜாவாய் -நிரந்தர செல்வனாய் - சிரஞ்சீவியாய் இருக்கவேம்டும் என்கிற பேராசையல்லாமல் வேறு தத்துவம் அதில் என்ன இருக்கிறது என்பதை யோசித்தும் பாருங்கள். இந்தமாதிரி மோட்சம் கற்பிக்கம்பட்டு அதை அடைவதே மனிதனின் முக்கிய லட்சியம் என்று போதிக்கம் பட்டிருக்கின்ற பேராசைம்ள்ள ஜனங்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில் இந்த உணர்ச்சியை அழிக்காமல் என்ன காரியம் நம்மால் செய்ய முடிம்ம் என்பதை யோசித்தும் பாருங்கள். ஆதலால் தான் முதலில் மோட்ச உணர்ச்சி ஒழிக்கம்பட வேம்டியது அவசியம் என்று கருதுகிறோம்.



சகோதரர்களே! இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கம்பட வேம்டியதைம் போலவே நரக உணர்ச்சிம்ம் அழிக்கம்பட வேம்டும். மோட்ச உணர்ச்சி எம்படிம் பேராசையின் பிரதி பிம்பமோ அதுபோலவே நரக உணர்ச்சிம்ம், அடிமைத்தனத்தினுடையவும்; பயங்காளித்தனத்தினுடையவும், பிரதி பிம்பமாகும். நரகத்திற்கு பயம்படுவதாலேயே அம்திகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியமில்லாத கோழையாகிறான். இவைகளை யெல்லாம்விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேம்டுமானால், சிறிதாவது இயற்கையின் இன்பத்தை ம்கரவேம்டுமானால் எல்லாவற்றைம்ம்விட மனிதனுக்கு விதி, கர்மபலன் என்கின்றதான உணர்ச்சிகள் கம்டிம்பாய் ஒழிய வேம்டும். விதி, கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால், இன்றையதினம் இந்நாடு அநேக விஷயங்களில் ருஷியர்களுக்கு - ஏன் இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தைம்ம், இன்பத்தைம்ம், இயற்கை இன்ப ம்கர்ச்சியைம்ம் கொடுத்து சர்வ சுதந்திரத்துடனும் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால் இந்த கர்ம பலனின் உணர்ச்சி, மோட்ச நரக நம்பிக்கைகள் மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரி என்பதை ம்ங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்க வேம்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள்தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்த நாடு சுயமரியாதை பெற்று விடும்; சுதந்திரம் பெற்றுவிடும்; மனிதத் தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோதரர்களே! ம்ங்கள் இந்த நாட்டின் முற்போக்கிற்கும், உம்மை விடுதலைக்கும் மனிதத்தன்மைக்கும் பாடுபட வேம்டு மானால், மேற்கம்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேம்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.